287
குண்டூசி
ஜூலை 52.....எட்டு அணா
மூன்று
பிள்ளைகள்
ஜெமினி தயாரிப்பு

ரஸிகர்களுக்கோர்
ஹாஸ்யக்கலை
விருந்து!
விஜயாவின்
கல்யாணம்
பண்ணிப்பார்
டைரக்ஷன்... ப்ரசாத்
தயாரிப்பு.... நாகிரெட்டி... சக்ரபாணி

பொது இன்பங்கள்

நம் நாட்டில் நடுத்தரக் குடும்பத்தாருக்கு ஓய்வு நேரத்தில் முக்கியமான மகிழ்ச்சிகரமான பொழுதுப் போக்கு ஸினிமாதான். ஸினிமா குடும்பத்தில் எல்லோரும் சக்திக்குத்தகுந்த செலவில் ரஸிக்கக் கூடியது.

இன்னும், எல்லோரும் ஓய்வு நேரங்களில் குறைந்த செலவில், ரஸித்து, மகிழ்ந்து அனுபவிக்கக் கூடியது ஒன்று உண்டு. அதுதான் ஒரு கப் சூடான 'டீ'. அது உத்சாகத்தையும் புத்துயிரையும் கொடுக்கிறது.

டீ

உங்களுக்கு அதிக இன்பத்தை கொடுக்கிறது.

ஸெண்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

134134

விளம்பரதாரர்களே

நீங்கள் விளம்பரம் தரும் பத்திரிகைபற்றிய உண்மையை உணருங்கள் !

ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டியது மிக அவசியம்.

125 பிரதான பத்திரிகைகளுக்கு மேலாக இப்போது சர்குலேஷன் ஆடிட் பீரோவில் அங்கம் வகிக்கின்றன—இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் தேசிய விளம்பரத் திட்டத்தை பரிபூரண அம்சத்தில் நிறைவேற்றப் போதுமானது. இவைகளின், பத்திரிகை விற்பனைக் கணக்கு எல்லா அம்சத்திலும் இந்த A. B. C. யின் ஆடிட்டர்களால் சரி பார்க்கப்பட்டு ABC மெம்பர்களுக்கு அரை வருஷ ரகசிய சர்டிபிகேட்டுகள் அனுப்பப்படுகிறது.

நீங்கள் விளம்பரம் செய்யும் பத்திரிகையைப்பற்றிய உண்மையை நீங்கள் அறிய விரும்பினால், இன்றே A. B. C. மெம்பர் ஆகுங்கள் !

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லி-ட்.,

முபாரக் மன்ஸில், அபோலோ தெரு, கோட்டை, பம்பாய்.

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும், விளம்பர ஏஜெண்டுகளும் ஏற்கனவே A. B. C.யின் மெம்பர்களாக இருக்கிறார்கள்.

விளம்பரதாரர்கள் :

அல்லிடு போட்டோ கிராபிக்ஸ் லி-ட்., இ. எம். ஆல்காக் & மொஹொட்டா லி-ட்., ஆஸ்ப்ரோ லி-ட்., இங்கிலாந்து. அட்லாண்டிக் (ஈஸ்ட்) லி-ட்., பால்மர் லாரி & கோ லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ [இந்தியா] லி-ட்., பர்மா ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் & டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் [இந்தியா] லி-ட்., ஸெண்ட்ரல் டீ போர்டு, கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ [இந்தியா] லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரிஸ் [இந்தியா] லி-ட்., கோத்ரெஜ் & பாய்ஸ் மானுபாக்சரிங் கோ லி-ட்., இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் [இந்தியா] லி-ட்., இம்பீரியல் டுபாக்கோ கோ ஆப் இந்தியா லி-ட்., இந்தியா டயர் & ரப்பர் கோ [இந்தியா] லி-ட்., லிவர் பிரதர்ஸ் இந்தியா லி-ட்., லிப்டன் லி-ட்., மூல்லர் & பிப்ஸ் [இந்தியா] லி-ட்., நாஷனல் கார்பன் கோ [இந்தியா] லி-ட், பார்லி பிராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய் கராச்சி, வாலா ஷாலிமர் பெயின்ட், கலர் & வார்னீஷ் கம்பெனி லி-ட்., டாடா ஆயில் கோ லி-ட்., வால்கார்ட் பிரதர்ஸ்.

விளம்பர ஏஜெண்டுகள் :

அட்வர்டைஸிங் & ஸேல்ஸ்ப்ரமோஷன் கோ, எவரஸ்ட் அட்வர்டைஸிங் லி-ட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க். க்ரீன்ஸ் அட்வர்டைஸிங் சர்விஸ் ஏஜெண்ட்ஸ், டி. ஜே. கீமர் & கோ லி-ட்., லின்டாஸ் லி-ட்., நேஷனல் அட்வர்டைஸிங் சர்வீஸ் லி-ட்., பிரஸ் ஸிண்டிகேட் லி-ட்., ஷில்பி லிமிடெட், ஸிஸ்டாஸ் லி-ட்., எப். டி. ஸ்டுவர்ட் லி-ட்., எல். ஏ. ஸ்ட்ரொனுல் & கோ [இந்தியா] லி-ட், ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி, ஈஸ்டான் லி-ட்.,

பிரசுரித்தவர்கள் : "குண்டூசி"

ABCயின் தணிக்கை பெற்ற விநியோகம் கொண்ட பத்திரிகை.

புதியதும் சிறந்ததுமான இந்த அழகிய "டிரை-சைக்கிளு"க்கு ஆர்டர் செய்யுங்கள். விலைகள் ரூ. 25/- லிருந்து ரூ. 15/- ஆகக் குறைக்கப் பட்டுள்ளது ரயில்வே செலவுகள் சுமார் ரூ. 1/8. இப்பொழுதே ஆர்டர் செய்து உங்கள் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனைத் தெரிவிக்கவும்.

JUPITER TRADING Co.
P. Bag 16602, **Calcutta-4.**

இனாம்

ஸில்க் ஸூட்டிங்ஸ்

7 கஜம் × 27"

உங்கள் அனைவருக்கும் மாதம் ரூ. 200 முதல் ரூ. 300 வரை போனஸுடன்கூட, இனாமாக அளிக்கிறோம். எல்லாம் நீங்கள், எங்களுக்காக, சுற்று வட்டாரங்களில் செய்து கொடுக்கும் சிறு வேலைகளுக்காகத் தான். விபரங்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

LION FABRICS MILLS
LUDHIANA.

வினாயகர்

V. ARUMUGA CHETTY

சுருட்டுகள்

ஷெல் பிராண்டு

TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18, அண்ணா பிள்ளை தெரு, சென்னை 1

N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

நீங்கள்

சந்தாதாரராய்

சேர்ந்துவிட்டீர்களா ?...

இல்லையேல்

இன்றே சேருங்கள் !

★

"குண்டூசி"

காரியாலயம்

சென்னை—1.

பரிசு ரூ. 300

மாய மோதிரம்

மிக மிக சக்தி வாய்ந்தது. ரொம்பவும் கடினமான எண்ணமும் கைகூடும். விரும்பும் பெண்ணை மணக்கலாம். பரீக்ஷை உத்தியோகம், வழக்குகள், போட்டிப் பரிசு. எதிலும் வெற்றி பெறலாம். மலடிக்கும் குழந்தை பிறக்கும். கஷ்டங்களைப் போக்கி, உங்களுக்கு ஒரு மெய்க் காப்பாளனாய் துணைபுரியும். விலை 8 அணா தான். அதிக சக்தி வாய்ந்த எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ 1—8—0.

பலனில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 பரிசளிக்கப்படும்.

BENGAL MAGIC HOUSE
Sitla Temple (D-200/15) Amritsar.

குண்டூசி

ஜூலை, 1952.

இந்த ஊசியில்

எந்த வேளையில் பிறந்ததோ ? ... 5
படவுலகில் புது முயற்சிகள் ... 7
சென்னை மேடையில் சென்ற மாதம் 8
வேலைக்காரன் (பட விமர்சனம்) ... 9
காதல் (பட விமர்சனம்) ... 10
குமாரி வனஜா (மூவர்ணப் படம்) 13
மாஸ்டர் சேது (ஆர்ட் படம்) ... 14
மாஸ்டர் சேது (வாழ்க்கை வர்ணனை) 15
நுனிப்புல்—"வெட்டுக்கிளி" ... 20
நாடகங்கள் நமக்குத் தேவையா! ... 23
மூன்று பிள்ளைகள் (படக் காட்சிகள்) 29
குண்டூசியைக் கேளுங்கள் ... 31
வேலைக்காரன் (படக் காட்சிகள்)... 38
இது செய்தி 40
"ஹரிகோடா இயக்கம்
தொடங்குவோம்" ... 44
"மக்களுக்கு சினிமா
மிக அவசியம்" ... 46
செய்திப் படங்கள் 47
பொதுஜனம் பேசுகிறது 51
புஸ்தகப் பொழுது 56
மாயவரம் மைதிலி (சிறுகதை) ... 59
ஜி. வரலக்ஷ்மி (ஆர்ட் படம்) ... 63
வி. ஆர். ராஜகுமாரி (ஆர்ட் படம்) 64
நடனம் ஆடினர் ... 66
பிரம்மலோகம் ... 74

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை தனி நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஜூலை, 1952

பட்டை—5 ஊசி—10 பிரதி—58

எந்த வேளையில் பிறந்ததோ?

ஜோதிடத்திற்கும், ஜோதிடர்களுக்கும் சமீப காலமாகவே ஏக கிராக்கி. அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் ஜோதிடப் பகுதியை வெளியிடுகின்றன. தினப்பலன், வாரப்பலன், மாதப்பலன், வருஷப் பலன் என்றெல்லாம் ஜோதிடர்கள் வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதோடு நிற்பதில்லை; ஜவஹர் முதல் ட்ரூமன்வரை, சுண்டைக் காய் முதல் வெண்டைக் காய்வரை, கடுகு முதல் கப்பல்வரை, எந்த மனிதரையும், எந்தப் பண்டத்தையும், எந்த விஷயந்தையும் ஜோதிட சாஸ்திரத்திற்கு புறம்பாக விட்டுவைக்கவில்லை. இந்த பூவுலகிற்கே அவர்கள் ஜாதகம் கணித்து வைத்திருக்கிறார்கள் என்றால், அதிகம் சொல்வானேன்!

இருந்தபோதிலும், ஒரே ஒரு விஷயம் மட்டும் அவர்கள் பார்வைக்குத் தப்பிவிட்டது!. அதுதான் சினிமா உலகம். அது ஜோதிடர்களிடம் இன்னும் அகப்பட்டுக் கொள்ளவில்லை. பூவுலகத்திற்கே ஜாதகம் கணித்துள்ள அவர்களால் சினிமா உலகிற்கு இன்னமும் ஜாதகம் கணிக்க இயலவில்லை. ஒருவேளை, இத்தொழில் பிறந்த வருஷம் மாதம், தேதி, நேரம் இவைகளை அவர்களால் நிர்ணயிக்க முடியவில்லையோ என்னவோ!

இதற்காக அவர்கள் சிரமப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு தேசத்திலும் இக்கலை உருப்பெறுவதற்காக பட்டிருக்கும் அல்லல்களையும், தற்போது அது இருக்கும் நிலைமையையும் வைத்துக் கொண்டு பார்த்தால், இத்தொழில், ராகுகாலம், எமகண்டம், மரணயோகம், செவ்வாய்கிழமை தேய்பிறை, மார்கழி மாதம் இப்படி ஆகாத விஷயங்கள் அவ்வளவும் ஒன்று கூடிய ஒரு மஹா கெட்ட நாளிலேதான் இந்தத் தொழில் பிறந்திருக்க வேண்டும் என்று ஜோதிடம் தெரியாதவர்கள்கூட கூறிவிடுவர்!

தற்போது சினிமாப் படத் தொழிலுக்கு காசி க்ஷேத்திரமாக விளங்கும் ஹாலிவுட் நகரத்திற்கு தபால் ஆபீஸே கிடையாது! அது ஒரு பெருங் கதை. அமெரிக்காவில் முதன் முதலில் சினிமாப் படம் தயாரிக்கத் தொடங்கிய போது அதற்கு சமூகத்தின் பல மூலைகளிலிருந்தும் கண்டனங்களும், எதிர்ப்புகளும் கிளம்பின. மத குருமார்கள், "சினிமா பர சுகத்திற்குப் பாதகம் விளைவிப்பது; மத விரோதமானது" என்று கூறி எதிர்த்தனர். மூடநம்பிக்கையுள்ள ஒரு பகுதி மக்கள், ஏவல், பில்லி, சூனியம் போன்றவைகளுடன் சினிமாவைச் சம்பந்தப் படுத்தித் தாக்கினர். சர்க்காரோ, சினிமாவைச் சட்ட விரோதமானதாய் கருதி தங்களாலான இடையூறுகளவ்வளவையும் செய்து வந்தனர். இவ்வளவும் சேர்ந்து, அங்கு சினிமாவுக்கு சமாதி கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அந்த நிலைமையிலும் கூட மனம் குன்றிவிடவில்லை அந்த சினிமாப் பிதாக்கள். சமூகத்திற்கும் சர்க்காரின் சட்டங்களுக்கும் புறம்பான ஒரு காட்டிற்குச் சென்று குடியேறி—தற்போது ஹாலிவுட்டாக விளங்கும் அங்கு ரகஸியமாகப் படத் தயாரிப்பைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். பாவம். அந்த சினிமாப் பிதாக்கள் சமூகத்தாரின், சர்க்காரின் ஆதரவிற்காகப் போராடவில்லை; எதிர்ப்பைச் சமாளித்துக் கொள்ளவே போராடி வந்தனர். நாளா வட்டத்தில் சினிமாவுக்கு எதிர்ப்புக் குறைந்து மக்களின் ஆதரவு ஏற்படவே அது வேரூன்றி நிலைத்து விட்டது. அவர்கள் ஸ்தாபித்த இக்கலைத் தொழில் இன்று உலகம் பூராவிலும் வியாபித்திருக்கிறது.

ஹாலிவுட்டைப் பின்பற்றி சினிமாத் தொழில் ஒவ்வொரு தேசத்திலும் வேரூன்றத் தொடங்கியது மாதிரியே, ஒவ்வொரு தேச சினிமாத் தொழிலுக்கும் ஹாலிவுட் சினிமாவுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் ஏற்பட்டு வருவது ஒரு துரதிருஷ்டமான உண்மையாகும்.

இந்தியாவிலும் சினிமாத் தொழில் தானாக வந்து குடியேறியது. சென்ற 40 வருஷ காலத்தில் தட்டித் தடுமாறி விழுந்து, அது தானாகவே முன்னேறியிருக்கிறது. வரி விதிப்பிற்கு சினிமா ஒரு நல்ல சாதனம் என்பதை மட்டும் நம் சர்க்கார் உணர்ந்துகொண்டு, இத்தொழிலின் மீது அளவுக்கும், நியாயத்திற்கும் மீறிய வரிகளைச் சுமத்தி வைத்திருக்கின்றனர். இத்தொழில் வளர்ச்சிக்காக இந்திய சர்க்காரோ மாகாண சர்க்கார்களோ எவ்விதத்திலும் உதவவில்லை. இருந்த போதிலும், இத்தொழில் மளமளவென வளர்ந்து, தற்போது இந்தியாவின் முக்கியத் தொழில்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது. உலக சினிமாத் தொழிலிலும்கூட இந்தியா பெருமைப் படக்கூடிய ஒரு ஸ்தானத்தை வகித்து வருகிறது.

இந்திய சினிமாத் தொழில், பிலிம்கள், இயந்திரங்கள், ரஸாயனப் பொருள்கள் யாவற்றிற்கும் பிறநாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கும் நிலையில்கூட இவ்வளவு பெருமைப் படத்தக்க நிலைமையை அடைந்திருக்கிறதென்றால், அதற்கு இத்தொழில் சம்பந்தப்பட்டோரின் தளராத சுய முயற்சியும், ஜனங்களின் உத்ஸாகமான ஆதரவும் தான் காரணங்களாகும்.

மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்ற ஒரு மாபெரும் தொழிலாய் விளங்கும் சினிமா பற்றி இந்திய சர்க்காரின் கொள்கைதான் என்ன?

இன்று வரையில் அது பெரும் புதிராகவே இருந்து வருகிறது. சினிமாத் தொழிலை வேண்டாமென்று கூற அவர்களுக்கு தைரியமில்லை; வேண்டும் என்று ஆதரிக்க உத்ஸாகம் இல்லை. மதில்மேல் பூனை மாதிரி இருந்துகொண்டு, வரிகள் மூலம் சர்க்கார் இந்தொழிலின் ரத்தத்தை உறிஞ்சி வருகின்றனர்.

சினிமா உலகில் கொந்தளிப்பு அதிகரித்துள்ளது காரணமாக, இந்திய சர்க்கார் ஒரு விசாரணைக் கமிட்டியை ஏற்படுத்தி, தற்போதைய சினிமாத் தொழிலின் உண்மை நிலையை ஆராயும்படிச் செய்தனர். 'சர்க்காரின் கொள்கை இத்தொழில் விஷயத்தில் புதிய திசையை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டதாக' இத்தொழில் சம்பந்தப் பட்டவர்கள் உச்சி குளிர்ந்து போயினர்.

ஆனால், நடந்ததென்ன! விசாரணைக் கமிட்டியின் யாதாஸ்தை சர்க்கார் வாங்கிப் போட்டுவிட்டு, இன்றுவரை சும்மாவே இருந்து வருகின்றனர். "சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்" என்ற கூச்சல் இப்பொழுது பலத்து வருகிறது.

சமீப காலமாய், இந்திய சர்க்கார் சினிமா விஷயத்தில் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதாய் தெரிகிறது. தணிக்கை போர்டை அகில இந்திய முறையில் அமைத்ததும், சர்வ தேச பிலிம் விழாவொன்றை நடத்தி வைத்ததும் படத் தொழிலினருக்கு பிரமாதமான சந்தோஷத்தையும் நம்பிக்கையையும், அளித்திருக்கிறது.

சென்னை மாகாண சர்க்கார்கூட சினிமாக் கலை விஷயத்தில் சில நல்ல காரியங்களைச் செய்ய முன்வந்தனர். ஸ்ரீ. குமாரசாமி ராஜா பிரதமராயிருந்த சமயத்தில், வருஷா வருஷம் நல்ல படங்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டத்தை ஏற்படுத்தினர். இதற்கென சினிமாக் கழகம் ஒன்றும் நிருவப்பட்டது. தென்னிந்திய சினிமாத் தொழிலுக்கு நல்ல காலம் ஆரம்பமாகிவிட்டதாக சினிமாத்

தொழிலினரும், ரஸிகர்களும் பூரித்துப் போனூர்கள்.

ஆனல், இந்த சந்தோஷமெல்லாம் ராஜாஜி பிரதமரானவுடன் அல்ப சந்தோஷமாக மாறிவிட்டது. உணவு பங்கீட்டை ஒழித்ததன் விளைவாக, வயிருர உண்டு, மனமார எல்லோரும் அவரை வாழ்த்த வேண்டிய சமயத்தில், மக்களில் ஒரு பகுதியினர் அதிருப்தியும் அவநம்பிக்கையும் அடையும்படிச் செய்துவிட்டார் அவர். ஸ்ரீ ராஜா ஏற்படுத்திய சினிமாப் பரிசுத் திட்டத்தை ராஜாஜி முதல் வேலையாக ரத்துசெய்து விட்டார். இந்த திட்டத்தை ரத்து செய்து விடுவதன் மூலம் சர்க்காருக்கு பிரமாதமான செலவு மிச்சமாகிவிடும் என்பதில்லை. அப்படியிருந்தாலாவது நாம் சமாதானம் அடையலாம்.

ராஜாஜி இத் திட்டத்தை மாற்றியதோடு நில்லாமல், "சினிமாப் பார்க்காதே" என்று மக்களுக்கு உபதேசம் செய்வதிலிருந்து, 'அவருக்கு சினிமா மீதுள்ள வெறுப்பு காரணமாகவே இத் திட்டத்தை மாற்றியிருக்கிருர்' என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

திறமைக்குப் பேர்போன ராஜாஜி பிரதமரானதும், மற்றவர்களைப் போலவே சினிமாத் தொழிலினரும் தங்களுக்கும் திட்டமான நல்ல பலன் ஏதாவது ஏற்படும் என்றுதான் எதிர்பார்த்தனர். ஆனல் பரிசுத் திட்டம் மாற்றப்பட்ட பின்னர், சினிமா சம்பந்தமாக அவரிடம் சாதகமான காரியங்களை எப்படி எதிர்பார்க்க முடியும்! 'சாதகம் ஏற்படாவிட்டாலும் போகட்டும்; பாதகமாவது ஏற்படாமலிருக்க வேண்டுமே' என்று இப்பொழுது இத்தொழில் வட்டாரங்களில் கவலை தோன்றியிருக்கிறது.

ராஜாஜிக்கு சினிமாப் பார்க்கப் பிடிக்காமலிருக்கலாம்; ஆனல் கோடிக்கணக்கான மக்கள் அதை ஆவலுடன் பார்த்துக் களிக்கின்றனர். ஒருவனுக்குச் சாப்பாடு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பொழுதுபோக்கும். தற்போது மற்றெல்லாவற்றையும்விட சினிமாவே சிறந்த பொழுது போக்காக இருப்பது மறுக்க முடியாத விஷயம். ஆதலால், ராஜாஜி மக்களின் நலனைக் கருதி, சினிமாவுக்கு முந்தின சர்க்கார்களை விட அதிக ஆதரவு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிருேம்.

பட உலகில் புது முயற்சிகள்

சென்னை, சைதாப்பேட்டையில் முரளி பிலிம் புரொடக்ஷக்ஸ் என்ற படக்கம்பெனி ஒன்று ஆரம்பமாகியுள்ளது இவர்கள் "ஏழை மகள்" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிருர்களாம். எஸ். கே. சாரி என்பவர் டைரெக்ட் செய்யப் போகும் இப் படத்தில் என். எஸ். சண்முகப்பா, ஸ்ரீரஞ்சனி, எஸ். கே. சரஸ்வதி ஆகியோர் நடிக்கக் கூடும் என்று தெரிகிறது.

"அம்மா"வைத் தயாரித்து வெற்றி கண்ட அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸார் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் படமாகத் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கிருர்களாம். இக் கதையை ஏராளமான பொருட் செலவில் தமிழ் தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் அவர்கள் படமாகத் தயாரிப்பார்களாம்.

அசோகா பிக்சர்ஸார் தங்கள் அடுத்த படத்திற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து விட்டார்கள். அடுத்தபடி, ஸ்ரீதர் என்பவர் எழுதிய கதையைப் படமாக்கத் தீர்மானித்து, நடிகர்களை ஒப்பந்தம் செய்து வருகிருர்களாம்.

கோ–ஆர்டினேடட் ஸினி புரொடக்ஷன்ஸார் "இல்லரசி"யை தங்களது இரண்டாவது படமாகத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிருர்கள். இம் மாதத்தில் கோவை, ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் படப் பிடிப்பு ஆரம்பமாகுமாம். படத்தில் எஸ் ஏ. நடராஜன் எம். என். நம்பியார், ஏழுமலை, ஆர். மாலதி, ஆர். பாரதி, சகுந்தலா, ஆகியோர் நடிப்பார்களாம்.

ஜெயார் பிக்சர்ஸார், "எஜமானி" என்ற சமூகக் கதையைத் தமிழ்ப் படமாய் தயாரிக்கப் போகிருர்களாம். படத்தை பி. எஸ். ஸ்ரீனிவாஸராவ் டைரெக்ட் செய்வாராம்.

[தொடர்ச்சி 76-ம் பக்கத்தில்]

சென்னை மேடையில் சென்ற மாதம்

சென்ற மாதம் ரொம்பப் பேருடைய மனோரதம் நிறைவேறி விட்டிருக்கிறது. "நல்ல நாடகம் பார்க்க மாட்டோமா!" என்ற நாடக ரஸிகர்களின் மனோரதம் நிறைவேறியது. நாடக ஆசிரியர்-நடிகரான டி. கே. கோவிந்தனின், "கல்கி தலைமையில் நமது நாடகம் நடக்கும் நாள் வருமா!" என்ற மனோரதம் நிறைவேறியது. "நல்ல காரியங்களுக்கு நிதி திரட்ட நமது நாடகக் கலை உதவுமா!" என்று எண்ணியவர்களின் மனோரதம் நிறைவேறியது. இப்படியாகப் பலரது மனோரதமும் நிறைவேறக் காரணமாக இருந்தது டி. கே. கோவிந்தனால் எழுதப்பட்ட "மனோரதம்" என்ற நாடகம் ஆகும்.

ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் சென்ற மாதம் முதல் தேதி நடிக்கப்பட்ட இந்த நாடகம் முதல் தர நாடகமாயிருந்தது. ராயலசீமா பஞ்ச நிவாரண நிதி திரட்ட, அம்பத்தூர் கலா மண்டலியார் இந்த நாடகத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

சாதாரணமான கதைதான் என்றாலும், வசனங்கள் மிகவும் சிறப்பாக இருந்தன. பதத்திற்குப் பதம் வசனம் ஒரே ஹாஸ்யம் தான். தற்கால அரசியல் சூழ்நிலையை மனதில் கொண்டு வசனங்களை மிகவும் ஹாஸ்யமாக எழுதியிருக்கிறார் டி. கே. கோவிந்தன். ஆனால், சிற்சில இடங்களில் ஒரே வசனம் மீண்டும் மீண்டும் வருவதைத் தவிர்த்திருக்கலாம்.

நாடகத்தின் சிறப்புக்கான காரணம் நடிப்பு. நாடகத்தில், 'வாத்தியாரே, வாத்தியாரே' என்று சொல்லிக்கொண்டு, வந்த பட்டணம் சோதாவின் சிஷ்யன் முதல், கதாநாயகனாய் நடித்த என். கண்ணப்பன் வரை அனைவருமே பிரமாதமாய் நடித்தார்கள். என்று சொல்லுவதைவிட கதாபாத்திரமாகவே ஒன்றி விட்டார்கள் என்றே கூறலாம். கண்ணப்பன் வந்த இடங்களில்தான் நாடகம் என்ற நினைப்பே ஏற்பட்டது.

நாடகத்தில் ரொம்ப ரொம்ப நன்றாக நடித்தவர் சிலரில் வீரத் தமிழராக வந்த "பட்டு" ஒருவர். அவர் வாயிலாக கேட்ட வசனங்கள் ஒரு சாராருக்கு நல்ல சூடு கொடுப்பதாக இருந்தது. அவரிடம் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகருக்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன. வில்லனாக வந்த ஓய். ஜி. பார்த்தசாரதி அசல் ரௌடியாகவே தோன்றி ஜமாய்த்து விட்டார். ஜாகிலிங்கமாக கல்யாணம் தாம் ஒரு தேர்ந்த நடிகர் என்பதை நிரூபித்தார். 'உலகு' டி. எஸ். பி., பேயாண்டி, புண்யகோடி ஆகிய பாத்திரங்களில் வந்தவர்களும் நன்கு நடித்தார்கள்.

மொத்தத்தில், சமீபகாலத்தில் இம்மாதிரியான அருமையான நாடகம் ஒன்று நடந்ததே இல்லை. அன்றைய நாடகத்திற்கு 'கல்கி' தலைமை வகித்து, நடிகர்களைப் பாராட்டினார்.

கைதியின் காதல்

அதே தினம் "கைதியின் காதல்" என்ற சமூக நாடகம் சென்னை சௌந்தர்ய மஹாலில் நடந்தது. நாடகத்தை பி. எம். பி. நாடக சபாவின் அங்கத்தினர்கள் நடித்தார்கள்.

சென்ற மாதம் 14, 15, இரு தினங்களிலும் ரஸிக ரஞ்சனி சபாவின் ஆதரவில் டி. கே. எஸ். பிரதர்ஸின் "ஔவையார்" நாடகம் நடைபெற்றது. நாடகம் முற்றிலும் தமிழ் மணம் கமழ்ந்தது. டி. கே. ஷண்முகம் ஔவையாக நடித்தார்; இல்லை அன்று அவர் ஔவையாக மாறிவிட்டார். அவரைப் போல் அந்த வேஷத்தை ஏற்று நடிக்க யாராலும் முடியாது. அவ்வளவு இயற்கையாக, உணர்ச்சியுடன் நடித்தார். மற்ற கம்பெனி நடிகர்களும் நன்றாக நடித்தார்கள்.

தியாகக் குரல்

சென்ற மாதம் 15ம் தேதி, சென்னை ஒற்றவாடைத் தியேட்டரில் "தியாகக் குரல்" என்ற நாடகம் நடந்தது. 1942 ஆண்டு ஆகஸ்ட் புரட்சியைப் பற்றிய நாடகம் இது. "கல்கி" பத்திரிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த 'பரதன்' தலைமையில் நாடகம் நடந்தது. தேசிய இளைஞர் முன்னணி உதவி நிதிக்காக இந்த நாடகம் நடைபெற்றது.

'வேலைக்காரனி'ல் சுப்பய்யாவுக்கு சபாஷ்

மஹாலிங்கம் - வரலக்ஷ்மி படுதோல்வி

ஒரு படத்தில், அது சிறப்பாக இருப்பதற்காக நக்ஷத்திரங்களை நடிக்கச் செய்கிறார்கள். ஆனால், சில படங்கள் நக்ஷத்திர நடிகர்கள் நடிக்காதிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லும்படியாகி விடுகிறது. அப்படிப்பட்ட ஒரு படம்தான் "வேலைக்காரன்" படம் சுவாரஸ்யமாகவே போய்க்கொண்டிருக்கும்போது டி. ஆர். மஹாலிங்கமும் எஸ். வரலக்ஷ்மியும் வரும் சமயங்களில் அலுப்புத் தட்டிவிடுகிறது. அவர்கள் இல்லாமல் இருந்திருந்தால் படம் ரொம்ப நன்றாக இருந்திருக்கும்.

"பல சம்பவங்களை, குழப்பமற்ற முறையில் கொண்டு பின்னப்பட்டுள்ள கதை வேலைக்காரன்." வீரப்பன் தன் எஜமான் மீது பழி வாங்குவதற்காக அவரது சிறு குழந்தையைத் திருடிச் செல்கிறான். அந்த எஜமானரிடம் வந்து சேருகின்றனர், கமலாவும் அவளது தாய் தங்கமும். கவர்ந்து செல்லப்பட்ட குழந்தை மோகன் பெரியவனாகிறான். எஜமானரது அன்புக்குப் பாத்திரமான பெண் கமலாவுக்கும் அவனுக்கும் காதலேற்படுகிறது. மோகன் தன் மகனென்று தெரியாது காதலுக்கு முட்டுக்கட்டை போடுகிறார் எஜமான். இறுதியில், வேலைக்காரன் மூலம் உண்மை வெளியாகி, கதை சுபமாக முடிகிறது.

வசனங்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால் வேலைக்காரன். (மோகன், ஏழைச் சிறுவனுக்காக பச்சாத்தாபப்பட்டு பேசும்போது) "உனக்கு எவ்வளவு ஜீவ காருண்யம்" என்று வசனம் அமைத்திருப்பது பொருத்தமாயில்லை.

படத்தில் மஹாலிங்கம், வரலக்ஷ்மி வருவது, காதல் பண்ணி கல்யாணம் பண்ணிக் கொள்ளவே வருவதுபோல் இருக்கிறது. இருவரது நடிப்பும் சுகமில்லை. பாட்டுக்களும் பிரமாதமாய் இல்லை. நடிப்பின் மூலம் மனதைக் கவருகிறவர் வேலைக்காரனாய் வரும் எஸ். வி. சுப்பய்யாதான். வேலைக்காரனாய் வரும் பொழுதும், பிறகு படிப்படியாக நல்ல நிலைமைக்கு வரும்பொழுதும், அவர் மிக இயற்கையாக நடித்திருக்கிறார். பழிவாங்க தான் கையாண்ட முறையை விளக்கும் கட்டத்தில் அவரது நடிப்பு பிரமாதமாக இருக்கிறது. எஜமானராக வரும் வி. கே. ராமசாமியின் நடிப்பு கன கச்சிதமாய் மிடுக்குடன் அமைந்திருக்கிறது. வில்லன் பாலய்யா வழக்கம் போல் இந்தப் படத்திலும் வெளுத்துக் கட்டியிருக்கிறார்.

நடிகைகளில், தங்கமாக வரும் எம். எஸ். திரௌபதி, இதுவரை அவர் நடித்த படங்கள் எல்லாவற்றையும்விட இதில் நன்றாக நடித்திருக்கிறார். இரண்டொரு இடங்களில் அவரது சோக நடிப்பு உள்ளத்தை உலுக்குவதாக இருக்கிறது. மல்லிகாவாக வரும் மாதுரிதேவியின் நடிப்பைவிட தோற்றம் கவர்ச்சிகரமாய் இருக்கிறது. "இனக் கவர்ச்சி" மிருக நடனம் ஒன்றை அவர் ஆடியிருக்கிறார். விஷம் கொடுத்தது தான்தான் என்று கூறும் கட்டத்தில் நன்றாக நடித்திருக்

[தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்]

"வேலைக்காரன்"

தயாரிப்பு : ஸ்ரீ வள்ளி புரொடக்ஷன்ஸ்

வெளியீடு : நேஷனல் பிக்சர்ஸ்

டைரெக்ஷன்: பி. வி. கிருஷ்ணன்

நடிகர்கள்: டி. ஆர். மஹாலிங்கம், டி. எஸ். பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா, மாதுரிதேவி, எஸ். வரலக்ஷ்மி, எம். எஸ். திரௌபதி, வி. கே. ராமசாமி, கே. ஆர். செல்லம்.

ஸ்டுடியோ : ஏவி. எம்.

நீளம் : 15,417 அடிகள்.

"காதல்"—பானுமதியின் அவியல் கதை!

பரணியின் சாதாரண முயற்சி

தமிழ், தெலுங்கு, ஆகிய இரு பாஷைகளில் வெளி வந்திருக்கும் பரணி பிக்சர்ஸாரின் "காதல்" படத்தின் (தமிழ்ப் பதிப்பு) வர்த்தகக் காட்சி சென்ற மாதம் 14-ந் தேதியன்று சென்னை ஜெயிட்டியில் நடைபெற்றது.

பானுமதியின் சொந்தப் படம் இது. இதைவிட விசேஷமானது—இந்தப் படத்தின் கதை அவராலேயே எழுதப் பட்டது—இல்லையில்லை—தொகுக்கப் பட்டது ஆகும். அவர் பல படங்களில் நடித்திருக்கிறார். தெலுங்குப் பத்திரிகைகளில் பல சிறு கதைகளை எழுதியுமிருக்கிறார், இந்த அநுபவத்தின் பேரிலேயே அவர் இப்படத்திற்கு கதை எழுதத் துணிந்திருக்கிறார், இந்த முயற்சி வரவேற்கத் தக்கதே ஆனால், இது பல கதைச் சம்பவங்கள் ஒன்று சேர்க்கப் பட்ட அவியலாக முடிந்திருக்கிறது.

சுந்தர ராவ் ஒரு பணக்காரர், தன் மகள் லதாவை, தன் தமக்கை மகன் ராஜாவுக்கு மணம் செய்து விடுவதென்றிருக்கிறார். ஆனால், ராஜா மோதி என்ற மலைஜாதிப் பெண்ணைத் தற்செயலாய் சந்தித்து, அவளைக் காதலிக்கிறான்.

மோதியை பரசுராம் என்ற முரடனுக்கு மணம் செய்விக்க பணத்தாசை பிடித்த பெற்றோர்கள் பலவந்தமாய் அழைத்துச் செல்லுகின்றனர். இவ்விஷயம் அறிந்த ராஜா மனமுடைந்து பட்டணம் திருப்புகிறான்.

திருமணத்திற்காகச் சென்ற மோதி, பரசுராமை ஏமாற்றிவிட்டு, சென்னை அடைகிறாள். தெருத்தெருவாய் அலைந்து ராஜாவைத் தேடுகிறாள். கடைசியாக, கண்ணில்பட்ட ராஜா வேறு ஒரு பெண்ணுடன் காரில் செல்லுவதைக் கண்ட மோதி மனமுடைந்து, அவன் எண்ணத்தை மறக்கிறாள். பிறகு அவள் பிச்சை எடுத்துப் பிழைத்து வருகிறாள்.

பரசுராம் மோதியைத் தேடிச் சென்னைக்கு வருகிறான். ஒருநாள் அவளைப் பார்த்ததும், பலாத்காரமாய் இழுத்துப் போக முயற்சிக்கிறான். அதன் விளைவாய் அவன் ஜெயில் தண்டனை பெறுகிறான்.

கிறார். கற்பகமாக வரும் கே. ஆர். செல்லம் இயற்கையாக நடித்திருக்கிறார்.

ஒளி, ஒலிப் பதிவுகள் நன்றாக இருக்கின்றன. சாதாரண காட்சி ஜோடனைகளையே நன்றாகப் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பாட்டுக்கள் எதுவுமே மனதில் நிற்பதாக இல்லை.

டைரெக்ஷன் உயர்தரம் என்று புகழ முடியாது. மட்டமென்று சொல்லிவிடவும் முடியாது. சம்பவங்கள் விறுவிறுப்பாக நகருகின்றன. அந்தராத்மா கூறுவதுபோன்ற காட்சிகளை பல இடங்களில் கையாண்டிருப்பது சலிப்புத் தட்டுகிறது. தங்கம் பல மைல்கள் நடந்தே போவதை அவள் கால்களையும், மைல் கற்களையும் விளக்கியிருப்பது குறிப்பிட வேண்டிய அம்சம். மொத்தத்தில், "வேலைக்காரன்" விரஸமற்ற, பொழுது போக்குக்கான ஒரு நல்ல படம்.

—"ஜாம்பவான்"

"காதல்"

தயாரிப்பு : பரணி பிக்சர்ஸ்

டைரெக்ஷன் : ராமகிருஷ்ணா

கதை : பி. பானுமதி

வசனம் : "உதயகுமார்"

பாட்டு : கே. டி. சந்தானம்

நடிகர்கள் : பானுமதி, நாகேஸ்வரராவ், ஸ்ரீரஞ்சனி, முக்காமாலா. ரேலங்கி, சிவராவ், வி. எஸ். ஆர்., சூர்ய காந்தம், சுரபி கமலாபாய், துரைசாமி முதலியோர்.

ஸ்டுடியோ : வாஹினி.

டி. ஆர். ராமச்சந்திரன், காமெடியன் சாரங்கபாணி, டைரெக்டர் ஏ. டி. கிருஷ்ணசாமி அவர்கள் தொடங்கியிருக்கும் ஜயந்தி புரொடக்ஷன்ஸின் முதல் படமான ('கல்கி'யின்) "பொய்மான் கரடு" ஷூட்டிங் ஆரம்ப விழா, வாஹினி ஸ்டூடியோவில் சென்ற மாதத்தில் நடந்தபோது எடுத்த படம் இது. படத்தில் "கல்கி", டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோரைக் காணலாம்.

மோதி நாடகங்களில் சேர்ந்து பிரபலம் அடைகிறாள். அவளை அடையாளம் தெரிந்துகொண்ட ராஜா, நடந்தவற்றைக் கூறி, அவளையே மணந்து கொள்ளுவதாக வாக்களிக்கிறான். இதை அறிந்த லதா, மோதியைச் சந்தித்து, தனக்காக ராஜாவின் மீதுள்ள காதலை தியாகம் செய்யும்படி கெஞ்சுகிறாள். மோதி மனமிரங்கி சம்மதிக்கிறாள்; பட்டண வாழ்வை உதறிவிட்டு, மலைப்பிரதேசத்திற்கே திரும்புகிறாள்.

ராஜாவும், விடுதலை பெற்ற பரசுராமும், மோதியைத் தேடிச் செல்கின்றனர். மூவரும் சந்திக்கின்றனர். ஆனால், பரசுராம் வீசிய கத்தி—தடுக்கிட்ட மோதி மீது பட்டு இறக்கிறாள். பிறகு ராஜாவை லதாவே மணந்துகொள்கிறாள்.

படத்தின் ஆரம்பத்தில் கதை கொஞ்சம் குழப்பமாய்த் தானிருக்கிறது. ஆனால் போகப் போகத் தெளிவடைகிறது.

கதை 'ஒரு அவியல் கதையாக' இருப்பதால் படத்தில் பல காட்சிகள் முன்பே படங்களில் பார்த்தவைகளாக இருக்கின்றன. அப்பொழுதெல்லாம் நமக்கு எரிச்சலே ஏற்படுகிறது.

பானுமதியின் கணவர் ராமகிருஷ்ணாவே இப்படத்தை டைரெக்ட் செய்திருக்கிறார். டைரெக்ஷனை இன்னும் எவ்வளவோ மேம்பாடாகச் செய்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

பானுமதிக்கு நாடோடி வேஷங்களை ஏற்று நடிப்பதில் அலாதிப் பிரியம் போலிருக்கிறது. முன்பே அவர் நடித்துள்ள சில படங்களில் அவர் இந்த வேஷத்தில் தோன்றியிருக்கிறார்.

இப்படத்தில் அவரது நடிப்பு இயற்கையாக உள்ளது. "இந்த வேஷத்திற்

கெனவே அவர் பிறந்தவரோ!" என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது.

கதாநாயகனாய் நடிக்கும் நாகேஸ்வர ராவின் நடிப்பும் வழக்கம்போலவே நன்றாய் இருக்கிறது. முரட்டன் வேஷத்திற்கு பொருந்தியதாய் இருக்கிறது மூக்காமலாவின் நடிப்பும், தோற்றமும். ஸ்ரீரஞ்சனி சுமாராய் நடித்திருக்கிறார். ரேலங்கி, சிவராவ் இவர்களது ஹாஸ்ய நடிப்பு நன்றாயிருக்கிறது. மற்றவர்களின் நடிப்பு சாதாரணமாய் இருக்கிறது.

படத்தில் பாட்டுகள் நிறைய இருக்கின்றன. ஆனால் மனதில் பதியக் கூடிய பாட்டாய் ஒன்றுகூட இல்லை. பானுமதி பாடியுள்ளவைகளில் 'ஓ! ராஜா!..." ஒன்றுதான் காதில் ஒலிக்கிறது.

இப்படத்தின் வசனத்தை "உதய குமார்' எழுதியிருக்கிறார். வசனங்கள் பரவாயில்லை. ஆனால் படத்தில் நடித்துள்ள தெலுங்கு நடிக நடிகைகள் கூடியவரையில் அவற்றைக் கொலை செய்திருக்கிறார்கள். சிலருக்கு பேச்சு இரவல் வாங்கப் பட்டிருப்பதாகக்கூடத் தோன்றுகிறது. இந்த தலைவேதனைகளை யெல்லாம் தமிழ்ப் பட ரஸிகர்கள் அநுபவிக்க வேண்டியிருப்பது பெரும் துரதிருஷ்டந்தான்.

படத்தில் சில பகுதிகள் அளவுக்கதிகமாக உள்ளன. உதாரணமாக, படத்தின் ஆரம்பத்தில் கதைக்கு அவசியமில்லாத நாடகமேடைக் கூத்தைக் கூறலாம் ஒரு நல்ல படத்தைப் பார்க்கப் போகிறோம் என்ற உணர்ச்சியை இவ்வாரம்பக் காட்சிகள் கெடுத்துவிடுகின்றன. படத்தின் முற்பகுதியில் சுவாரஸ்யம் குறைவாக உள்ளது. ஆனால் பிற்பகுதியும், கதையின் முடிவும் திருப்தி அளிப்பதாயுள்ளது.

ஒளிப்பதிவு அநேக இடங்களில் தெளிவாக இல்லை இயற்கை வெளிக் காட்சிகள் நன்றாய் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஒலிப் பதிவு சுத்தமாய் இருக்கிறது.

மொத்தத்தில், பானுமதியின் விசேஷ நடிப்பை பிரதானமாய் கொண்டுள்ள "காதல்" ஒரு சுமாரான படம் என்று கூற வேண்டியிருக்கிறது.

—"நிழல்"

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையானது

மணிமார்க் (அலுமினியம்) குக்கர்

சுலபமாகவும் துரிதமாகவும் சமையல் தயாரிப்பதற்கு சிறந்த பாத்திரம். பதார்த்தங்களின் (Vitamins) சத்து வீணாகாமல், தயாரிக்கப்படுகிறது. சாதம் நன்றாக வெந்து மல்லிகைப் பூ மாதிரி இருக்கும்.

பட்டணம் படி அளவு

	$\frac{1}{8}$ படி	$\frac{1}{4}$ படி	$\frac{1}{2}$ படி
விலைகள் ரூ.	12-8-0	17-8-0	22-8-0

FOR MADRAS.

அழகப்பா இண்டஸ்ட்ரியல்ஸ்
அலுமினியப்பாத்திரத் தொழிற்சாலை......
வண்ணாரப்பேட்டை மதராஸ்.21.
NIVAS

மாஸ்டர்

சேது

ஜெண்டேஜெ

சென்ற வாரம் நான் கீழ்ப்பாக்கத்திற்கு ஒரு வேலையாகச் செல்ல நேர்ந்த போது, நம் முதல் தமிழ்ப் பட நக்ஷத்திரம் டி.பி ராஜலக்ஷ்மியின் ஞாபகம் ஏற்பட்டது. 'சரி, பார்த்து விட்டு வருவோம்' என்று அவரது வீட்டை அடைந்தேன்.

வழக்கமான வரவேற்பு உபசாரங்களும், க்ஷேமலாப விசாரணையும் நடந்துகொண்டிருந்த போது, சுமார் 13 14 வயதுடைய ஒரு சிவத்த பையன் பளபளப்பான ஒரு புது 'ராலே" ஸைக்கிளில் வாசலில் வந்திறங்கினான். சைக்கிளை அங்கேயே வைத்து விட்டு அவன் நாங்கள் இருந்த ஹாலுக்குள் சந்தோஷ முகத்துடன் நுழைந்தான். அவன் நடையுடை பாவனைகளிலிருந்து அப் பையன் ராஜலக்ஷ்மியின வீட்டாருக்கு மிகப் பழக்கமான பையனாய் காணப்பட்டான்.

ஆனால் நாங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவன் முகம் மாறுபட்டது; வந்த வழியே திரும்ப முயன்றான். அதற்குள் ராஜலக்ஷ்மி, "பரவாயில்லை; நீ வரலாம்; வா, அப்பா!" என்று கூறவே அவன் தயக்கத்துடன் கதவருகிலேயே நின்றான். ராஜலக்ஷ்மி உடனே என்னிடம் கேட்டார்: "இந்தப் பையன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா! பாவம், இந்தப் பையன் சோற்றுக்குத் திண்டாடுவதையும், அடி உதைகள் படுவதையும்

வாழ்க்கை வர்ணனை

காண எனக்குப் பரிதாபமாய் இருக்கிறது" என்று ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே கூறினர். நான் அந்தப் பையனை உற்று நோக்கினேன். சோற்றுக்கில்லாத தரித்திரச் சின்னங்களோ, அடி உதை கொடுக்க வேண்டிய குறும்புத் தனமோ அவனிடம் காணப்படவில்லை. அவன் முகத்தில் சாந்தம் திகழ்ந்தது; பார்வையிலோ அடக்கம் நிறைந்திருந்தது. மேலும், அவனது கஷ்டங்களைப் பற்றிக் கூறுகையில் ராஜலக்ஷ்மி வருத்தப் படாமல் ஏன் சிரித்தார் என்று யோசிக்கலானேன்.

"என்ன, தெரியவில்லையா?" என்று மீண்டும் கேட்டு ராஜலக்ஷ்மி என் சிந்தனையைக் கலைத்தார்.

'எங்கோ பார்த்த மாதிரி யிருக்கிறது அன்னை படத்தில் நடித்த மாஸ்டர் சேது போல இருக்கிறது இவன் முக ஜாடை...' என்று நான் இழுத்தாற்போல் பதில் அளித்தேன்.

"ரொம்ப சரி. அந்த சேதுவேதான் இந்தப் பையன்!" என்று ராஜலக்ஷ்மி கூறிவிட்டு, அந்தப் பையனிடம், "இவர்தான், சேது,

ரூன்டுசீ' என்று தெரிவித்தார். பையன் மிகுந்த பயபக்தியுடன் நமஸ்காரம் தெரிவித்தான்.

மாஸ்டர் சேதுவை நேரில் சந்தித்ததும் முதலில் அவன் நடித்த படங்களைப் பற்

றிய எண்ணங்கள் எனக்கு ஏற்பட வில்லை. அவனைப் பற்றி பல வாறாக விசாரித்து நேயர்கள் எனக்கு எழுதி யிருக்கும் (சுமார் இருநூறு) கடிதங் களே என் கண் முன் நின் றன. நான் தேட விரும்பிய தகவல்கள் தாமாகவே என்னைத் தேடி வந்து என் கண் முன் சேதுவின் உருவ மாக நின்றதற்கு நான் மிகவும் சந்தோ ஷம் அடைந்தேன்.

பையனை உட்காரச் சொல்லி விட்டு, "சேது, நீ சரியாக மாட்டிக் கொண் டாய். அடுத்த மாதம் 'குண்டூசி'யில் எழுதி, உன்னை என்ன செய்யப் போகி றேன், பார்!......" என்றேன் நான்.

பையன் பயந்து விட்டான், பாவம்! "என், ஸார்; என் நடிப்பு உங்களுக்குப் பிடிக்க வில்லையா, ஸார்!" என்று தயக் கத்துடன் கேட்டான்.

"பிடிக்கவில்லையா! அப்படிச் சொல்ல வில்லையே நான். உன் வாழ்க்கை வரலா றுகளை "குண்டூசி" மூலம் அம்பலப் படு த்தி விடப் போகிறேன், தெரிந்ததா!" என்றேன்.

"அவ்வளவுக்கு நான் பிரமாதமாய் நடித்திருக்கிறேனு என்று எனக்குத் தெ ரியாது. ஏதோ டைரெக்டர் சொல்லிக் கொடுத்தபடி செய்திருக்கிறேன். அவ் வளவு தான்; ஆனல், நீங்கள் கேட்டால் நான் என் வரலாறுகளைச் சொல்லத் தயார்" என்று கூறினன் சேது.

இரண்டே படத்தில் நடித்திருந்த போதிலும், அவனுடைய நடிப்பை ஜனங்கள் மிகப் பாராட்டுகிறார்கள் என்ற விஷயத்தை அவனிடம் கூறி அவனை உற்சாகப் படுத்தினேன்.

"அப்படியானல்; என்னைப் பற்றித் தான் உங்களுக்கு எல்லாம் தெரியுமே நீங்கள் தான் சொல்லுங்களேன்" என்று சேது ராஜலக்ஷ்மியிடம் கூறினன்.

ராஜலக்ஷ்மி கூறத் தொடங்கினார்:

"சேது அவன் பெற்றோர்களுடன் என் பங்களாவின் பின் புறத்திலுள்ள வீட்டில் குடியிருக்கிறான். ஒரு நாள் இரவு எட்டு அல்லது ஒன்பது மணியிருக்கும் சேதுவின் தகப்பனார் சேதுவின் கையைப் பிடித்தழைத்துக் கொண்டு வந்து என் முன் நிறுத்தினார். தம் கையில் வைத்திருந்த விபூதியை என்னிடம் கொடுத்து, 'இதோ பாருங்கள், உங்கள் கையால் இவன் நெற்றியில் இட்டு ஆசீர்வதியுங்கள்' என்று கூறினார் தகப்பனார்.

"நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன். 'ஏன், என்ன, எதற்காக?'" என்று கேட்டேன் ஆச்சரியத்துடன்.

"'நீங்கள் முதல் நடிகையாக நடித்து தமிழ்ப் பட உலகிற்கு அஸ்திவாரம் நாட்டினீர்கள். பிறகு இணையிலாப் புகழையும், பணத்தையும், செல்வாக்கையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்கள். சேது இன்று ஒரு படத்தில் முதன் முதலாக நடிப்பதற்காகப் போகிறான். உங்களது பூரண ஆசீர்வாதம் இருந்தால் அவன் நிச்சயம் பிரபலம் அடைய முடியும்.' என்று தெரிவித்தார் தகப்பனார். நான் அவர் வேண்டியபடியே பையனை ஆசீர்வதித்து ஸ்டுடியோவுக்கு அனுப்பி வைத்தேன்" என்று கூறி முடித்தார் ராஜலக்ஷ்மி.

தகப்பனார் எதிர்பார்த்த படியே, ராஜலக்ஷ்மியின் ஆசீர்வாத பலத்தாலும், தன் நடிப்புத் திறமையினாலும் மாஸ்டர் சேது முதல் படமான "அண்ணி" மூலமே பொதுமக்களின் மனதை மிகக் கவர்ந்து விட்டது குறிப்பிடத் தக்கது.

அவனது உணர்ச்சி மிக்க நடிப்பில் லயித்துப் போய், புகழ்ந்து, அவனிடம் பரிதாபம் கொள்ளாதவர்களே இல்லை எனலாம். "அண்ணி"யில் அவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது அவனது நடிப்பு. அந்த ஒரே படத்தின் மூலமே சேது ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகிவிட்டான் என்று கூறுவது மிகையாது. அடேயப்பா, "அண்ணி" வெளி வந்தது முதல் ரஸிகர்களிடமிருந்து அவனைப்பற்றி எனக்கு எவ்வளவு கேள்விகள்!

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

"லக்ஸ் டாய்லட் சோப் என் சருமத்தை அழகுடையதாக வைத்துக்கொள்கிறது" என்று சொல்கிருர்

ஏ ஆர். சகுந்தலா

இனிய மணத்துடன்
கூடிய இந்த வெண்மை
யானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 332-50 TM

நுனிப்புல்

வெட்டுக்கிளி

காலஞ் சென்ற ஸர் ஐஸாக் நியூடன் என்ற பிரபல விஞ்ஞானி, 'கருமமே கண்ணாயிருந்தவர்' என்பது பிரசித்தமான விஷயம். அதற்கு அவரது வாழ்க்கையில் நடைபெற்ற பின்கண்ட சம்பவம் அத்தாட்சியாகக் கூறப்படுகிறது. அவர், ஒரு நாள் தீவிரமான விஞ்ஞான ஆராய்ச்சியொன்றில் முனைந்திருந்தார். சமையற்காரன் அவரது கட்டளைப்படி, அவருக்கு ஆகாரத்தை ஒரு தட்டில் கொண்டு வந்து, அவர் பக்கத்தில் வைத்து விட்டுப் போய்விட்டான். அவர் தம் ஆராய்ச்சியில் மூழ்கியிருந்த மும்முரத்தில் சாப்பாட்டைப் பற்றி மறந்தே போய்விட்டார். அவருடைய நாய் அதைக் காலி பண்ணி விட்டது. கொஞ்ச நேரம் பொறுத்து, அந்த சமையற்காரன், 'எஜமான் சாப்பிட்டு விட்டார்' என்ற அபிப்பிராயத்தில் காலியான தட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டான். விஞ்ஞானி அன்று பூராவும் பட்டினி. அவரும் தாம் சாப்பிட்டு விட்டதாகவே எண்ணி இருந்து விட்டார். இதை ஏன் சொல்ல வந்தேன் என்றால், ஏப்ரல் மாதம், சற்றேறக்குறைய இம்மாதிரியான சம்பவம் ஒன்று சென்னையிலுள்ள ஒரு பிரபல ஸ்டுடியோவில் நடந்தது.

• • •

இந்த ஸ்டுடியோவின் முதலாளி, தம்மைச் சுற்றி வட்டமிடும் கோஷ்டியுடன், அடிக்கடி விவாதங்களில் — பட சம்பந்தமாகத்தான்!—ஈடுபடுவது வழக்கம். சென்ற ஏப்ரல் மாதம் ஒரு நாள். அங்கு தயாராகிவரும் ஒரு படத்தைக்குறித்து வழக்கம்போல் விவாதம் நடைபெற்றது. எல்லோருக்கும் அருமையான காப்பி கொண்டுவந்து வைக்கப்பட்டது. முதலாளி விவாதத்தில் தீவிரமாக முனைந்திருந்ததால், தமக்குக் கொண்டு வந்து வைத்த காப்பி ஆறிப் போவதைக் கூட மறந்துவிட்டார். அது ஐஸ் காப்பியாகிக் கொண்டிருந்தது. கோஷ்டியிலுள்ள மற்றவர்களுக்கோ 'காப்பி

ஜெமினியின் "மூன்று பிள்ளை"களுள் ஒரு பிள்ளையைக் காதலிக்கிறார் இந்த சூர்யப் பிரபா.

ஆறிப்போகிறதே' என்று இருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பாவம், முதலாளி காப்பியைப் பற்றி மறந்திருக்க இவர்கள் மட்டும் காப்பியைக் குடிக்க முடியுமா!

• • •

இந்த முதலாளி முயற்சியிலும் சரி, சிரத்தையிலும் சரி, விஞ்ஞானி நியூடனுக்கு சிறிதும் தாழ்ந்தவரல்ல என்பது அவரை நன்றாகத் அறிந்தவர்களுக்குத் தெரியும். "இராப் பகலாக உழைக்கிறார்" என்று சொல்வார்களே, அது இவருக்குத்தான் மிகவும் பொருந்தும் என்பதை அவரது அசுர வேலையைப் பார்த்தவர்களே தெரிந்துகொள்ள முடியும். சில நாட்களில், இரவு படப்பிடிப்பு முடிய இரண்டு அல்லது மூன்று மணிகூட ஆகும். அந்தப் பட சம்பந்தப் பட்ட மற்றவர்கள் அனைவரும், மறுநாள் மாலை நான்கு அல்லது ஐந்து மணிக்குத்தான் ஸ்டுடியோவுக்கு வருவார்கள். ஆனால், இந்த முதலாளியோ மறுநாள் காலை பத்து மணிக்கே ஸ்டுடியோவில் ஆஜராகி விடுவார். எடுத்துக்கொண்ட படத்தை முடித்த பிறகு தான் அவருக்குத் தூக்கம், நல்ல உணவு இவைகளை பற்றி யெல்லாம் ஞாபகம் வரும். பணத்தைப் போட்டு விட்டு சுக போகங்களில் ஆழ்ந்து கிடக்கும் மற்ற பல படமுதலாளிகளும் இவரைப் பின்பற்றினால் நம் பட உலகம் நிச்சயம் முன்னேறவே செய்யும்.

பார்த்தால் அசல் இன்ஸ்பெக்டர் மாதிரியே இருக்கிறதல்லவா? ஆனால், வேஷம்தான்! எம். எஸ். பிக்சர்ஸ் வெளியீடான "சின்ன துரை"யில் நடிக்கிறார் என். திருவேங்கடம்.

• • •

கடைசியாக, இதே ஸ்டுடியோவில் நடைபெற்ற மற்றொரு ரஸமான விஷயத்தை மட்டும் கூறிவிட்டு, நிறுத்திக் கொள்கிறேன். மற்ற பல படாதிபதிகளிடம் இல்லாத பல நல்ல அம்சங்கள் இவரிடம் உண்டு. அவைகளில் ஒன்று, தாம் தயாரிக்கும் படம் ஒவ்வொன்றையும், படம் ஓரளவுக்கு முன்னேறியதும், தன்னுடைய பல ஸ்தாபனங்களில் வேலை செய்யும் அனைவருக்கும் விமர்சனம் செய்ய திரையிட்டுக் காட்டுவார். அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு படத்தில் நியாயமான மாறுதல்களைச் செய்வார். அதே போல, தாம் அப்பொழுது தயாரித்துவந்த படம் ஒன்றை மே மாதம் திரையிட்டுக் காட்டினர். முதலாளி, "பயமின்றி, விருப்பு வெறுப்பின்றி அபிப்பிராயம் எழுதும்படி" சொன்னார். கடைசியில் அனைவரது அபிப்பிராயங்களையும் வாசித்துப் பார்த்தார். ஒரே ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும், 'படம் நன்றாக இருக்கிறது', 'பாதகமில்லை', 'சுமாரான படம்' என்றெல்லாம் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள். ஆனால், அந்த ஒரே ஒரு நபர் மட்டும் படத்தை உள்ளது உள்ளபடி விமர்சனம் பண்ணி, நிறையக் குற்றங்களை எடுத்துக் காட்டி, விளாசியிருந்தார். முதலாளி அவரது அபிப்பிராயத்தை வெகுவாக ரஸித்து அவரைப் பாராட்டினர். இது தெரிந்த மற்றவர்கள் "அடாடா இப்படி என்று தெரிந்திருந்தால் நாமும் நிறையக் கண்டித்து எழுதியிருக்கலாமே! 'நன்றாக இருக்கிறது' என்று எழுதினால் முதலாளி சந்தோஷப்படுவார் என்று நினைத்து எழுதிவிட்டோமே." என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

தற்போது பல ஊர்களில் வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் அசோகா பிக்சர்ஸாரின் "என் தங்கை" படத்தில் மாதுரி தேவியும், நரசிம்ம பாரதியும் காதலர்களாகத் தோன்றும் ஒரு காட்சி இது.

'கழுதை கத்தினால் நல்ல சகுனம்; ஆனால், அது கண்ணில் பட்டாலோ கெட்ட சகுனம்' என்று சகுன சாஸ்திரத்தில் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையென்பது ஒருபுறமிருக்க, குரல் இரவல் கொடுக்கும் பலரது விஷயத்தில் இது ஓரளவுச்குப் பொருத்தமாகவே இருக்கிறது. தமிழ்ப் படங்களில் இரவல் குரல் கொடுத்து பிரபலமாகி, பின் நடிகையாகி மறைந்த ஒரு 'நாயகி'க்கு இனிய சாரீரம் உண்டு. ஆனால், அவருடைய சரீரமோ அதற்கு நேர்மாறானது.

• • •

இனிமையான குரல் அமைந்த இந்த நடிகை ஆதிகாலத்தில் பிரபல நடிகைகளுக்குத் தம் குரலை இரவல் கொடுத்து வந்தார். இவருடைய குரலை இரவலாகப் பெற்ற நடிகைகளும், நக்ஷத்திரங்களாக உயர்ந்து பிரகாசித்து வந்தார்கள். அதனால் இந்த நடிகைக்கும் மேலும் மேலும் குரல் இரவல் கொடுக்க சந்தர்ப்பங்கள் கிடைத்து வந்தன. பாவம்! இந்தப் பாடகி திரை மறைவிலேயே—குரல் இரவல் கொடுப்பதோடு இருந்திருக்கக் கூடாதா!

• • •

பாடகிக்கு திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டது. "உனக்கோ இனிய சாரீரம் அமைந்திருக்கிறது. உன்னுடைய குரலைக் கொண்டுதான் நக்ஷத்திரங்கள் பிரபலமாகி வருகிறார்கள். அப்படியிருக்கும் போது நீயே ஏன் ஒரு பிரபல நக்ஷத்திரமாக வரக் கூடாது?' என்று அவருடைய அந்தராத்மா கூறிற்று போலும்! தாமும் படங்களில் நடிப்பதென ஒரு தீர்மானத்திற்கு அவர் வந்தார். பாடகி அப்பொழுதே கண்ணாடியில் தம்மைத் தாமே ஒரு முறை பார்த்துக்கொண்டு, தமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டிருந்திருக்கலாம்!

• • •

அவரது குரலுக்கு அப்பொழுது ஏக கிராக்கி இருந்தது. தேடிவந்த பட முதலாளிகளிடம், தாம் இனி குரல் இரவல் கொடுக்க முடியாதென்றும் தமக்கு நடிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் எனவும் பிடிவாதமாகக் கூறிவிட்டார். அவரைப் பிரதம நடிகையாகப் போட்டு, படம் பிடித்த, 'விஷப் பரீக்ஷை' நடத்த

எந்தப் படாதிபதிக்கும் தைரியமோ துணிவோ வரவில்லை.

• • •

கடைசியாக, பாடகி மீது அபிமானம் கொண்ட ஒரே ஒருவர் பாடகியைப் பிரதம நடிகையாகப் போட்டு ஒரு படம் பிடித்தார். வேறு ஒரு முதலாளி பாடகியை ஆண் வேஷத்தில் நடிக்கவைத்துப் புராணப் படம் ஒன்றைத் தயாரித்தார். மேற்படி இரு படங்களும் திரையிடப்பட்ட அன்று முதலே, பத்திரமாக 'கைவமுள்ள படங்களாக', பெட்டியிலேயே தூங்குகின்றன! அந்தப் படங்களுக்கு ஏற்பட்ட 'வெற்றியை'க் கண்ட மற்ற படாதிபதிகள், அதன்பின் அந்த நடிகையைக் குரல் இரவல் கொடுப்பதற்குகூட அழைக்க யோசித்தார்கள். ஆகவே, நடுவில் சிறிது காலம் அவரை அழைப்பாரே இல்லை. மீண்டும் இப்பொழுது அவரது குரலுக்கு அழைப்புக் கிடைத்திருக்கிறது. இனியேனும், தன் சக்தி உணர்ந்து, அவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டால் சரி!

• • •

இந்தப் பாடகியின் கதியை எண்ணிப் பார்க்கும்போது, நம் படங்களுக்கு தம் குரலை இரவல் கொடுக்கும் வேறு பல பாடகிகளை புத்திசாலிகள் என்றுதான் கூறவேண்டும். 'முன்னால் போகிறவன் கீழே விழுந்தால், பின்னால் வருகிறவர்கள் விழித்துக் கொள்ள மாட்டார்களா?' ஆகவே, மற்ற குரல் இரவல் கொடுக்கும் பல பாடகிகளும் தங்களைத் தாங்களே நன்றாகத் தெரிந்து கொண்டு திரை மறைவிலேயே இருந்து வருவதை மிகப் பாராட்டுகிறேன்.

• • •

இந்த சந்தர்ப்பத்தில் புத்திசாலியான ஒரு பின்னணிப் பாடகியைப் பற்றிய நினைவும் வருகிறது. காலஞ்சென்ற பி. யு. சின்னப்பா நடித்த படம் ஒன்றில்

எம். என். நம்பியார், பி. எஸ். சரோஜா, எம். சரோஜா ஆகியோர், நிலக்கரி, தண்ணீர், தண்டவாளம் இவைகளெல்லாம் இல்லாமல் ஓட்டும் இந்த ரயில் வண்டியை மாடர்ன் தியேட்டர்ஸார் வெளியிட்டிருக்கும் ''கல்யாணி'' தமிழ்ப் படத்தில் காணலாம்.

பிரதம பாகத்தில் நடிக்க இந்தப் பாடகி தான் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

ஆனால், பிறகு என்ன காரணத்தினாலோ இந்தப் பாடகி அதில் நடிக்கவில்லை. அப்படத்தில் நடிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போனதை நினைத்து, அந்த சமயம் இந்தப் பாடகி, வருந்தியிருக்கக் கூடும். இதைத் தம் 'துரதிருஷ்டம்' என்று மனம் வெதும்பிக்கூடப் போயிருப்பார். ஆனால், அந்த சந்தர்ப்பம் தவறிப் போனது உண்மையில் அவரது அதிர்ஷ்டம் என்றுதான் நான் கூறுவேன். ஏனெனில், அந்தப் படத்தில் மட்டும் அவர் நடித்திருந்தாரானால், அவரது அதிர்ஷ்டத்தின் போக்கே வேறு மாதிரியாக மாறியிருக்கலாம். அதுவே அவரது முதல் படமாகவும் கடைசிப் படமாகவும் முடிந்திருக்கும். அவருடைய இனிய சாரீரத்தினால் இன்று அவருக்கு உள்ள பெயரும் புகழும் கிடைக்க வழியேயில்லாது போயிருக்கும். இதையெல்லாம் உணர்ந்துதான் அவரும் நடிகையாக மாறிவிடும் சபலம் இல்லாமலே இருந்து வருகிறார் என்று எண்ணுகிறேன்.

இதில் ஒரு விஷயம் ரொம்பவும் தமாஷானது! சரஸ்வதியும் லக்ஷ்மியும் (கல்வியும், செல்வமும்) ஒரு இடத்தில் சேர்ந்திருப்பதில்லை என்பதை நாம் பார்க்கிறோம். அதே மாதிரித் தான் இந்தப் பின்னணி பாடகிகளின் நிலையும் இருந்து வருகிறது. பின்னணியில் பாடுகிறவர்களில் பலருக்கு இனிய சாரீரம் இருக்கிறது. ஆனால், திரையில் தோன்ற முடியாதபடி ஏதாவது ஒரு குறை அவர்களிடம் இருக்கத் தான் இருக்கிறது. அநேகமாக அவர்களில் பலர் அழகு என்ற அம்சம் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். சிலர் அளவுக்கு மீறி பருத்துக் கிடக்கிறார்கள். ஒன்றிரண்டு பேர் நடைப் பிணமாகவும் உலாவுகிறார்கள். ஒரு பாடகி நாலே அடி உயரம்தான் இருக்கிறார்! நல்ல முக வெட்டும் இனிய சாரீரமும் ஒருங்கே பெற்ற நக்ஷத்திரங்கள் ஒன்றிரண்டு பேர்கள் தான் நம் பட உலகில் இருக்கிறார்கள். குரல் இரவல் வாங்கும் வழக்கம் மட்டும் இல்லாமற் போனால் நம் கதி என்னாகும்! வாழ்க, குரல் இரவல்!

"குடத்தில் இருப்பது தண்ணீர்: ஆனால் என் மனத்தில் அடிப்பது புயல்!" என்று எம். வி. ராஜம்மா ("புயல்" தமிழ்ப் படத்தில்) ஏ. கே. நாராயணனிடம் கூறுகிறமாதிரி இருக்கிறது.



நாடகங்கள் நமக்குத் தேவையா!

"புரட்சிப்பித்தன்"

"உலகமே ஒரு நாடக மேடை! அதில் நாம் எல்லோரும் கதா பாத்திரங்கள்", என்றுபல அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆம்; உலகில் அன்றாடம் மானிட சமுதாயத்தில் தோன்றி மறையும் வாழ்க்கையின் மேடு பள்ளங்களைச் சித்தரித்துக் காட்டுகிறது நாடகம். சினிமா ஏற்படுவதற்கு முன்பிருந்தே நாடகங்கள் நடந்து வந்திருக்கின்றன என்றாலும், இருபதாம் நூற்றாண்டில்தான் நாடக உலகில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, நம் தமிழ் நாட்டில் நாளுக்கு ஒன்றுவிதம் நாடகங்கள் நடத்திக் காட்டப்படுகின்றன. போட்டி போட்டுக் கொண்டு பல இளைஞர்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ள முன் வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவர்களின் ஆர்வம் நம் அன்பிற்குப் பாத்திரமாகிறது. நாம் மனப்பூர்வமாக அவர்களின் முயற்சியை வரவேற்கிறோம். அதுவே உண்மைத் தமிழனின் செய்கையுங்கூட!

ஆனால், நம் எண்ணத்திலே மண்ணைப் போடப் பார்க்கின்றனர் சில சுயநலமிகள். வாழ்வின் இருளை நீக்கி ஒளியை உண்டாக்கக் கூடிய, நாடக விளக்கை நாசமாக்கப் பார்க்கிறது நயவஞ்சகர்கள் கூட்டம். நாடகமேடையை அரசியல் மேடையாக்கி, அதில் கட்சிப் பிரசாரங்களைச் செய்து, ஜீவனம் நடத்துகின்றனர். அதுமட்டுமல்ல,......கட்சிப் பிரசாரத்தோடு ஜாதி வெறியையும் கிளப்பி, ஒற்றுமையாக வாழ வேண்டிய நம்மிடையே வேற்றுமையை உண்டாக்குகின்றனர். இதுவல்ல நாடகத்தின் பண்பு!

அந்தக் காலத்தில். பெரும்பாலும் புராணக் கதைகளையே நாடகமாக நடித்து வந்தார்கள். 'ஹரிச்சந்திரா' என்ற புராணக் கதையைப் பார்த்துத்தான் இந்தியாவின் அணையா ஜோதி அண்ணல் காந்திஜி அவர்கள் தம் மனதை உண்மை அன்பிலே மாற்றி, மானிலத்தோர் மகாத்மா என்று கொண்டாடும் மறையாத புகழை அடைந்தள்ளார். அந்த வகையிலே அக்காலத்தில் நாடகங்கள் அமைந்திருந்தன.

இக் காலத்தில், பெரும்பாலோர் சமூகக் கதைகளை சீர்திருத்த நோக்குடன் அமைத்து நடித்துக் காட்டுகின்றனர். அவைகளை நாம் ஆதரிக்கத்தான் வேண்டும். சீர்திருத்த கருத்துக்களை நாம் சிரமேற் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அதன் மத்தியில்தான் பிரசார ஓநாய்கள் புகுந்துகொண்டு ஓலமிடுகின்றனர்! ஆயினும் நாம் முயன்றால் இவர்களை வெகு சீக்கிரத்தில் வெளியேற்றி விட முடியும்.

கலை—அசைக்க முடியாத ஒரு மலை. அதன் நிலையோ இலையைப் போலிருக்கும். அப்படிப்பட்ட கலைகளுள் நாடகக் கலை மிகவும் முக்கியமானது மட்டுமல்ல; நம் வாழ்க்கைக்கு அவசியமானதுமாகும். ஒரு சைத்ரீகனின் பெருமையைத்தான் விளக்குகிறது ஓவியக் கலை; ஒரு பாடகனின் சாரீர இனிமையை மட்டும்தான் உணர்த்துகிறது சங்கீதக் கலை, ஒரு நாட்டியக்காரியின் நடனத் திறனை மட்டும்தான் எடுத்துக் காட்டுகிறது நடனக் கலை. அந்தக் கலையால் நடனத்திற்கு வேண்டிய பக்க வாத்தியங்களைப் புகழுறச் செய்ய முடியவில்லை! ஆனால் நாடகக் கலையில் அவ்விதம் கிடையாது. ஒரு நாடகம் நல்ல பெயரை ரசிகர்களிடமிருந்து பெறுவதற்கு கதைப் போக்கில் நல்ல கருத்துக்களும், வசனத்தில் விறுவிறுப்பும், நடிப்பில் உணர்ச்சியும், காட்சி ஜோடனைகளில் கவர்ச்சியும் காணப்பட வேண்டும். ஆகவே, கதாசிரியர், ஓவியக்காரர், நடிகர்கள், பயிற்சியாளர் (டைரெக்டர்) இவர்கள் பெருமைகளையெல்லாம் நாடகம் நமக்கு நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

தவிர, சினிமாவை விட நாடகங்களின் சிறப்பு என்னவென்றால், சதாரணமாக ஒரு படம் எடுக்க ஆறு மாதங்களும் பல லக்ஷக் கணக்கான ரூபாய்களும் தேவையாயிருக்கும். நாடகத்திலோ அவ்விதமில்லாது மாதத்திற்கொரு புதிய நாடகத்தை நல்ல கருத்துக்களுடன் அமைத்து நடித்துக் காட்டலாம். அதைவிட்டு, புனிதத் தன்மை வாய்ந்த நாடக உலகில் அரசியல் பிற்போக்குவாதிகள் புகுந்து அறிவுக்குப் புறம்பான நாடகங்களை

நடத்திக் காட்டி, அதன் மூலம் நாடகப் புகழை நலியச் செய்வதை நம்மால் பார்த்து சகிக்க முடியவில்லை.

உதாரணமாக ஒன்று கூறப் பிரியப்படுகிறேன். நான் ஒரு நாடகத்திற்கு போயிருந்தேன் ஒரு அரசியல் பட்டதாரியால் தீட்டப்பட்டது அது! ஆகவே, புதிய கருத்துக்கள் புதைந்திருக்கும் என திட்டமிட்டவாறே சென்றேன் என்ன ஏமாற்றம்!! நான் எண்ணிய மணக் கோட்டைகள் எல்லாம் மணல் கோட்டைகளாகி இடிந்து விட்டன. ஆம்! அந்த அளவுக்கு கதையின் போக்கு அமைந்திருந்தது. "......உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவன்......காமவிகாரத்தோடு ஒரு வேறு இனத்துப் பெண்ணைக் கற்பழித்து விட்டான்......அவள் கற்பை இழந்தாள்... இல்லை...கற்பைக் காப்பாற்ற அவனையே மணம் புரிந்துக்கொள்ள மன்றாடுகிறாள் ...குலப் பெருமை குறைந்து விடுமென அவன் மறுக்கவே ......அங்கே ஒரு சிர்திருத்தப் பேய் (புனித உருவங் கொண்டதுதான்!) வருகிறது ......கற்பழித்தவனின் ஜாதியைக் குறித்தும், கற்பின் நெறி தவறாத கண்ணகியை நையாண்டி செய்தும் ஒரு மணி நேரம் கொட்டகையே அதிரும்படி ஓலமிடுகிறது...." இப்படிச் சென்று முடிகிறது கதை! வசனத்திலே சொல்லொண்ணா வசைமாரிகள்! பிரசாரத்திற்கென எழுதி, 'பிஸினஸிற்கு' உபயோகித்துக் கொண்டார்கள்.

ஆகவே, நாடக ரஸிகர்களே! நன்றாகச் சிந்தித்து முடிவுக்கு வாருங்கள். மின்னுவதெல்லாம் பொன்னல்ல; ஜொலிப்பதெல்லாம் வைரமல்ல, எல்லாக் கருத்துகளும் நாடக உலகில் அமைய முடியாது. நம் சிரமிந்த வாழ்வில் சிறிது சாந்தியளிக்க சினிமாவை விட நமக்கு நாடகங்களே முக்கியம். அவற்றின் ஜீவ நாடியை வளர்க்கவே பாடுபட்டனர் ஷெல்லி, ஷேக்ஸ்பியர், பெர்னார்ட் ஷா, விக்டர் ஹியூகோ, தாகூர், பாரதியார், வேதநாயகம் பிள்ளை போன்ற அறிஞர்கள். அவர்கள் ஏற்றிவைத்த தீபந்தான் நாடக மேடைகளுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. அந்த ஒளியிலே தான் நாம் ஒப்பற்ற உயர்வைக் காண முடியும் அதை அணைக்க முயலுபவர்களை நாம் முறியடிக்க வேண்டும்.

உங்களுக்கு சைகிள்கள்

மொத்த விற்பனை விலைகளில் புதிய சைகிள்களை மாதாந்திர தவணையில் பணம் கட்டி வாங்குங்கள். புத்தம் புதிய சரக்கு.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். சலுகையளிக்கும் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். 25% முதலிலும் பாக்கியை 5 மாதாந்திர தவணைகளிலும் செலுத்தலாம்.

ஹிண்ட் சைகிள் ரூ. 155/- இங்கிலீஷ் சைகிள் ரூ. 185/- பிலிட்ஸ் ரூ 230/- ஹெர்குலஸ் ரூ 240/- பி. எஸ். ஏ ரூ. 255/- ராலே கிரீன் ரூ. 365/-.

ஷரத்துகளின்படி டெலிவரி எடுத்துக்கொள்ளலாம் உடனே உங்கள் முழு விலாசத்தையும் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் எழுதவும். புதிய சரக்குகள், புதியதும் அசல் பாகங்களும் கொண்டது. டன்லப் டயர்கள் மற்றும் ட்யூப்கள் இவற்றிற்கு உத்தரவாதம். உடனே நீங்கள் ஆர்டர் செய்யுங்கள்.

JUPITER TRADING CO.
P. BAG. 16602. CALCUTTA-4

ஜெமினியின்
மூன்று
பிள்ளைகள்



இரட்டைப் பிள்ளைகளை
(சின்னத் தைத்) செல்
வளே வளர்த்து வரும் ஜெமினியின்
டிவோனிர் இப் பொழுது மற்றும்
"மூன்று பிள்ளை களை" உருவாக்கி
யுள்ளனர். பலதரப் பட்ட உணர்ச்சிக
களும், தாயின் அன்பும் இப் படத்
தில் நிரம்பியிருக்கி றதாம். மூன்று
பிள்ளைகளின் குணம் நடத்தை—இவை
களை அடிப் படையாகக்
கொண்டது இக்கதை.

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் 'குண்டூசி' யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா, நாடக, சங்கீத உலகை சீர்திருத்துவதே இப் பகுதியின் நோக்கமாகும். —ஆசிரியர்

எஸ். கே. சேக்கமுத்து (சிங்கப்பூர்)

டி. ஆர். மஹாலிங்கம், டி. ஆர். ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி ஆகியோர் உடன்பிறந்தவர்களா ?

யார் அப்படிச் சொன்னது! இந்தக் கேள்விக்கான பதிலை நீர் டி. ஆர். சுந்தரத்தினிடமோ, டி. ஆர். ரஜனியிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம்!

கே. எம். எஸ். கபிர் (வத்துகாமம், இலங்கை)

நடிகர்களாக இருந்தவர்கள் பட முதலாளிகளாகவும் டைரெக்டர்களாகவும் மாறி வருகிறார்களே ? இனி, படங்களில் யார் நடிப்பார்கள் ?

நம் படமுதலாளிகளே நக்ஷத்திரங்களாக மாறி வேண்டுமானால் வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாம்!

எஸ். கே. பிறை (பதுளை)

உலகத்திற்கு சினிமா செய்துள்ள நன்மைகள் என்ன ? தீமைகள் என்ன ?

"நம்மை ஆண்டவன் படைத்தது ஆடைகளுடன் அல்ல" என்ற உண்மையை நாம் மறந்து விடாமலிருக்கும்படி செய்து வருகின்றன சினிமாப் படங்கள்! உலக மக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு சிறந்த முறையில் ஏமாற்றுவதற்கு உதவியாய் இருப்பதும் சினிமாப் படங்களே. சில சமயத்தில் மனித வர்க்கத்தை சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சில நீதிக் கதைகளையும், இலக்கியங்களையும் எடுத்துக்கொண்டு விடுவதுதான் பெருந் தீமையாகும்!

ராஜன் (பம்பாய்)

நான் எப்படியாவது சினிமாவில் சேர்ந்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். இதற்காக, என்னை

அசோகா பிக்சர்ஸின் "என் தங்கை" தமிழ்ப் படத்தில் நர்ஸாக நடிக்கும் வி. எஸ். சுசிலா, ஆண் வேஷத்திலும் காட்சியளிக்கிறார்.

"சமசாரம்" தின மூலம் பிரபலம் அடைந்த குமாரி வனஜா சாவதானமாய் புஸ்தகம் படிக்கிறார். "மூன்று பிள்ளைகள்" தமிழ்ப் படத்தில்தான்.

சினிமாவில் சேர்த்துவிடுபவருக்கு என் இரத்தத்தில் 10 அவுன்ஸ் தானம் செய்யக் கூடத் தயார்.

நக்ஷத்திரங்களாக உள்ளவர்கள் பட முதலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சி வருவது உமக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. இல்லையென்றால் நீர் நக்ஷத்திரம் ஆவதற்கு முன்னரே இப்படி தாராளமாய் இரத்த தானம் செய்யத் துணிவீரா!

கே. கனகசபாபதி (கரூர்)

"சந்திரஹாஸா" படத்தில் நடித்த வி. என். சுந்தரம் பிறகு ஏன் படங்களில் நடிக்கவேயில்லை? தற்போது அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

வாழ்க்கையில் தோல்வியுற்றவர்களுக்கும் இடமளித்து வைத்துக் கொண்டு வருகிறது இந்த பூவுலகம். ஆனால் படங்களில் தோல்வியுற்றவர்களையோ நிர்தாக்ஷிண்யமாய் விரட்டியடித்து விடுகிறது சினிமா உலகம்! பல வருஷகாலமாய் படங்களில் நடிக்காமல் இருக்கும் சுந்தரம் படங்களில் பின்னணி பாடியாவது முன்னணிக்கு வரலாமென முயன்று வருகிறார்.

கே. விட்டோபாய் (வேலூர்)

ஸ்ரீராமுலு நாயுடு தயாரிக்கும் படங்களிலெல்லாம் எம். எஸ். சரோஜினி நடிப்பது வழக்கமாயிற்றே. சமீபத்தில் அவர் வெளியிட்டிருக்கும் "காஞ்சனா"வில் ஏன் சரோஜினி நடிக்கவில்லை?

கேட்கப்பட வேண்டிய கேள்விதான் இது! "பவளக்கொடி"த் தோல்வியால் தனக்கேற்பட்ட சோகத்தினின்றும் சரோஜினி இன்னமும் மீண்ட பாடில்லை போலும்.

ஏ. சுப்பையா (கொழும்பு)

எம். கே. ராதா நடித்த முதல் படம் எது?

அவர் முதன் முதலில் நடித்த படம் "அபூர்வ சகோதரர்கள்" தான். ஆனால் பெயரளவில் அவர் தோன்றிய படங்

களுள் முதன்மையானது "சதி லீலாவதி" படம் ஆகும்.

ஆர். விஜயன் (அலங்கை)

.........தேவி, மூசா என்ற வாலிபனை மணம் செய்து கொண்டதாக என் நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

விஷயம் உண்மை யெனினும் எழுதவதற்குக் கை கூசுகிறது! மணிக்கொரு ஆடை மாற்றுவதேபோல் மாதத்திற்கொரு கணவனை மாற்றும் கலையில் தேர்ந்து விளங்குகின்றனர் நம் நக்ஷத்திரங்களில் சிலர்! இந்தக் கால அளவு மாதத்திலிருந்து நாளுக்கும் நாளிலிருந்து மணிக்குமாக குறைந்து விட்டால்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை!

"சினிமா நாதன்" (காஞ்சீபுரம்)

எம். எம். ராதா பாய், சந்தான லக்ஷ்மி போன்றவர்கள் ஏன் படங்களில் தாயார் வேஷங்களிலேயே நடித்து வருகின்றனர்?

நம் படங்களில் பாட்டி வேஷங்கள் இல்லாமையால்தான்!

எஸ். எம். அங்கையா
(சட்டியாந்தோட்டை, இலங்கை)

"குப்பி" வீரண்ணாவின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

"C/o குப்பி புரொடக்ஷன்ஸ், முதல் தெரு, சகரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை-24" என்று அவரது பெயருடன் சேர்த்து எழுதும்.

எம். கே. ஷேக் தாவூத் (திருச்சி)

"தாய் உள்ளம்" படத்தில் நடிக்கும் மனோஹருக்கு அதுவே முதல் படமா? அல்லது வேறு ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறாரா?

"ராஜாம்பாள்" படத்தில் கதாநாயகனாய் நடித்திருப்பவரும் அவர்தானே!

எம். ஆர். ராஜதுரை (பாலூர் சத்திரம்)

என் காதலியை நான் அடைவதற்கு "அந்தமான் கைதி"யில் மந்திரவாதியாக நடிக்கும் சுவாமிநாதன் உதவுவாரா?

நீங்கள்
பார்த்திருக்கிறீர்களா?

நீங்கள் சாந்து எத்தனை கலர்களில் பார்த்திருக்கிறீர்கள்? எப்போதாவது சாந்து ஆறு கலர்களில் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

தற்போது நாங்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக (BINDHI) பிந்தி என்னும் சாந்து என்ற பெயருடன் அஜந்தா சித்திரங்களில் தீட்டப்பட்டிருக்கும் கவர்ச்சிகரமான ஆறு பிரசித்தி பெற்ற வர்ணங்களான ரோஸ், பச்சை, வயலட், ரோஸ் ரெட் (கடும் சிவப்பு), கருப்பு, மஜந்தா (வாடாமல்லி) முதலிய ஆறு தனித்தனிக் கலர்களில் மனதைக் கவரும்படியான வாசனையுடன் பெண்களின் அழகுக்கென்றே பண்டைய கால சாஸ்த்ரீய முறைப்படி தயாரித்து விற்பனை செய்கிறோம். இந்த பிந்தி சாந்தும் மிகவும் குணமுள்ளதும் பொதுமக்களின் ஆதரவையும் விருப்பத்தையும் பெற்றுள்ள EYETEX) 'ஐடெகஸ்' கண்மை முதலியவைகளை தயாரிக்கும் அரவிந்த் லாபரட்டரீஸால் தயாரிக்கப்பட்டவை.

எல்லா ஊர்களிலும்-எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

ஏஜண்டுகள் தேவை

தயாரித்து விற்பனை செய்பவர்கள்:

அரவிந்த் லாபரட்டரீஸ்

ஆற்காடு ரோடு :: மதராஸ்-16

அவரது மந்திர தந்திரங்களெல்லாம் தம்மைப் படத்தொழிலில் இருத்திக் கொள்ளுவதற்காகச் செய்யும் முயற்சிகளுக்கே சரியாகிவிடுகிறது. ஆதலால் உம் காதல் விஷயத்தில் அவர் உதவக்கூடும் என்று தோன்றவில்லை.

எம். கே. ரமணி (பங்களூர்)

நடிகர் ரஞ்சனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவர் மனைவியின் பெயர் என்ன? தற்போது அவர் எந்தெந்தப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்? தற்போது அவர் எங்கிருக்கிறார்?

தற்போது பம்பாயில் தங்கி சுமார் பத்து (ஹிந்திப்) படங்களில் நடித்து வரும் ரஞ்சன் விவாஹம் ஆனவரே. அவரது மனைவியின் பெயர் கமலா.

எம். ஆர். தியாகராஜன் (தஞ்சை)

தற்போது, பி. லீலா, ஜிக்கி, போன்றவர்கள் மேல்நாட்டு மெட்டுகளிலேயே பாடி வருகின்றனர். இதேபோல் நம் பாடகர்கள் அனைவருமே மேல்நாட்டு மெட்டுகளிலேயே பாடுவதென் றாகிவிட்டால், நம் தமிழ் நாடும் தமிழ்ப் பாட்டுகளும் என்ன கதி அடையும்?

என்ன கதியடையுமா! தமிழ் சங்கீதம் அந்த சித்திரவதை தாங்காமல் தற்கொலையே செய்து கொண்டுவிடும். பிறகு "தமிழிசை", "தமிழ் மாகாணம்" போன்ற கிளர்ச்சிகள் தாமாக மறைந்து போய்விடும்!

வி. எஸ். ராமன் (சென்னை)

பக்ஷிராஜாவின் "காஞ்சனா"வில், 'வைதிகமாகப் பொங்கல் வைப்பதில் தமக்கு நம்பிக்கையில்லை' என்று மாத்தூர் ஜமீன் தார் கூறுகிறார். ஆனால், தன் மகனின் ஆண்டு நிறைவு விழாவை, வைதிகப் பிராமணர் முன்னிலையில், கும்பம் வைத்து, ஹோமம் வளர்க்கச் செய்தது கொண்டாடியது எதனால்?

'யார் என்ன சொன்னாலென்ன? நான் உன்னை நிச்சயமாய் காதலிக்கிறேன்''—என்று மஹாலிங்கம் வரலக்ஷ்மிக்கு சமாதானம் கூறுகிற மாதிரி யிருக்கிறது—''சின்னதுரை''யில்.

வீட்டில் பக்தியும், வெளியில் நாஸ்திகமும் பேசும் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். அந்த ரகத்தைச் சேர்ந்தவர் போலும் ஜமீன்தார் புஷ்பநாதனும்.

ஆர். சுப்ரமண்யம் (மலாயா)

பி. எஸ். சரோஜாவின் விலாஸத்தைத் தயவு செய்து தெரிவிக்கவும்.

நெ. 29 வெங்கட நாராயண ரோடு, தியாகராய நகர் சென்னை–17 என்ற விலாஸத்திற்கு எழுதலாம்.

கா. சேக்கமுத்து (சிங்கப்பூர்)

எம். ஜி. ராமச்சந்திரனும், எம். ஜி. சக்ரபாணியும் உடன் பிறந்த சகோதரர்களா?

ஆம்; சந்தேகமன்னியில்.

எஸ். சி. ஜோன் (மலாயா)

தவமணி தேவி "சிங்களக் குயிலா" அல்லது "இலங்கைத் தமிழ்க் குயிலா?" அவர் இன்னும் இலங்கைக்குத் திரும்பாத காரணத்தை தெரிவிக்கவும்.

அவரைக் "குயில்" என்று அழைத்து தங்கள் வர்க்கத்திற்கே நீர் அவமானத்தை உண்டுபண்ண நினைப்பதாக—அசல் 'குயில்'கள் சண்டைக்கு வரக்கூடும்! இந்த இலங்கைத் தமிழ்க் "குயில்" படத்தில் நடிக்காமல் தன் காலத்தை இந்தியாவில் வீணாக்கிக் கொண்டிருப்பதற்குப் பதில் இலங்கைக்குத் திரும்பிச்சென்று அங்குள்ள தமிழர்களுக்குப் பேருதவி செய்யலாம் என்று தோன்றுகிறது.

எஸ். வி. ஜோன் (போர்ட் டிக்சன்)

டி. ஆர். மஹாலிங்கமும், பானுமதியும் சேர்ந்து ஒரே படத்தில் நடித்திருக்கின்றனரா? இல்லையென்றால் சேர்ந்து நடிக்காத காரணம் என்னவோ?

சில வருஷங்களுக்குமுன் "புலந்திரன்" என்ற படத்தில் சேர்ந்து நடிப்பதாக இருந்தனர். ஆனால் இம்முயற்சி பலிதமடையவில்லை. சந்தர்ப்பங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் நான் காரணமாகக் கூற வேண்டியிருக்கிறது.

சென்ற மாதம் வெளிவந்துள்ள "கல்யாணி" தமிழ்ப் படத்தில் பி. எஸ். சிவபாக்கியமும், பி. எஸ். சரோஜாவும் தோன்றும் இந்தக் காட்சியைக் காணலாம்.

டி. ஆர். தியாகராஜன் (தஞ்சாவூர்)

எனக்கு வயது 22. நான் டாக்டர் வேலைக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். பி. கே. சரஸ்வதி என்னை மணந்து கொள்ளுவாரா?

ஒரு வைத்தியரை வாழ்க்கைத் துணைவராகக் கொள்ள வேண்டிய அளவு பெரிய வியாதி யொன்றும் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லையே!

கே. எம். சென்னகேசவலு (செங்கற்பட்டு)

"தாசில்தார்", "ஜீவிதம்", "மனதேசம்" படங்களில் அருமையாக நடித்திருக்கும் ஸி. எச். நாராயணராவை விட்டு விட்டு "ஓர் இரவு", "காதல்" ஆகிய தமிழ்ப் படங்களில்

தமிழ் நாடகமும் வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் பக்ஷிராஜா பில்ம்ஸாரின் "காஞ்சனை" தமிழ்ப் படத்தில் திறம்பட நடித்திருக்கிறார் நடனப் புகழ் பத்மினி.

நாகேஸ்வர ராவை நடிக்கச் செய்திருக்கிறார்களே நம் படாதிபதிகள்?

"அழகிலும் சரி; நடிப்பிலும் சரி; இவ்விருவரையும் தோற்கடிக்கக் கூடிய எவ்வளவோ வாலிபர்கள் தமிழ் நாட்டில் திண்டாடிக் கொண்டிருக்கும்போது நம் படாதிபதிகள் ஏன் தெலுங்கு நக்ஷத்திரங்களை இழுத்து வருகிறார்கள்!' என்று கேட்டிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும்.

எஸ். பாண்டியர் (இரீபிட்டி, இலங்கை)

"இது நிஜமா!" பகுதியை ஏன் நிறுத்தி விட்டீர்கள்?

இது நிஜமா! இல்லை...இல்லை...மறுபடியும் அதை வெளியிடுவோம்!... கொஞ்சம் பொறும்.

கே. இளங்கீரன் (தென்காசி)

காலஞ் சென்ற பி. யு. சின்னப்பாவின் "வான விளக்கு" சினிமாத் திரையில் ஒளி வீசுமா?

சின்னப்பாவின் மனத் திரையில் ஒளிவீசிக் கொண்டிருந்த இப் படம் இனி வானுலகில் மட்டுமே ஒளி வீசக்கூடும்.

டி. எஸ். உமாபதி குருக்கள் (திருச்செங்கோடு)

"பாதாள பைரவி" படத்தில் தோட்டராமன் ராஜகுமாரியின் அந்தப்புறத்தை அடைவதற்கு அவ்வளவு பெரிய கயிறு எவ்விதம் கிடைத்தது. அந்தக் கயிற்றின் மேல் நுனியை யார் கட்டினார்கள்?

நம்ப முடியாத விஷயங்களையெல்லாம் ஒன்று சேர்த்து உருவாக்கியிருக்கும் அப் படத்தில் நீர் கயிறு விஷயத்தை மட்டும் நம்பாததுதான் ஆச்சரியம்!

எஸ். சிவலிங்கம் (தூத்துக்குடி)

வெள்ளையரை எதிர்த்துப் போராடி வீர சொர்க்கம் அடைந்த "கட்டபொம்மனின்" சரிதையை ஜெமினி ஸ்டுடியோ படமாகத் தயாரித்து வெளியிடுமா?

நம் நாடு மிக மிகப் பெருமையுடன் போற்றி வரும் சரித்திரக் கதைகளை ஜெமினி படமாக்கி வெளியிடும் என்ற நம்பிக்கையை நான் வெகு காலத்திற்கு முன்பே இழந்து விட்டேன்.

"சினிமா நாதன்" (காஞ்சீபுரம்)

"வேலைக்காரி"யில் ஏழையாக நடித்த கே. ஆர். ராமசாமி "காஞ்சனை"யில் ஜமீன்தாராக நடிப்பதில் ஏதேனும் மர்மமுண்டோ?

உமக்கு மட்டும் அந்த மர்மத்தை ரகசியமாய் சொல்லி வைக்கிறேன். எல்லாம் அந்தக் காளியின் கருணை தான்!

ஆர். ராமநாதன் (மன்னார்குடி)

லலிதா, பத்மினி இவர்கள் முதன் முதலில் தோன்றிய படம் எது? அவர்களுடைய தற்போதைய விலாஸம் என்ன?

இந்த சகோதரிகள் முதன் முதலில் தோன்றிய படம் "கன்னிகா"; விலாஸம்: எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4.

போ. லக்ஷ்மணன் (பொன்னமராவதி)

பின்னணி பாடும் வஸந்த குமாரி, டி. வி ரத்தினம் பி. லீலா, 'ஜிக்கி' இவர்கள் படங்களில் நடிக்காமல் பாடிக்கொண்டேயிருப்பது எதனால்?

பிறகு, "பின்னணியிலிருந்த இவர்களை யெல்லாம் ஏன் முன்னணியில் கொண்டு நிறுத்திக் கூத்தடிக்கிறீர்கள்!" என்று நாம் வசை பாடத் தொடங்கிவிடுவோம் என்பது நம் படாதிபதிகளுக்குத் தெரியும்!

டட் (வால்பாறை)

"ராணி" படத்தில் பாலச்சந்தர், பானுமதி, இவர்களின் நடிப்பை மிகவும் ரஸிக்கிறேன். அவர்கள் இருவருக்கும் பாராட்டுக் கடிதங்கள் எழுத நினைக்கிறேன். அவர்களது விலாஸங்களைத் தெரிவிக்கவும்.

நீர் கடிதம் எழுதாமலிருந்தால் தான் உம் பாராட்டுக்குப் பழுத ஏற்படாமலிருக்க முடியும்! நம் நக்ஷத்திரங்கள் பதில் எழுதும் வழக்கம் உடையவர்களல்ல என்பது தெரியாது போலும்.

எஸ். எம். அப்துல் ரஹீம் (கட்டிமேடு)

மனோஹர், நாகேஸ்வர ராவ், ஸ்ரீராம் ஆகிய மூவருள் அழகில் சிறந்தவர் யார்?

உம் கண்களை உபயோகிக்கக் கூடாது என்று கண் டாக்டர் தடை செய்யவில்லையே! அழகு விஷயத்தை நீரே தீர்மானித்துக் கொள்ள முடியாதா!

உறுதிக்கும் நாகரீகத்திற்கும்

மைசூர் ஸில்க்ஸ்

ஜார்ஜெட்கள், கிரேப்கள், புடவைகள், கவர்ச்சியான டிஸைன்கள்! நூதனமான வர்ணங்கள்!

கவர்ன்மென்டு ஸில்க் வீவிங் பாக்டரி,

மைசூர்.

மஹாலிங்கம், எஸ் வரலக்ஷ்மி, பாலய்யா, மாதுரிதேவி, வி. கே. ராமஸ்வாமி, சுப்பய்யா முதலியோர் நடிக்கும் "வேலைக்காரன்" தமிழ்ப் படம் இப்பொழுது பல நகரங்களில் காண்பிக்கப்பட்டு வருகிறது.


VALLI
ஸ்ரீ வள்ளி புரொடக்ஷன்ஸாரின்
வேலைக்காரன்
தமிழ்
டைரெக்ஷன்
பி.வி. கிருஷ்ணன்

இது செய்தி

சென்ற மாதம் முதல் தேதியன்று சென்னையில் கலாபிமானிகள் கழகம் என்ற புதியதொரு சமூகம் ஆரம்பமாயிற்று. இக் கழகத்தின ஆரம்ப விழா, சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் ஏ. ராமய்யா தலைமையில் நடைபெற்றது. இக்கழகத்தை ஆரம்பித்து வைத்த, பிலிம் தணிக்கை போர்டு சென்னைப் பிராந்திய அதிகாரி கே. ஸ்ரீனிவாஸன் 'நாகரீகத்தின் பெயரால் கலைக்கு இழைக்கப்படும் கேடுகளை அகற்றி, கலையைப் போற்றி வளர்ப்பது நம் கடமை' என்று குறிப்பிட்டார்.

அளவிலா உற்சாகம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபீஸ்:

28 வெங்கடாஜல முதலி தெரு.

பி. டி. சென்னை.

கிளை: 82 காக்டுபிள்ளையார் கோயில் தெரு.

ஜி. டி. சென்னை.

— 89 பாண்டி பஜார், —

தியாகராயநகர், : : சென்னை—17.

சென்ற மாதம் 12ம் தேதி அலகாபாத்தில் சலவைத் தொழிலாள ஸ்திரீகள் மகாநாடு நடைபெற்றது. தற்கால சினிமாக் காட்சிகளால் சமூக வாழ்வில் ஏற்படும் கெடுதல்கள் விவாதிக்கப்பட்டன. அம்மாதிரிக் காட்சிகளை பகிஷ்கரிப்பதென்றும், இந்த முடிவை மீறி படம் பார்க்கச் சென்றால் அவர்களை சமூகத்திலிருந்து பிரஷ்டம் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறந்த படம் "சம்சாரம்"

தமிழ்நாடு சினிமா ரசிகர்கள் சங்கத்தின் சார்பாக மே மாதத்தில் மதுரை, தூத்துக்குடி ஆகிய இரு நகரங்களிலும் 1951-ம் வருடத்திய சிறந்த படம், நடிகர், நடிகை ஆகியோரைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்தல் நடைபெற்றது. இரு ஊர்களிலும் சேர்ந்து மொத்தம் 8 240 வோட்டுகள் பதிவாகியிருக்கின்றனவாம் "சம்சாரம்", எம். கே. ராதா, புஷ்பவல்லி, ஆகியவர்கள் முறையே சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை என ரஸிகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சர்க்கார் பரிசுத் திட்டம் ரத்து

சென்னை மாகாணத்தில் வருஷா வருஷம் சிறந்த சினிமாப் படங்களுக்கும் சிறந்த நடிகர் நடிகைகளுக்கும் பரிசுகளும் மெடல்களும் வழங்கிவந்த திட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டாமென்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர். பரிசு வழங்கும் திட்டம் 1951 ஜூலை மாதம் பிறப்பிக்கப்பட்ட ஒரு சர்க்கார் உத்தரவின்படி ஆரம்பிக்கப்பட்டதாகும்.

நாடகத்துக்குத் தடை

"விபீஷணன்" அல்லது "மறுமலர்ச்சி" என்ற தமிழ் நாடகத்தை, சென்னை ராஜ்யத்தில் எந்தப் பொது இடத்திலும் நடிக்கலாகாதென சர்க்கார் தடை

செய்திருக்கின்றனர். இந்த நாடகம் பள்ளிகொண்டாவில் கே. எஸ். ஆர். நாடகசபையால் நடத்தப்படவிருந்தது.

மூன்று பிள்ளைகள்

இரண்டு பிள்ளைகளைச் சின்னமாகக் கொண்ட ஜெமினி "மூன்று பிள்ளைகள்" படத்தின்மூலம் வெற்றியின் மற்றொரு படியில் ஏறிவிடும் என்று தெரிகிறது. உள்ளம் உருக்கும் கதைப் போக்கு அமைந்தது "மூன்றுபிள்ளைகள்." தாயின் தியாக ஹிருதயமும், தந்தையின் குற்ற முள்ள ஹிருதயமும் படத்தின் ஜீவநாடியாக இருக்குமெனத் தெரிகிறது. தாயாக வரும் கண்ணாம்பா இப் படத்தின் மூலம் பிரமாதமான புகழை அடையக் கூடும். தனது மூன்று பிள்ளைகளுக்காக தாய் பாடுபடுவதும், அவர்களில் இருவரால் உதாசீனம்செய்யப்படுவதும், கடைசிப் பிள்ளையின் வாஞ்சையால் திடிப்பதுட், ஆகப் பல உணர்ச்சிகளைத் திறம்பட வெளிப்படுத்தி யிருக்கிறாராம் கண்ணாம்பா. அதிகமாய் பேசாமலே. குற்றம் செய்துவிட்டு வேதனைப்படும் தந்தையாக தமது உயர்ந்த நடிப்பின் மூலமே நாகேந்திர ராவ் சபாஷ் பெறப் போகிறாராம். கடைசிப் பிள்ளையாக வரும் ஸ்ரீராமின் புகழை இப்படம் மேலும் உயர்த்தி விடுமாம். எல். நாராயண ராவ் ஒரு பட முதலாளியாக வந்து ஹாஸ்யத்தை அள்ளிவீசி யிருக்கிறாராம். அவர் பாடியிருக்கும் "அப்பப்பா" பிரமாதமான ஒரு அம்சமாக இருக்குமாம். இம் மாதம் தமிழ் நாடெங்கும் திரையிடப்படும் இந்த ஜெமினி சித்திரம் மக்களின் ஆதரவை நிறையப் பெறுமென்று தெரிகிறது.

" பர்ச்சாயின் "

டைரெக்டர் வி. சாந்தாராமின் படங்களென்றாலே ரஸிகர்கள் அதை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். அவரது டை

"பெண்கள் வற்புறுத்த முனைந்தால் ஆண்கள் பாடு திண்டாட்டந்தான!"—எம். எஸ். பிக்சர்ஸ் வெளியிட்டான "சின்னதுரை" தமிழ்ப் படத்தில் டி. ஆர். மஹாலிங்கத்தை அவர் இஷ்டத்துக்கு மாறாக நடக்கும்படி வற்புறுத்துகிறார் ஸி. ஆர். ராஜகுமாரி.

என். எஸ். நாராயண பிள்ளையும், எம். வி. ராஜுவும் தோன்றும் இக் காட்சியை பெலிகன் பிக்சர்ஸின் "புயல்" படத்தில் பார்க்கலாம்.

ரெக்ஷனில் தயாராகியுள்ள "பர்ச்சாயீன்" சென்ற மாத இறுதியில் பம்பாயில் திரையிடப் பட்டது. படத்தை வி. சாந்தாராம் டைரெக்ட் செய்திருப்பதுடன் பிரதம பாகத்தில் அவரே நடித்திருக்கிறார். ராஜ்கமல் கலா மந்திரின் தயாரிப்பான இப் படத்தில் அவருடன் கூட அவரது மனைவி ஜயஸ்ரீ, மகள் சரோஜா ஆகிய இருவரும், மற்றும் லலிதா பவர், வஸ்தி ஸந்தியா ஆகியோரும் நடிக்கின்றனர். பெங்களூர், அலங்கார சித்ரா கம்பெனி மூலம் இப்படம் வெகு விரைவில் எங்கும் திரையிடப்பட விருக்கிறது.

பத்திரிகைக் காட்சிகள்

சென்ற மாதம் *11*ம் தேதி, பக்ஷிராஜா ஸ்டுடியோவின் "காஞ்சனா" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது. அநேகமாக தமிழ்ப் பட நடிகர்களேதான் நடித்துள்ளனர். பி எஸ் ஞானத்திற்கு பதில் ருஷ்யேந்திரமணி அந்த பாகத்தில் நடித்திருக்கிறார். அன்று, சென்னை சினிமா ரஸிகர் சங்கத்தினர், தாங்கள் நடத்திய தேர்தலில் வெற்றி பெற்ற "ஏழை படும் பாடு" படத்தைத் தயாரித்த ஸ்ரீராமுலு நாயுடுவுக்குச் சேர வேண்டிய பரிசுப் பதுமையை அளித்தார்கள். பரிசை, "காஞ்சனா" படத்தின் கதாசிரியை "லக்ஷ்மி"யைக் கொண்டு அளிக்கச் செய்தார்கள்.

14-ம் தேதி யன்று பரணி பிக்சர்ஸாரின் "காதல்" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி, சென்னை கெயிட்டியில் நடைபெற்றது.

*15*ம் தேதி, நியூ எல்பின்ஸ்டன் தியேட்டரில் 'டிடக்டிவ் ஸ்டோரி' (துப்பறியும் கதை) என்ற ஆங்கிலப் படம் பத்திரிகைக்காரர்களுக்குத் திரையிட்டுக் காட்டப்பட்டது. இது வில்லியம் வைலர்ஸ் தயாரிப்பு; பாரமவுண்ட் பில்ம்ஸ் வெளியீடு.

ரஞ்சன் டைரெக்டராகிறார்

பல ஹிந்திப் படங்களில் நடித்துவரும் நடிகர் ரஞ்சன் இப்பொழுது டைரெக்டராகவும் மாறியிருக்கிறார். "ஹாவெலி"

என்ற படத்தை அவரே டைரெக்ட் செய்யப் போகிறாராம். படத்தில் அவருடன்கூட ஷிபாமா, பரத் பூஷன், ஜகதீஷ் சேத் மஞ்ஜு ஆகியோர் நடிப்பார்கள்.

யாத்ரீக்

கல்கத்தா, நியூ தியேட்டர்ஸாரும் தென்னாட்டுப் பட மார்க்கெட்டில் போட்டியிடத் தீர்மானித்துவிட்டனர். அவர்கள், தாங்கள், வங்காளம்-ஹிந்தி இரு பாஷைகளிலும் தயாரித்துள்ள "யாத்ரீக்" என்ற படத்தை தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தை தமிழ் நடிகர்களைக் கொண்டே தயாரிப்பார்களென்றும், தமிழ்ப் படத்தை ஹிந்தியில் 'டப்' பண்ணுவார்களென்றும் தெரிகிறது. ஒரு யாத்ரீகனைப் பற்றியதாம் இப்படத்தின் கதை. இப்படத்திற்கென சில நடிகர்களைத் தேர்ந்தெடுக்கவும், ஆதி சங்கரர் பற்றிய தகவல்களை அறியவும், படத்தின் டைரெக்டர் இம்மாதம் தமிழ் நாட்டுக்கு வருவாரென்று தெரிகிறது.

தமிழ் நாட்டின் அழைப்பு

சென்னைப் படாதிபதிகள் பலர் ஹிந்திப் படங்களைத் தயாரிக்கத் துணிந்திருப்பதுடன், அசல் ஹிந்தி நடிகர்களை அழைப்பதிலும் முனைந்திருக்கிறார்கள். ஜெமினி ஸ்டுடியோவினர், தாங்கள் அடுத்துத் தயாரிக்கப் போகும் ஹிந்திப் படங்களுக்காக வட நாட்டினர் இருவரை ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் மிருதுளா. இவர் பம்பாய் டாக்கீஸின் மாஜி நடிகை. மற்றொருவர் அம்ருத். இவர் ஜெமினி படங்களில் குரல் இரவல் கொடுப்பாராம்.

தென்னாட்டுப் படாதிபதியின் அழைப்பைப் பெற்றுள்ள மற்றொரு வட நாட்டு நக்ஷத்திரம் பரத் பூஷன். இவர் ஏவி. எம். தயாரிக்கும் "லட்கி" (பெண்) ஹிந்திப் படத்தில் கதாநாயகனாக நடிக்கப் போகிறாராம்.

விஜயா புரொடக்ஷன்ஸின் அதிபர் நாகி ரெட்டி தாம் தயாரிக்கப்போகும் ஹிந்திப் படங்களுக்கென பம்பாய் படங்கள் சிலவற்றில் நடித்துள்ள விமலா என்ற நடிகையை ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்.

[மற்ற செய்திகள் 70-ம் பக்கத்தில்]

"வரிகொடா இயக்கம் தொடங்குவோம்"

படாதிபதிகள் மஹாநாட்டில் ஒரு படமுதலாளியின் கர்ஜனை

படாதிபதிகள்—விநியோகஸ்தர்களின் முதல் மகாநாடு சென்ற மாதம் 15ந் தேதி தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் ஆதரவில் நடைபெற்றது. இந்த மகாநாட்டிற்கு ஏ. ராமய்யா தலைமை வகித்தார்.

தலைவர் ஏ. ராமய்யா எல்லோரையும் வரவேற்றுப் பேசியதாவது :—"நமது முன்னேற்றத்திற்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. இப்பொழுது சினிமாத் தொழில் சம்பந்தமாக உள்ள நிலைமையை நாம் பரிசீலிக்க வேண்டும். சர்வதேச ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் ஸ்தாபிக்க இது ஒரு சாதனமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டின் ஏக மனதான தீர்ப்பால் சினிமாப்பட சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டிருப்பது ஒரு பெரிய சரித்திரப் பூர்வமான தீர்ப்பு என்றே நான் கருதுகிறேன். இந்தத் தீர்ப்பை அனுசரித்து உலகத்திலுள்ள எல்லா சர்க்கார்களும் நடந்துகொள்ளுவார்கள் என்றே நான் நம்புகிறேன். நமது மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் இத்தீர்ப்பிற்கு மதிப்பு வைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இத்தொழில் விரும்பத்தக்க முறையில் வளராததற்கு சர்க்காரின் அலட்சியமும், அசிரத்தையும் தான் காரணம் என்று பிலிம் விசாரணைக் கமிட்டி வற்புறுத்தியிருக்கிறது.

பொறுப்புள்ள அதிகாரிகள் நமது தொழிலை பற்றிக் கேவலமாகப் பேசுவதைக் கேட்க மனதுக்கு வேதனை ஏற்படுகிறது. சமுதாயத்தின் க்ஷேமத்திற்காக இத்தொழில் தன்னலான கைங்கரியத்தை எந்த விதமான பிரதிப் பிரயோஜனத்தையும் பெருமல் செய்து வருகிறது. இதற்குக் கைம்மாருக நாங்கள் செய்யும் பல தர்ம காரியங்களுக்கும் ஒரு ஆதரவான வார்த்தை கூடக் கிடையாது. இத்தொழில் சம்பந்தமாக அவர்களுக்குள்ள விருப்பு வெறுப்புகளை அகற்றிவிட்டு, பொதுஜனத் தொடர்புக்குச் சாதனமாக இதை நன்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம். பிலிம் விசாரணைக் கமிட்டி சிபார்சுகளை ஆதாரமாகக் கொண்டு இத்தொழிலுக்குவேண்டிய நிவாரணமளிக்க வேண்டுமெனவும் இந்த ராஜ்யத்திற்கு சேவை செய்வதல் நாங்களும் அத்யந்த பொறுப்பும், அந்தரங்க சுத்தியும் உடையவர்களாக இருக்கிறோமென்பதையும் ராஜாஜி சர்க்காரும் இந்திய சர்க்காரும் உணர வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

டி. வி. சுந்தரம் பேசுகையில், சினிமாத் தொழிலுக்குள்ள சக்திகளை சர்க்கார் உணர்ந்து கொள்ள வில்லையென்றும், இத் தொழில் கண்ணியமான பொறுப்புள்ளதென்றும். இந்தத் தொழில் ஒருக்காலும் அழியாமல் ஸ்திரமாக இருக்குமென்றும், ராஜாஜி போன்றவர்கள்கூட இதற்கு எதிராகப் பிரசாரம் செய்த போதிலும், இதை அசைக்க முடியாதென்றும், எனவே நியாயம் வழங்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாயும் கூறினர்.

டைரெக்டர் கே. சுப்பிரமண்யம் இரண்டு மூன்று வருஷத்திற்கு முன்னிருந்த ஒற்றுமை இப்பொழுது தங்களிடையே இல்லையென்றும், நல்ல ஸ்திதியிலுள்ள ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் தனிப்பட்ட படாதிபதிகளுடன் ஒத்துழைப்பதில்லையென்றும் பரஸ்பர நல்லுணர்ச்சியும், கூட்டு முயற்சியும் இருந்தால் எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமென்றும், மேலும் டெக்னிஷியன்களுக்கும் உற்பத்தியாளர்களுக்குமிடையே நல்லுணர்ச்சியையும், ஐக்கிய பாவத்தையும் உண்டு பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், தவிர, சினிமா நக்ஷத்திரங்கள், உற்பத்தியாளர்கள், முதலியவர்களைத் தாக்கி ஆபாசமாக எழுதும் சாக்கடைப் பத்திரிகைகளை ஆதரிக்கக் கூடாதென்றும், தங்களது நடவடிக்கைகளைத் தெரியப்படுத்துவதற்கு தாங்

களே சொந்தப் பத்திரிகையொன்றை நடத்த வேண்டுமெனவும், ஏதாவது தர்ம கைங்கர்யம் செய்ய வேண்டுமென்ருல் டிரஸ்டிகளடங்கிய மத்ய ஸ்தாபனமொன்றை ஏற்படுத்தி அதன் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்றும், கே. சுப்ரமண்யம் குறிப்பிட்டார்.

கே. ராம்னுத் பேசுகையில், சினிமாத் தொழில் ஓர் ஸ்திரமான தொழிலென்றும், அரசாங்க உதவியின்றியே நடை

பத்மனுபன் பேசுகையில் ஒரே நடிகையை பல படங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்வதிஞல் படம் தோல்வியடைவதோடு நடிகைகளுக்கு அதிகப் பணமும் கொடுக்க வேண்டியதாகிறது என்றும், இதை கூடிய அளவுக்கு படமுதலாளிகள் குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பிறகு, புல்லய்யா, ஓம் பிரகாஷ் முதலியோரும் பேசினர்.

''என தங்கை''யில் தாலியை வாங்கிச் சென்று 'ரேஸ் ஆடுவ'தில் அவ்வளவு ஆனந்தம் நரசிம்ம பாரதிக்கு, பாவம், அந்த 'ஆனந்த'தில் பங்கு கொள்ள முடியவில்லை மாதுரி தேவியால்!

பெற முடியுமெனவும் கூறினர். தனிப்பட்ட முதலாளிகள் படம் எடுப்பதில் உள்ள சிரமங்களை அவர் விளக்கினர். 'படத் தொழில் மூலமாக கோடிக் கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கையில், அதன் அபிவிருத்திக்கு சர்க்கார் உதவாவிடில், அதை எதிர்த்து வரிகொடா இயக்கமொன்று நடத்தப்பட வேண்டும்' என்று' கெம்ப்ராஜ் பேசுகையில் கூறினர். படத் தணிக்கை கட்டுப்பாட்டை கெம்ப்ராஜ் எதிர்த்தார்.

இந்த மகாநாடு சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது :—

பிலிம்கள் மீதுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கி பிலிம்கள் உபயோகத்தில் ஒரு புதிய சகாப்தத்தை சர்க்காரும் சட்ட சபைகளும் ஏற்படுத்த வேண்டும். கருத்துக்களை வெளியிடுவதற்கு பிலிம் ஒரு சிறந்த சாதனமாகையால், அரசியல் சட்டத்தில் உத்தரவாதம் செய்யப்பட்

[தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்]

"மக்களுக்கு சினிமா மிக அவசியம்"

ராஜாஜியின் அபிப்பிராயத்திற்கு டைரெக்டர் ராம்னுத் கண்டனம்

சென்ற மாதம் முதல் தேதி ஸினி டெக்னிஷியன்கள் சங்கத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. டைரெக்டர் கே. ராம்னுத் தலைமை வகித்தார். வெற்றிகரமான படத்தைத் தயாரிக்க வேண்டிய அத்தியாவசிய சாதனங்கள் எவை என்பது குறித்து சினிமாப்பட பிரமுகர்கள் விவாதித்தனர். தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் ஏ. ராமய்யா பேசுகையில். ஓர் சிறந்த படத்தைத் தயாரிக்க நிறையப் பணமும், சிறந்த தொழில் நுணுக்க சிப்பந்திகளும், அவர்களிடையே ஒற்றுமையும் அவசியமென்று குறிப்பிட்டார். படம் வெற்றி அடைய அரசாங்க ஆதரவும் சிறிதளவு தேவையாகும் என்று அவர்சொன்னார். டைரெக்டர் நாகேந்திர ராவ் பேசுகையில் பொழுது போக்கான படங்களையே பொது மக்கள் விரும்புகின்றனர் என்றும், தமாஷான படங்களும் வெற்றி பெற்று விடுமென்று கூறுவதெல்லாம் வெறும் குருட்டு நம்பிக்கை என்றும் கூறினர். 'சினிமாக்களைப் பார்க்க வருபவர்கள் நீதியையோ, புத்திமதியையோ கற்றுக் கொள்ள வருவதில்லை; அல்லது சினிமாக்களைப் பார்த்து சன்யாசிகளாகவோ, துறவிகளாகவோ பொது மக்கள் மாறிவிடுவதுமில்லை; பொது மக்கள் சினிமாவுக்கு பொழுது போக்கவே வருகின்றனர். என்றும் சொன்னர்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்டு, ஆப்பிரிக்காவில் காட்டப்பட்ட இந்தியப் படங்களில் ஜெமினி "சம்சாரத்"திற்கே அதிகப் பண வசூலும் பொதுஜன ஆதரவும் கிடைத்துள்ளது என்று ஆப்பிரிக்காவிலுள்ள தமது சகோதரர் கடிதம் எழுதியுள்ளதாக நாகேந்திர ராவ் சொன்னர்.

தெலுங்கு "சம்சாரம்" கதையை எழுதிய சதாசிவ பிரம்மம் பேசுகையில், ஆபாசக் காட்சிகளைக் கொண்ட படம் எளிதில் வெற்றி பெறும் என்று கூறப்படுவதைக் கண்டித்தார். பிறகு எஸ். பாலசந்தர், இந்திர சென், பி. வி. ஸி. ராவ் ஆகியோரும் பேசினர்.

தலைமை வகித்த பிரபல டைரெக்டர் கே. ராம்னுத் பேசுகையில் கூறியதாவது:—'வேலையைவிட ஓய்வே மனிதனை உருவாக்குகிறது. உண்மை இவ்வாறிருக்கையில் ஓய்வு கொள்ள வேண்டாமென்றும், சினிமாவும் பொழுது போக்கும் கொள்ள வேண்டாமென்றும் ஸ்ரீ ஆச்சாரியார் போன்றவர்கள் போதிப்பது அபத்தமானது. ஆச்சாரியார் போன்றவர்களுக்கு பலவகைகளில் பொழுது போக்க வசதியுள்ளது. ஆனல், சாதாரண மனிதனின் மனச் சாந்திக்கும் பொழுது போக்குக்கும் சினிமா மிக அவசியம்.'

மந்திரி மாணிக்கவேலர் பேசுகையில், தாம் இதுவரை வருஷத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை சினிமா பார்ப்பது வழக்கமென்றும், இனி அடிக்கடி சினிமா பார்க்கப்போவதாகவும் கூறினர். தமாஷா வரி விதிக்க வேண்டாம் என்று கேட்கப் பட்டதற்கு மாணிக்கவேலர் பதிலளிக்கையில், 'எல்லோரும் வேண்டுமென்று கேட்கும்போது நீங்கள் மட்டும் ஏன் வேண்டாமென்று கோருகிறீர்கள்?' என்று கேட்டார். தமிழ் சினிமாக்களில் ஆடையலங்காரம், சங்கீதம், இவை சிறந்ததாக இல்லை என்று மந்திரி சொன்னர்.

டுள்ள பேச்சு, பத்திரிகைச் சுதந்திரத்தை சினிமாவுக்கும் அளிக்க வேண்டும். பார்லிமெண்டின் சென்ற கூட்டத்தின் முடிவில் நிறைவேற்றப்பட்ட 1952-ம் வருஷத்திய ஸினிமேட்டகிராப் சட்டத்தைப் பற்றி மகாநாடு தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டது. பிலிம்கள் மீது வருமான வரியை விதிக்கும் இப்பொழுதுள்ள முறை உற்பத்தியாளருக்கு அதிக கஷ்டத்தையும் அநீதியையும் விளைவிக்கிறதென்றும், இம்முறையைத் திருத்தி அமைத்து நியாயமான ஒரு முறையைக் கையாளுமாறு மகாநாடு ஒரு தீர்மானத்தின் மூலமாகக் கேட்டுக் கொண்டது. தமாஷா வரியை குதிரைப் பந்தய வரிபோன்று 12½ சதவிகித அளவுக்குக் குறைக்கவேண்டுமென மகாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

செழிப்பும், சிறப்பும் கூடிய பி. கே. சரஸ்வதி தற்போது நேஷனல் புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் "மாப்பிள்ளை" தமிழ்ப் படத்தில் நடித்து வருகிறார்.

ராகினி பிலிம்ஸார் தயாரித்து வரும் "தர்ம தேவதா" தமிழ் - தெலுங்குப் படங்களில் பிரபல பத்மினி நூதன நடனம் ஆடுகிறார்.



நீலகிரியின் உச்சியில் எம்.ஜி. ராமச்சந்திரன்
இப்படிக் கவலையுற்ற முகத்துடன் சிந்தனை
யிலிருப்பது அந்த "பணக்காரி"க்காகத்தான்.

"சிங்காரி"யில் தோன்றிய அதே காமிக் ஜோடி (எம். எஸ். எஸ். பாக்கியம்—பாண்டியன்) நேஷனலின் இரண்டாவது படமான "மாப்பிள்ளை"யிலும் தோன்றி நம்மை பிரமிக்க வைப்பார்கள்!

பொதுஜனம் பேசுகிறார்

134136

கவலைப்படுகிறோம்

தூங்கிக் கொண்டிருந்த நாடகக் கழகம் திடீரென்று விழித்துக் கொண்டு, பல் வேறு காரியங்களையும் நடத்தப் போவ தாக அறிவித்திருப்பதுடன், என் எஸ். கிருஷ்ணனை அதன் தலைவராக நியமித் திருப்பதாகவும் அறிவித்திருக்கிறது.

ரஷ்யா சென்றுவிட்டு வந்த என். எஸ். கிருஷ்ணன், அங்கிருக்கும் கலை சம் பந்தப்பட்ட விஷயங்களைப் பேசாமல் அரசியல் வட்டாரத்தில் புகுந்து குழப் பம் செய்ததோடு, நாஸ்திகப் பிரசாரத்தி லும் இறங்கினார் என்பது நாடறிந்த விஷயம். இம்மாதிரி, சம்பந்தப்பட்ட விஷயங்களிலே கவனத்தைச் செலுத்தா மல், சம்பந்தமில்லாத விஷயங்களிலே கவனத்தை செலுத்தும் என் எஸ் கேயை நாடகக் கழகத் தலைவராகத் தேர்ந்தெ டுத்தது எந்த நோக்கத்தைக் கொண்டு என்று புரியவில்லை. இதுவரை வெளி வந்துள்ள என். எஸ். கே. நடித்த பெரும் பான்மையான படங்களில் சம்பந்த மின்றி நாஸ்திகப் பிரசாரத்தைப் புகுத்தி யிருக்கிறார். என். எஸ். கே. நடிக்கும் படம் என்றால் அதில் கட்சிப் பிரசாரம் மலிந்திருக்கும் என்று பிறந்த குழந்தை கூட கூறும் நிலைமைக்கு வந்துவிட்டது.

இந்நிலையிலே, 'கட்சிப் பிரசாரத்தி லேயே ஊறிப்போன என். எஸ். கிருஷ் ணனின் தலைமையில் நாடகக் கழகமும் நாளடைவில் கட்சிப் பிரசாரக் கழகமாக மாறிவிடக் கூடாதே!' என்று தான் நாடக அபிமானிகள் கவலைப்படுகின் றனர்."

"கலாராஜன்", மதுரை.

*கார் மோதும் படலம்

ஒரு படத்தில் பார்த்த காட்சியை, மறு முறை வேறு ஒரு படத்தில் பார்க்கும் போது ரஸிகர்களுக்கு வெறுப்பு ஏற்படு கிறது. உதாரணமாக, கார் மோதும் படலத்தை எடுத்துக் கொள்வோம். முதலில், "வாழ்க்கை'யில் மீனாட்சிமீது கார் மோதி பிறகு படம் ஓடுகிறது. "பிச்சைக்காரி"யில் திக்குரிச்சியின் மீது கார் மோதவும்; அவருக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. "அம்மா"வில் சாந்தகுமாரி மீது காரை மோத விட்டிருக்கிறார் டைரெக்டர். "தேவகி"யில் தேவகியின் குழந்தைமீது கார் மோதி இறந்து, பிறகு டைரெக்டர் கருணையாலும், கதா சிரியரின் கற்பனையாலும் குழந்தை உயிர் பெற்றெழுகிறது. "சிங்காரி"யில் தங்கத் தின் மீது (பிறகு பத்மினி) கார் மோத அதனைத் தங்கம் பணக்காரர் மகளாகி றாள்! "அண்ணி"யில் சேதுவின் மேல் காரை மோதி கதையை ஓட்டுகிறார்கள். "தாய் உள்ள"த்தில் டைரேக்டர் 'தவறு' தலாக காரின்மீது காரை மோதுகிறார். பிறகு தன் தவறை உணர்ந்து, குழந்தை மேல் தாய்க்குள்ள அன்பைக் காட்ட காரை மோத முயற்சிக்கிறார். இப்படல த்தை படத்தில் புகுத்துவதில் தானும் மட்டமில்லை என்ற நினைப்பாலோ என்ன வோ, 'கைதி"யில் பாலச்சந்தர் தன்மீதே காரை மோதிக்கொண்டு கதையை ஓட்டு கிறார். இந்தக் காப்பி அடிக்கும் முறையை ஹாஸ்யத்தில் புகுத்த முடியும் என்று ஓர், இரவி'ல் காட்டுகிறார்கள். "அந்த மான் கைதி"யில்கூட லீலாமீது ஐம்பு, அவளுக்கு அடி படாமல், காரை மோது கிறான. சில படங்களில் மட்டுமே, கார்

* பரிசு பெற்ற கடிதம்: டி. வி. சேஷாத்திரி, கும்பகோணம்.

மோதும் காட்சி நன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. பல படங்களில் இது அனாவசியமாகப் புகுத்தப் பட்டிருக்கிறது. இந்தப் பத்து படங்களின் கார் மோதலில் ஒருவராவது இறக்கவில்லை. கதாபாத்திரங்கள்மீது அதிர்ஷ்டத்தைத்தான் மோதுகிறார்கள்; காரை மோதவில்லை! இனியாவது, இந்த காப்பியத்தை டைரெக்டர்கள், கதாசிரியர்கள் திருத்தி என் போன்ற ரஸிகர்களுக்கு தலைவலி உண்டாக்காமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

டி.வி.சேஷாத்திரி,
குடந்தை.

"தீபாவளி" ஐந்து மாதங்களுக்கு அப்புறம் அல்லவோ வருகிறது அதுவரையில் வேலையில்லாமல் எப்படிக் காலந் தள்ளுவது?" என்று கவலைப் படுகிறாரோ எம். வி. ராஜம்மா "புயல்" படத்தில்.

மாட்டார்கள் என்று—நம் கலையை இழிவாகக் கூறும் நபர்களுக்கு—பதிலளிக்கும் இம்முயற்சி பன்படங்கு சிறப்புடன் பெறுக வேண்டும். தமிழ்ப் பட முதலாளிகள். இனியேனும் சரித்திர, கலாச்சார சமூக தமிழ் நாவல்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து திரைப்பட உலகிலும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வார்கள் என்று நம்புகிறேன். நம் கலைத் திறமையைக் கண்டு பொறாமைப்பட்டு, பிற மொழியாளர்கள் வெட்கித் தலை குனியும்அளவுக்கு நம் தமிழ்ப் படம் சிறப்புற வேண்டும் என்பதே என் அவா.

ஆர். தங்கவேலன்,
திருச்சி

முழக்கம் செழிக்க

தமிழ்ப் பட உலகில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்பதற்கான சூழ்நிலை தென்படுகிறது. "லக்ஷ்மி"யின் "காஞ்சனா" வெளிவந்திருப்பது தொடர்கதை-நாவல்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியே "திகம்பரசாமியார்", "மோஹன சுந்தரம்" போன்ற துப்பறியும் கதைகள் படமாக்கப் பட்டதிலிருந்து, "ராஜாம்பாள்", "சின்னத்துரை" போன்ற நாவல்களுக்கும் நல்ல மதிப்பு ஏற்பட்டது. அதே போல் "காஞ்சனா"வைத் தொடர்ந்து மற்ற சிறந்த நாவல் ஆசிரியர்களின் கதைகள் திரைப்படமாக ஒளிவீசும் என்று பூரணமாக நம்பலாம். இவ்வித நற்செய்கைகளால் தமிழ் இலக்கிய எழுத்தாளர்களிடம் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டு, அமர இலக்கியங்கள் உற்பத்தியாக வகை உள்ளது. தமிழர்கள், ஆங்கிலப் படத்தைத் தமிழாக்கவும், சகோதர மொழிப் படங்களைத் தமிழ் பேசச் செய்யவும் திறமை பெற்றிருந்தார்கள். அதோடு சுயமாக-தமிழ் இலக்கியங்களைத் திரைப் படங்களாக்கவும் தயங்க

எதிர்க்கவே செய்வர்!

நாடகக் சமூகம் நாட்டிற்கு நல்ல பணி புரியும் என நம்பினோம். நாடகத்தில் நடிக்கும் தொழிலை விட்டால் வாழ வசதியில்லை என இருக்கும் நாடகத் தொழிலாளர்களுக்கு பக்க பலமாக இருந்து அது பாதுகாப்புக் கொடுக்கும் என்று பகற்கனவு கண்டோம். ஏழை எழுத்தாளர்களுக்கு — ஏற்றத்தை எதிர்நோக்கி வறுமையிலும் எழுத்துப் பணிபுரியும் தூய உள்ளம் படைத்த நாடகாசிரியர்களுக்கு — தக்கபடி துணை புரியும் என எதிர்பார்த்தோம் கள்ளமில்லாக் கலைஞர்களைத் தயார் செய்து மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்து. தெள்ளமுதத் தமிழ் திக்கெட்டும் பரப்பும் என மனப்பால் பருகினோம். பார்த்தோம்; படோடோபமான விளம்பரத்தைத் தவிர, பயனுள்ள காரியம் எதவும் பாராட்டத் தக்க வகையில் நடைபெறவில்லை என்பதை! முன்பு கழகத் தலைவராக இருந்தவர் கட்சிப் பற்றில்லாக்

கலைஞராக இருந்தபடியால், கழகம் உருப்படலாம் என ஓரளவு எதிர்பார்த்தோம். ஏதோ அவர் தலைவராக இருந்த சமயம் பாராட்டத் தக்க வகையில் இரண்டொரு அறிக்கைகளாவது விட்டார்! ஆனால், இப்பொழுதோ திரை மறைவில் தில்லுமல்லுகள் எவ்வளவோ கழகத்தின் பெயரால் நடைபெற்றுள்ளன என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. என். எஸ். கிருஷ்ணன் புது வருடத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் யாருடைய நன்மைக்காகப் பாடுபடுவார் என்று நம்பித் தேர்ந்தெடுத்தார்களோ நாம் அறியோம். இப்பொழுதே நாடகக் கழகத்தை வேண்டிக்கொள்கிறோம். சமகத் தலைவர் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு நாடகக் கலைக்கு அவமானம் ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் தொடங்கப் பெறுமேயானால் நாட்டில் ரஸிகர்களிடம் கொந்தளிப்பு ஏற்பட்டே தீரும். கண்டவற்றை உளறி கலைக்குக் கெட்டபெயர் ஏற்படும் வகையில் ஏதாவது காரியங்கள் நடைபெறுமே யானால் ரஸிகர்கள் கண்டித்தே தீருவர். கலைப் பயிரிலே காளான் செடிகள் வேறான்றுவதை ரஸிகர்கள் விரும்பமாட்டார்கள்; எதிர்க்கவே செய்வர்.

எம். எம். பொன்னுசாமி, கரூர்.

பாராட்டுகிறேன்

ராயலசீமா பஞ்ச நிவாரண நிதிக்காக, நக்ஷத்திர நடிகர்கள் சிலர் சென்னையில் கூடி, ஒரு காட்சியை நடத்தி, நிதி சேர்த்தார்கள். வி. நாகய்யா முயற்சித்து 'ஜீவபூமி'' நாடகம் மூலம் நிதி சேர்த்தளித்தார். இவை மெச்சத் தகுந்த நற்காரியங்களே. இதேபோல், நம் தமிழ் நாட்டில் தாராபுரம், உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. ராயலசீமாவுக்த உதவியதே போன்று நாடகங்களையும் விழாக்களையும் நடத்தி நிதி சேர்க்க மேற்கூறிய நக்ஷத்திரங்கள் முன் வருவார்களானால் மிக உதவியாயிருக்கும். அதுமற்றுமுள்ள பல நக்ஷத்திரங்களுக்கு ஒரு படிப்பினையாகவும் இருக்கும்!

பெ. ந. நாகராஜன், கொடுமுடி.

பின்பற்றட்டும்!

சமீபத்தில் நான் "மறைந்த சாம்ராஜ்யம்" என்ற செய்திப் படத்தைப் பார்த்தேன். அது கி. பி. 1336 ல் ஹரிஹரா, புக்கா சகோதரர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, 1565 ல் தலைக்கோட்டைச் சண்டையின்போது அழிந்த விஜயநகர ராஜ்யத்தைப் பற்றியது. அந்தச் செய்திப் படத்தில் விஜயநகர சாம்ராஜ்யம் தோன்றுதல், தோற்றுவித்தவர்கள், அதன் அரண்மனை அமைப்பு, சிற்பச் சிறப்பு, கோயில்கள், பிரதான வீதிகள் ஆகியவை விரிவாகச் சித்தரித்துக் காட்டப்பட்டன. குறிப்பாக அந்த ராஜ்யத்தின் சிற்பச் சிறப்பு மிகவும் அழகாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது. இதில் இன்னுமொரு விசேஷம் என்னவெனில், பின்னணி வியாக்யானம் செய்யப்படும் வசனம் உணர்ச்சி மிக்கதாக இருக்கிறது. உதாரணமாக, நீர்த்தேக்கமொன்றைக் காட்டி, 'மடிந்து போன அந்த அழகிய நாரீமணிகளின் சுந்தர உருவங்கள் இனி இந்த நீரில் தெரியாது' என்று பேசுவதைக் கேட்டதும் நாம் இந்த உலகத்தையே மறந்து விடுகிறோம்! இப்படி உணர்ச்சிகரமான வசனத்தைக் கேட்கும்போதுதான் படத்தில் நம் கவனம் அதிகமாக விழுகின்றது. படிக்காதவர்களுக்குங்கூட சரித்திரக் கல்வியை எளிதில் ஊட்ட இத்தகைய படங்கள் மிகவும் தேவை. வெறும் தேநீர் விருந்துகளையும், கேளிக்கைகளையும் மட்டுமே பிடித்து செய்திப் படங்களாகக் காட்டுவதை விட்டு, உணர்ச்சியூட்டும் வசனத்தோடு கூடிய சரித்திர சம்பந்தமான, 'மறைந்த சாம்ராஜ்யம்' போன்ற சிறந்த படங்களை நமது சர்க்காரின் செய்திப் பட இலாகாவினர் இனிமேலாவது தொடர்ந்து தயாரிக்கட்டும்.

ஆர். கே. சுப்பிரமணியன், மதுரை.

ஒரே குறை

"காஞ்சனை"வை ஆவலுடன் எதிர்பார்த்தவர்களில் நான் ஒருத்தி. "காஞ்சனையின் கனவு" மூலம் நாம் மனோ உலகில் கண்டு பழகிய காஞ்சனை, பானு, அவள் தாயார்—யாவரையும் படத்தில் அப்படியே சந்திக்கிறோம். அவர்களைப் பற்றி "லக்ஷ்மி"யின் எழுத்து மூலம், நன்கு அறிந்துள்ளது போலவே, அவர்களும் காக்ஷி அளிக்கவே, அது படமென்றே தோன்றவில்லை. கண்ணம்மாவிலிருந்து கணக்கப்பிள்ளைவரை நம் மனதில் ஏற்கெனவே உருவானவர்கள்தான். ஆனால், ஒரு பெரிய ஏமாற்றம்; நம் மனதில் உருவாக்கப்பட்டுள்ள புஷ்பநாதனுக்கும், திரையில் காணும் புஷ்பநாதனுக்கும் பொருத்தம் இல்லை. கம்பீரமோ, பெருந்தன்மையோ, பணம், பதவியால் அடைந்துள்ள அகம்பாவமோ (கதையிலுள்ளபடி) சற்றுமின்றி. பெண்பித்துப் பிடித்தலையும், புஷ்பநாதனையே படத்தில் காண்கிறோம். அவனிடம் எந்த யோக்கியதையைக் கண்டு காஞ்சனை, பானு ஆகிய இரு பெண்களும் காதல் கொண்டனர் என்று வியக்கிறோம்!

"காஞ்சனை"வை உன்னத முறையில் தயாரிக்க இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்ட பக்ஷிராஜா பிலிம்ஸார், கதாநாயகன் வேஷத்திற்கும் தகுதியானவரைப் பொருக்கி எடுத்திருந்தால், "காஞ்சனை" இணையற்றபடமாய் இருந்திருக்கும்.

எம். சுசீலா, மயிலாப்பூர். சென்னை.

இலவசம்



எங்கள் கறுப்பு மயிர் தைலம் No 501 (Regd.) எல்லா வித கேசங்களுக்கும், கருகருத்து காக்ஷி அளிக்கும் மயிர் உதிராது. இதை உபயோகித்தால நீண்டு, பளபளப்புடன் சுருளும். ஒரு பாட்டில் ரூ. 1-12-0
மூன்று 4-0-0
இத்துடன் 18 வருஷ உத்திர வாதமுள்ள அழகான கைக் கடியாரமும், ஒரு நியூ கோல்ட் மோதிரமும் ஒரு பாட்டில் வாங்குபவர்களுக்கு அனுபப்படும். மூன்று பாட்டில வாங்குவோருக்கு 3 கைக்கடியாரமும, 3 மோதிரங்களும் அனுப்பப்படும்.
திருப்தியில்லாவிடில் பணம் வாபஸ செய்யப்படும்.

JAI HIND WATCH Co.
P.B. 97 SITLA TEMPLE AMRITSAR.-

36 Persons awarded prizes in our Puzzle No. 11. *1st* Prize
1. B. Thangavelu, Perambur. 2. M. B. Patil, Dharwar. 3. M. A, Mohamed, Malegaen. 4 H. I G. R. Bansode Mhow. 5. P. Parameswaran. Salem. 6. N. Nachimuthu chettiar, Palam. 7. Ahmed Noor, Gahazipur. 8. M. S. Thangaswami, Devakotta. 9. S. K. Jain, Jammu Tawi. 10. M. J. Samuel, Travancore. 11. G. Natarajan, Madras. and 1. 2nd prize 3rd prize 20. 5th prize 4 persons.

Full particulars are published in the " Rainbow " dated 25—6—52.

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ 13.

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். எங்கள் போட்டி நிபந்தனைக் கிணங்க, பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி பகிர்ந்து அளிக்கப்படும்.

AMBAL'S PUZZLES
KEY S. NO. 11 *31 TO 46/56

38	40	41	35
31	45	44	34
43	33	32	46
42	36	37	39

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 11 on 20/5/52 in a sealed cover, which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.
V. Ramanathan
13/6/52 Madras.

முடிவு தேதி 12—7—52. விடை 28—7—52.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5—0—0

190



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—40 முதல் 55 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 190 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்:**-தனி வெள்ளைக்காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதும்; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுத்துவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

AMBAL PUZZLE No. 13
28, (21) Thandavaraya Gramani Street, Madras—21.

ரிஜிஸ்டர் நெ. 277. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 14.

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 28-7-52. விடை: 12-8-52

194

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 41 முதல் 56 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 194 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

AMBAL PUZZLE No. 14
28, (21) Thandavaraya Gramani St., Madras—21.

அகதி

[ஆசிரியர்: "மாயாவி": விலை: ரூ. 2-0-0; கிடைக்குமிடம் : புதுமைப் பிரசுரம், பெண்ணாடம், தெ. ஆர்காடு ஜில்லா.]

தமிழ் நாட்டு வாசகர்களில் பெரும்பாலோரது நன் மதிப்பைப் பெறும் சிறு கதை எழுத்தாளர்கள் வெகு சிலர் தான் உண்டு. அப்படிப்பட்டவர்களில் இந்தப் புத்தக ஆசிரியர் "மாயாவி"யும் ஒருவர். இத் தொகுதியில் உள்ள கதைகள் அனைத்தும் ஏற்கெனவே "கலைமகள்", "அமுத சுரபி" போன்ற பத்திரிகைகளில் வெளி வந்தவை. ஆனால், மீண்டும் அதே கதைகளைப் படிக்கும்போது முதல் இருந்த அதே அளவு சுவாரஸ்யம் இருக்கிறது. சிறந்த சிறு கதைகளின் இலட்சணம் அது தானே! கதைகள் அனைத்துமே உயர்வாக இருக்கின்றன வென்றாலும், "கானல் நீர்", "தாய்", "அகதி" ஆகிய மூன்று கதைகளும் மிகச் சிறப்பாக உள்ளன.

யோசிக்கும் வேளையில்

[ஆசிரியர்: தி. ஜ. ர; விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட்., சென்னை-18.]

ஆசிரியர் அவ்வப்பொழுது பல பத்திரிகைகளுக்கு எழுதிய பதினொரு கட்டுரைகளின் தொகுப்பே இப்புத்தகம். "கட்டுரைகளா?" என்ற அசுவாரஸ்யம் தட்டி விடாமல் இழுத்துச் செல்கிறது — கட்டுரைகளை ஆசிரியர் கொண்டு போயிருக்கும் ஹாஸ்ய பாணி. இந்தக் கட்டுரைகளில், பிச்சைக்காரன் முதல் அரசியல்வாதி வரை வருகிறார்கள். கட்டுரைகளை ஆசிரியர் பேசும் நடையில் எழுதியிருப்பதும், கட்டுரைகளின் இடையே அடிக்கடி மிகப் பெரிய தத்துவங்களையும், உண்மைகளையும் அள்ளி வீசி யிருப்பதும் குறிப்பிடத் தக்கவை.

சத்தியமே-வ-ஜெயதே

[ஆசிரியர் : ஸி. எஸ். பிரான், கின்னை : விலை : அணா 12; கிடைக்குமிடம்: ஸி. எஸ். பிரான், கின்னை. (Via) மஹ்மூது பந்தர், பறங்கிப் பேட்டை.]

'உண்மையே வெல்லும்' என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ள புத்தகம் இது. ஸத்யம், அஸத்யம், இவைகளின் விளக்கம், இரண்டுக்கு முள்ள வேறு பாடுகள் யாவும் நன்கு விவரிக்கப் பட்டுள்ளன.

ஸ்கூல் மாட்ச்

[ஆசிரியர்: 'சுக்ரீவன்'; விலை: 2 அணா; கிடைக்குமிடம் : குமரன் பதிப்பகம், 7, பெத்துநாய்க்கன் தெரு, சென்னை-1]

இது சிறுவர்களுக்கான கதைப் புத்தகம். இதை எழுதிய "சுக்ரீவன்" சிறுவர்களுக்கான பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் எனத் தெரிகிறது. ஆசிரியரின் இந்த முயற்சி பாராட்டக் கூடியதாக இல்லை.

கற்காலத் தமிழர்கள்

[ஆசிரியர்: எம். இஸ்மத் பாஷா; விலை : ரூ. 1-4-0 ; கிடைக்குமிடம் : வாழ்வு இலக்கியப் பதிப்பகம், 146, துக்காம் பாளையத் தெரு, கும்பகோணம்.]

இது ஒரு சரித்திர ஆராய்ச்சி நூல். இடைக்கால கற்காலத் தமிழர்களைப் பற்றிச் சித்தரிக்கிறது. படிப்பதற்குக் கொஞ்சம் கரடுமுரடாகவே இருக்கிறது.

தம்பி துரை

[ஆசிரியர் : கலைச் செல்வன்; விலை : 2 அணா; கிடைக்குமிடம் : குமரன் பதிப்பகம், 7, பெத்து நாய்க்கன் தெரு, மதராஸ்-1.]

இதுவும் சிறுவர்களுக்கான புத்தகம் தான். படிக்கமிக சுவாரஸ்யமாக இருக்கிறது.

நீலாம்பரி

[ஆசிரியர்: "எல்லார்வி" விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம் : அமுத நிலையம், லிமிடெட்., சென்னை-18.]

இது ஒரு சிறு நாவல். முதற் பகுதி மிகவும் அலுப்புத் தட்டுவதாக இருந்தாலும் பிற்பகுதி விறு விறுப்பாக இருக்கிறது. 'கதையை வளர்த்திச் செல்வதற்காகவே ரொம்பப் பேரை கதாசிரியர் சாக அடிக்கிறாரோ!' என்று எண்ணத் தோன்றுகிறது. முடிவு அற்புதமாக இருக்கிறது.

காதலோ காதல்

[ஆசிரியர்: "ஜெகசிற்பியன்"; விலை: 8 அணா; கிடைக்குமிடம்: முல்லை நிலையம், சென்னை-17.]

ஆசிரியரின் மூன்று சிறு கதைகள் இப்புத்தகத்தில் உள்ளன. 'காதலோ காதல்!' ரஸமாக இல்லை. சவக் குழியிலுள்ள பிணத்தைத் தோண்டி எடுத்துத் தழுவும் அளவுக்குச் செல்லுகிறது கதாநாயகனின் அன்பு! மூன்றாவது கதையான "காதலி!" நன்றாக இருக்கிறது. ஹர்ஷ காலத்து சரித்திரக் கதை அது 'ரத்னாவளி' பிறந்த கதையை விளக்குகிறது அது.

நல்ல தம்பி

[ஆசிரியர்: "சாமி"; விலை: 2 அணா; கிடைக்குமிடம்: அறிவு மணி பதிப்பகம், 323, புது ஜெயில் ரோடு, மதுரை.]

சுவாரஸ்யமான கதைப் புத்தகம்தான். ஆனால், இது சிறுவர்களுக்காக எழுதப்பட்டிருப்பதால் கொலை, கொள்ளை போன்ற நிகழ்ச்சிகள் இல்லாமல் எழுதுவதுதான் நல்லது.

அமராவதிக் கரையில்

[ஆசிரியர்: 'அகிலன்'; விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: புதுமைப் பிரசுரம், பெண்ணாடம், தெ. ஆர்க்காடு ஜில்லா.]

சிறு கதைத் தொகுதி ஒன்று இரண்டாம் பதிப்பு வெளி வருவதே அக்கதைகளின் சிறப்பை எடுத்துக் காட்டப் போதுமானது. புத்தகத்தில் உள்ள ஏழு கதைகளும் சிறந்த சிறு கதைகளாகவும், சிந்தனைக்கு சலனம் அளிப்பவைகளாகவும்

தாமரைப் பொய்கை

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18. விலை: ரூ.3.]

சங்க நூற் காட்சிகளின் மூன்றாவது வெளியீடாக வெளி வந்துள்ள இப் புத்தகத்தில் ஐயங்குறுநூற்றிலிருந்து எடுக்கப்பட்ட பதினொரு பாடல்களுக்கு விளக்கம் கூறப்படுகிறது. உமாபாகன் என்ற தலைப்பில் பாரதம் பாடிய பெருந் தேவனாரின், கடவுள் வாழ்த்துக்கு முதலாவதாக விளக்கம் தரப்பட்

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

[illegible] எந்தவித மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.
ஏஜண்ட்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
இலங்கை ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11

டிருக்கிறது. வருங்கால வாழ்க்கையைப் பற்றிய நினைவே இல்லாமல் களவின்பம் துய்க்கும் காதலர்களைப் பற்றி தோழி மிக கவலையுறுகிறாள்.

ஓரம் போகியாரின் பாடலாகிய இது இரண்டாவதாக இடம் பெற்றிருக்கிறது. தலைவிக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. தலைவனை நினைத்து உருகும் தலைவியின் நிலை அவர்களுக்குத்தெரியாது. தோழி அதை செவிலித் தாய்க்கு எடுத்துச் சொல்கிறாள். இந்த மூன்றாவது பாடலும் ஓரம் போகியாருடையதேயாம். தலைவியை மணம் பேச யாரோ வரப்போகிறார்கள் என்று அறிந்த தோழி, தலைவிக்கு ஒரு காதலன் உண்டு என்பதை செவிலியிடம் மெல்ல எடுத்துச் சொல்கிறாள். பிறகு தலைவியின் காதலனே அவளை மணக்கிறான். அம் மூவனார் பாடிய இப்பாடல் நான்காவதாக இடம் பெறுகிறது.

பொருள் ஈட்டத் தலைவன் வேற்றூருக்குச் சென்றுவிட்டான். ஆனால். அங்கு தலைவியை நினைத்து உரக்கமின்றி ஏங்குகிறான். ஆறாவதாக விளக்கப்படும் இப் பாடலும் அம் மூவனார் பாடியதே. நீல நிற மலையொன்று ஊருக்கு வெளியே தெரிகிறது. தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி அடிக்கடி அம்மலையைப் பார்த்து ஆறுதல் கொள்கிறாள். அந்த மலை, தலைவன் நாட்டைச்சேர்ந்ததாம். அவள் செய்கையைக் கவனித்த தோழி செவிலிக்குத் தலைவியின் கருத்தை உணர்த்துகிறாள். மணவினைக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. இதை அறிந்து மகிழ்ச்சியடைந்த தோழி செவிலியிடம், ''அம்மா இத்தனையும் நின்னால் வந்த நன்மை'' என்று குறிப்பாகச் சொல்கிறாள். இந்த ஏழாவது பாடல் கபிலர் பாடியது. தலைவன் இரவில் தலைவியை சந்தித்துக் களவின்பம் நுகர்கிறான். தலைவியை ஊரறிய தலைவன் மணந்துகொள்ள வேண்டுமென்பதையே தோழி விரும்புகிறாள். தலைவன் காதுபட தலைவியிடம் "நேர்மையான முறையில் ஊரறிய மணந்து கொள்ளட்டுமே. அதை விட்டு பெண் நலத்தையே வெளவுவது ஆண்மைக்கு அழகா? குறுங்கை இரும்புலி மரத்தின் நிழலில் மறைந்திருப்பது போலல்லவா இருக்கிறது இது; அவன் பொருட்டு நீ ஏன் வாடுகிறாய்'' என்கிறாள். கபிலரின் இப் பாடலுக்கு அடுத்த படியாக விளக்கம் தரப் படுகிறது. ஒய்ந்த யானையும், உலர்ந்த சோலையும், உயர்ந்த மூங்கிலும் உள்ள பாலையில் நெடுந் தூரம் வந்துவிட்டான் தலைவன். யானை வெப்பந் தாங்காமல் பிளிறியது. ஆனால் அதுவரை அவனுக்கு வெப்பமே தெரியவில்லையாம். காதலியின் நினைவில் அல்லவா அவன் இருந்தான். அவள் நினைவால் பாலையும் குளிர்ந்ததாம்! ஒன்பதாவதாக விளக்கப் படும் இப் பாடலும் அடுத்ததும் ஓதலாந்தையாருடையது. தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கை நடத்துவதைக் காண வருகிறாள் செவிலி. அவர்கள் இனிய வாழ்வு செவிலிக்கு திருப்தி யளிக்கிறது. அதை நற்றாயிடம் கூறுகிறாள். இறுதியாக, விளக்கப் படும் இப்பாடல் பேயனார் பாடியது.

இந்தப்பதினோறுபாடல்களின் விளக்கத்தில், ஆசிரியர் ஐங்குறுநூற்றின் சாரத்தை பூராவாக நமக்கு எடுத்துத் தருகிறார். இப்புத்தகம இலக்கியச் சுவையுடையோருக்குஒரு நல் விருந்தாகும்.



காதல் வெள்ளத்தில் தவிப்பவர்களுக்கு படகு மிக அவசியம்தான்! ''என் தங்கை''யில் மாதுரிதேவி, நரசிம்மபாரதி.

மாயவரம் மைதிலி

"ராஜா"

சிறு கதை

நான் ஏதோ ஒரு வேலையாக மாயவரம் போயிருந்தேன். என் அலுவல்களை முடித்துக்கொண்டு நானும் நண்பர் நாராயணனும் பேசிக் கொண்டே ஆற்றங் கரைக்கு வந்து சேர்ந்தோம். மணலில் உட்கார்ந்து கொண்டு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அந்த சமயம் ஒரு பிச்சைக்காரி அங்கு வந்து பிச்சை கேட்டாள். ஏதாவது கொடுக்கலாம் என்று நான் எண்ணுவதற்குள் என் நண்பர் அவளைப் பார்த்து விட்டு "ஒன்றுமில்லை போ" என்று விரட்டி விட்டார்.

"ஏன் ஸார் அப்படி விரட்டுகிறீர்! ஏதோ நம் கையில் கிடைத்தது காலணாவோ அரையணாவோ போட்டால் போகிறாள். பாவம்" என்றேன்.

"ஸார்! அந்த மாதிரி தர்மம் இவர்களுக்கெல்லாம் செய்யக் கூடாது ஸார்!" என்றார் நண்பர்.

"ஏன்! எதற்காக அப்படிச் சொல்லுகிறீர்" என்றேன் நான்.

"உங்களுக்கு 'மாயவரம் மைதிலி'யைத் தெரியுமோ! தெரிந்திருந்தால் அப்படிச் சொல்ல மாட்டீர்" என்றார்.

"அது யார்! எனக்குத் தெரியாதே" என்றேன்.

"சரி சொல்லுகிறேன், கேளுங்கள்" என்றார். கதையும் ஆரம்பமாகி விட்டது.

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் இந்த ஊருக்கு ஒரு சினிமாக் கம்பெனி கோஷ்டி வந்தது. இந்த ஊரில் ஏதோ படம் எடுப்பதற்காக வந்திருந்தார்கள் விட்டல் தாஸ் என்பவர் அதன் டைரெக்டர். நல்ல அனுபவசாலி. அவர்கள் இங்கு வந்திருந்தபோது ஒரு நாள் அந்த டைரெக்டர் தெருவில் இப்படியும் அப்படியும் ஏதோ கவனித்துக் கொண்டிருந்தார். அந்த சமயம் ஒரு பெண் பிச்சை எடுத்துக் கொண்டு வந்தாள். தாஸ் நிதானமாக அவளைக் கவனித்துக் கொண்டிருந்தார் அவள் அருகில் வந்ததும் ஒரு ரூபாயைத் தூக்கி அவளிடம் கொடுத்தார். அவள் பிரமித்துப் போய் அவரையே பார்த்தாள்.

தாஸுக்கு என்ன தோன்றியதோ! "ஏம்மா இப்படிப் பிச்சை எடுக்கிறயே. நான் உனக்கு வேண்டிய பணம், சாப்பாடு முதலியவை எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்கிறேன். நீ எங்களோடு பட்டினம் வந்து, நான் சொல்லுகிறபடி சினிமாவில் சேரச் சம்மதமா" என்று கேட்டார்.

"சாமி! எது வேணுமானாலும் செய்கிறேன். எனக்கு வேளைக்குக் கொஞ்சம் சோறு போட்டால் போதும்" என்றாள் அவள்.

அதிகம் சொல்வானேன். தாஸ் அவளை சென்னைக்கு அழைத்து வந்தார். அவள் சென்னைக்குப் போகும் போது அவள் பெயர் கருப்பி. அது தான் அவளுடைய உண்மைப் பெயரும். தாஸ் அவளுக்கு சங்கீதம், நாட்டியம், நடிப்பு எல்லாம் சொல்லிக் கொடுத்தார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு, அவள் நடித்த படம் வெள்ளி வந்தது. 'மாயவரம் மைதிலி' நடிக்கும் படம் என்றால் அப்பொழுது கூட்டம் சொல்லி முடியாது. ஒவ்வொரு கொட்டகையிலும் கட்டாயம் வெள்ளி விழாவாவது நடந்தேறும். அவ்வளவு பிரமாதமான புகழ் அடைந்தாள் 'மாயவரம் மைதிலி'யாக மாறிவிட்ட கருப்பி.

இப்பொழுதெல்லாம் அவளுக்குத் தனி பங்களா, கார், டிரைவர் இன்னும் வேலைக்காரர்கள் எல்லா சௌகர்யமும்

செய்து கொடுத்தார் தாஸ். ஆனால், அவள் வேறு படங்களில் நடிக்கக் கூடா தென்று மட்டும் உத்தரவிட்டிருந்தார்.

இப்படியாக, நாலைந்து படங்களில் தோன்றிப் பிரமாதமான புகழடைந்தாள் மைதிலி. அதனால் தாஸுக்கும் நல்ல பெயர். அவளுடைய வருமானம் எல்லாவற்றையும் தாஸ் தம் பெயரிலேயே வைத்துக் கொண்டிருந்தார். பாங்கு கணக்குக்கூட தம் பெயரிலேயே வைத்துக் கொண்டிருந்தார்.

மைதிலிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விவரம் புரிய ஆரம்பித்தது. ஆசையும் பேராசையும் தலை காட்டின. 'இந்த தாஸ் இவ்வளவு பணம் சேர்த்ததற்குக் காரணம் நான் தானே. அப்படியிருக்க பாங்கியில் பணத்தை ஏன் அவர் தம் பெயரில் வைத்துக் கொண்டிருக்கிறார். பங்களா, கார் எல்லாமே அவர் பெயரில் இருக்கிறதே. இந்தப் பணத்தில் எனக்கு பாத்தியம் இல்லையா?'' என்றெல்லாம் எண்ணினாள்.

ஒரு நாள், தாஸைக் கேட்டும் விட்டாள். "ஆமாம், பாங்கியில் என் பேரிலும் கொஞ்சம் பணம் போட்டு, என் பேரிலும் ஒரு பங்களா வாங்குங்களேன்'' என்றாள்.

தாஸ் முகவாய் கட்டையை தடவிக் கொண்டார். "ஓஹோ, இவளுக்கு இப்பொழுதுதான் பணத்தாசை பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. இனிமேல் நாம் உஷாராய் இருக்க வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டார்.

''அது சரியம்மா. ஆனால் அதற்கெல்லாம் இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும். இந்த ஊர் விஷயம் உனக்குத் தெரியாது. உனக்கு சுதந்திரமாக இருக்க சக்தியிருப்பது பிறருக்குத் தெரிந்தால் எப்படியும் உன்னை ஏமாற்றி உன்னைக் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விடுவார்கள். ஆகையால், இன்னும் கொஞ்ச நாளைக்கு இப்படியே இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டார்.

இது மைதிலிக்கு மனவருத்தம் தான். 'இவர் நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்' என்ற எண்ணம் வந்து விட்டது. நாளாக நாளாக அவரை எப்படி ஏமாற்றுவது என்கிற எண்ணம் மேலோங்கியது. தாஸும் இதைக் கவனித்திருக்கிறார். ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு நாள், தாஸ் புதிதாக வாங்கின காருடன் மைதிலி வீட்டுக்கு வந்தார். "மைதிலி!'' என்று கூப்பிட்டார். மைதிலி ஹாலுக்கு வந்தாள். 'என்ன?' என்கிற பாவனையில் முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்றாள்.

"இதோ பார். வாசலில் இருக்கிற கார் புதிதாக உனக்காக வாங்கினேன். இதோ இந்த டிரைவரை அதற்காக அமர்த்தியிருக்கிறேன். இவன் பெயர் வடிவேலு. இனிமேல் அந்த வண்டியை இவன் ஓட்டிக் கொண்டு இங்கேயே இருப்பான்'' என்று சொல்லி, வடிவேலுவையும் அவர் அறிமுகம் செய்து வைத்து விட்டுப் போய் விட்டார்.

உள்ளே வந்த வடிவேலு, மைதிலியைப் பார்த்தான். அவன் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. 'எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறதே! எங்கே?' யோசனை செய்தான்.

"ஆம்! ஞாபகம் வந்து விட்டது! அவளையே கேட்டு விடலாமா? ஹும்... எதற்கும் கேட்டுத்தான் பார்க்கலாமே'' என்று எண்ணினான்.

"அம்மா!'' என்று கூப்பிட்டான்.

''என்ன!'' என்றாள் மைதிலி.

''உங்களை இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிற மாதிரி ஞாபகம்......''

மைதிலி திடுக்கிட்டாள். அவனை உற்றுப் பார்த்தாள். அவளுக்கும் ஞாபகம் வரத் தொடங்கியது. ''ஹும், எங்கே பார்த்திருக்கிறாய்!'' என்றாள்.

"உங்களை மாயவரத்தில் பார்த்திருக்கிறதாக ஞாபகம்......''

மைதிலிக்கும் அவனை ஞாபகம் வந்து விட்டது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "மாயவரத்திலா! எங்கே!'' என்றாள்.

வடிவேலுவும் தைரியமாக, "என்னம்மா! என்னை ஞாபகமில்லையா, வேலு என்பது என் பெயர். மாயவரத்தில் கீழ்த் தெருவில் உங்களை நான்......''

மைதிலிக்கு அதற்கு மேல் கேட்க இஷ்டமில்லை. தன் பூர்வ கதையை மறுபடியும் ஞாபகப் படுத்திக் கொள்ள

இஷ்டமில்லை. ஆகையால், "அது சரி. நீ எப்படி இங்கு வந்தாய்!" என்றாள்!

"நான் பிச்சை எடுத்துக் கொண்டிருந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே. அப்புறம் அதில் ரொம்பக் கஷ்டப் பட்டேன். மெதுவாக இங்கு பட்டிணம் வந்து ஒரு இடத்தில் லாரியில் கூலி வேலை செய்து, அப்புறம் கிளீனர் வேலை செய்து, மெள்ள கார் ஓட்டக் கற்றுக் கொண்டேன். அடையாரில் ஒரு இடத்தில் கார் ஓட்டிக்கொண்டிருந்தேன். உங்க ஐயா 'நல்ல டிரைவர் வேணும்'னு எங்க ஐயா கிட்டே சொல்லவே, 'சரி இவனை வேணா வச்சுக்குங்க, அப்புறம் வேறே நல்ல ஆள் கிடைச்சா அனுப்புறேன்' என்று சொல்லி என்னை அனுப்பினார். ஏதோ இங்கேயும் தெரிஞ்ச இடமாப் போச்சு. அதுவரை சந்தோஷம்" என்றான்.

இதற்கு மேல் மைதிலியும் அவனுடன் தாராளமாகப் பேச ஆரம்பித்தாள். நாளாக நாளாக தாலை ஏமாற்றிப் பணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு அதிகரித்து விட்டது. அதற்கு டிரைவரிடம் யோசனை செய்ய

லானுள். இருவரும் ஒரே ஊரிலிருந்து வந்தவர்களாதலால் ஏதோ ஒருவிதப் பாசம் அவர்களுக்குள் ஏற்பட்டு விட்டது.

டிரைவரும் மைதிலியும் கூடிப் பேசினுர்கள். எப்படியாவது தாஸை ஒழித்து விட்டால், சொத்து, பணம் எல்லாம் மைதிலிக்குக் கிடைத்து விடும். பிறகு அதை எடுத்துக் கொண்டு இருவரும் பழையபடி மாயவரத்திற்கே போய் சந்தோஷமாய் காலங் கழிக்க வேண்டியது. இப்படி திட்டம் போட்டார்கள், வடிவேலுவும் தான் ஏதாவது உபாயம் செய்து தாஸைத் தீர்த்து விடுவதாக வாக்களித்தான். ஒரு நாள் அதற்கு வேண்டிய வேலையும் செய்து விட்டான்.

அன்று, தாஸ் ஸ்டுடியோவில் இருந்தார். அவருக்கு ஒரு டெலிபோன் வந்தது. அவருடைய சிநேகிதர் கொஞ்சம் கார் அனுப்பச் சொல்லியிருந்தார். அப்படியே அவர் வீட்டில் ஒரு விருந்துக்கும் தாஸை வரச் சொல்லியிருந்தார். சாதாரணமாக, தாஸ் சில சமயங்களில் டிரைவர் வராவிட்டால் தாமே மோட்டாரை எடுத்துப் போய் விடுவார். வடிவேலு இந்தமாதிரி சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று, தாஸ் வண்டியை எடுத்துக் கொண்டு விருந்துக்குப் போகிறுர் என்று மட்டும் தெரியும். தானும் போகவேண்டியிருக்கும் என்று தெரியாது. அதனுல் அவன் காரில் ஒரு வேலை செய்து விட்டான். 'இத்துடன் தாஸ் ஒழிந்தான்' என்றும் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான்.

ஆனுல், தாஸ் புறப்படும் போது வடிவேலுவையும் கூட வரச் சொன்னுர். வடிவேலு முகமே மாறி விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு உடம்பு சரியில்லை என்று சாக்குச் சொன்னுன். இதை கவனித்து விட்டார் தாஸ். 'இதில் ஏதோ விஷயம் இருக்கிறது' என்று எண்ணிய அவர் அவனைக் கட்டாயப் படுத்தி அழைத்துக் கொண்டு போனுர். வடிவேலு, தனக்கு உடம்பு சரி இல்லை என்றதால் காரை தாஸ் ஓட்டினுர்.

கார் போய்க் கொண்டே யிருந்தது. இருபது, முப்பது நாற்பது, ஐம்பது மைல் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. அப்போது குறுக்கே ஒரு எருமை மாடு வந்தது. தாஸ் காரின் பிரேக்கைப் போட்டார். ஆனல், கண் மூடிக் கண் திறப்பதற்குள் வண்டி அங்கிருந்த புளிய மரத்தில் மோதி விட்டது. வடிவேலுக்கு மண்டையில் பலமான அடி. தாஸ் ஸ்தலத்திலேயே மாண்டார்.

அப்புறம் போலீஸ் வந்தது. வடிவேலு பிரக்ஞை இல்லாத நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

நான்கு நாட்கள் கழித்து வடிவேலுக்கு பிரக்ஞை வர ஆரம்பித்தது மெள்ளப் பிதற்ற ஆரம்பித்தான். "மைதிலி! நீ சொன்னபடியே செய்துட்டேன். தாஸ் ஒழிந்தான். காரிலே ஒரு சின்ன வேலை செய்தேன். அவ்வளவு தான்..."என்று பிதற்றினன்.

பக்கத்திலிருந்த போலீஸ்காரர் காதில் இது விழுந்தது. அவர்கள் உஷாராகி விட்டார்கள். இவன் சொன்னதை அப்படியே எழுதிக் கொண்டார்கள். ரொம்பவும் ஜாக்கிரதையாக அவனுக்கு சிகித்சை செய்தார்கள்!

ஒரு வாரம் கழிந்தது. வடிவேலுக்கு உடம்பு குணமாகி விட்டது. அவனை வீட்டுக்குப் போகலாம் என்று டாக்டர் சொல்லி விட்டார். வடிவேலுவும் சந்தோஷத்தோடு புறப்பட்டான்.

"தம்பி! தம்பி! அவசரப்படாதே. கொஞ்சம் எங்களோடு ஸ்டேஷனுக்கு வர" என்று பிடித்துக்கொண்டு போனர்கள் போலீஸ்காரர்கள்.

இந்த இடத்தில் கதையை நிறுத்தினர் நண்பர்.

"அப்புறம்!" என்றேன் நான்.

"அப்புறம் என்ன! கேஸ் நடந்தது. மைதிலியும் வடிவேலுவும் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். தலைக்கு மூன்று வருஷம் சிறைவாசம் கிடைத்தது. அந்த சமயம் வக்கீல் ஒருவர் எழுந்து, 'கோர்ட்டார் அவர்களே! இறந்து போன தாஸ் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார். அதைப் படிக்கிறேன்' என்று கூறிப் படித்தார்.

"........ஆகிய தாஸ் எழுதி வைத்த உயில் என்னவென்றல், எனக்கு பாங்கியில் பணமும், தவிர சொத்துக்களும் இருக்கிறது. சினிமா நடிகை மைதிலியுடன் நான் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தாலும் டைரெக்டர் நடிகை என்ற உறவைத் தவிர வேறு எவ்வித சம்பந்தமும் எங்களுக் கிடையில் கிடையாது. கொஞ்ச காலமாக அவள் நடத்தையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அதனல் எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து, நான் இறந்து விட்டால் என் சொத்து, பணம் இவைபூராவையும்...என்ற ஊரிலிருக்கும் என் மனைவி நானகி அம்மாளும், அவளுக்குப் பின் என் குழந்தைகளும் அடைய வேண்டியது. இந்த சொத்துக்களில் மைதிலிக்கு எவ்வித பாத்தியதையும் கிடையாது......இப்படிக்கு, விட்டல் தாஸ்"....என்று படித்து முடித்தார். 'கிழவன் கெட்டிக்காரன்'என்றூர்கள் எல்லோரும்—என்று நண்பர் முடித்தார்.

"அப்பறம் இவர்கள் கதி!" என்றேன்.

"இவர்கள் கதி என்ன! சிறைத் தண்டனைக்குப் பிறகு வெளியே வந்தார்கள். இவர்கள் யோக்கியதை தெரிந்து யார் இவர்களைக் கூப்பிடுவார்கள். பழையபடி இருவரும் மாயவரத்துக்கே வந்து பழையபடி பிச்சை எடுக்கிறுர்கள். இப்போது வந்தவள்தான் அந்த மைதிலி—என்கிற கருப்பி. வடிவேலு ஆற்றுக்கு அந்தக் கரையில் பிச்சை எடுக்கிறன்" என்று முடித்தார்.

நானும் ரயிலுக்கு நாழிகையாகி விட்டதென்று கிளம்பி விட்டேன்.

திருச்சியில் சினிமாச் சங்கம்

சென்ற மாதம் 18ந் தேதியன்று திருச்சி சினிமா ரஸிகர்கள் ஒன்றுகூடி, "சினிமா ரஸிகர்கள் சங்க"த்தை ஆரம்பித்திருக்கின்றனர். இச்சங்கத்தை சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்துடன் இணைத்துக் கொள்ளப் போகிறுர்களாம். இச் சங்கம் சினிமாவுக்கு மட்டுமன்றி, நாடகம், சங்கீதம் போன்ற கலைகளுக்காகவும் பாடுபடுமாம். ஸ்ரீ. எஸ். பூமிநாதன் இச்சங்கத்தின் தலைவராகவும், எஸ். கே. சேகரன் காரியதரிசியாகவும் ஜி. ராமாநுஜம் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

மாஸ்டர் சேது

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் படத்திலேயே அசாத்தியமான புகழைப் பெற்றிருக்கும் சேதுவுக்கு அதற்குமுன் நடிப்பு அநுபவம் கிடையவே கிடையாது என்பதைப்பற்றி நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவனுடைய உபாத்தியாயர் எழுதி நடத்திய ரேடியோ நாடகங்களில் மட்டும் அவன் சிற்சில சமயங்களில் பேசியிருக்கிறான்.

"தான் சினிமாவில் நடிக்கவேண்டும், அல்லது நடிக்கக் கூடும் என்ற எண்ணம் சேதுவுக்கு சொப்பனத்தில்கூட இருந்ததில்லை. பள்ளிப் படிப்பில் ஈடுபட்டிருந்த அவனை சினிமா உலகம் தேடிப் பிடித்து ஆகர்ஷித்துக் கொண்டிருக்கிறது.

ஜெமினியில் தயாராகிவரும், "ஔவையார்" படத்தில் சுப்ரமண்யர் வேஷத்தில் நடிப்பதற்காக அவர்கள் ஒரு அழகிய சிறு பையனைக் கண்டு பிடிக்க முயன்று வந்தனர். காமெடியன் ஸ்ரீநிவாஸனின் யோசனையின் பேரில் ஜெமினி நிர்வாகி பொருவர் சேதுவைச் சந்தித்து அவனுடைய போட்டோவை வாங்கிச் சென்றார் ஆனால், அந்த வேஷத்திற்கு சேதுவைக் காட்டிலும் இன்னும் கொஞ்சம் வயது குறைந்த பையனாயிருந்தால் நலம்' என்று அவர்கள் கருதினார்கள். ஆகவே சேது முதல் சந்தர்ப்பத்திலேயே ஏமாற்றம் அடைய வேண்டியதாயிற்று.

சேதுவின் தகப்பனாரான பிந்துமாதவ ராவ் மதுரையிலுள்ள உடுப்பி எல். நரசிங்கராவின் ஹோட்டலில் பல வருஷ காலம் மானேஜராயிருந்து வந்தார். பிறகு, தாமே ஒரு ஹோட்டலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் சென்னைக்கு தம் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். தற்போது பூனமல்லி ஹைரோடில் உள்ள உடுப்பி லாட்ஜ் இவரால் நடத்தப்படுவதுதான்.

இந்த ஹோட்டலுக்கு ஒரு நாள் "அண்ணி" பட டைரெக்டரான பிரகாஷ் ராவ் தற்செயலாய் வந்து சேர்ந்தார். தம் படத்தில் நடிப்பதற்காக சுறுசுறுப்பான சிறு பையன்கள் தேவை என்பதை அவர் பிந்துமாதவராவிடம் தெரிவித்தார். அதே சமயத்தில் அவர் மேஜையருகில் நின்று கொண்டிருந்த ஒரு அழகிய பையன் மீது கண்ணோட்டத்தைச் செலுத்தினார். "இந்தப் பையன் யார்?", என் விசாரித்தார் அவர். "என்னுடைய பையன்தான்" என்றார் பிந்துமாதவ ராவ். அதன்பின் டைரெக்டரின் வேலை சுலபமாகிவிட்டது. "அண்ணி" படத்தில் நடிப்பதற்காக சேது ஒப்பந்தமாகி விட்டான். டைரெக்டர் அவனைத் தம் பிள்ளை போலவே பாவித்து, மிகுந்த அக்கரையுடன் அவனுக்கு நடிப்பதற்குக் கற்றுக் கொடுத்து, அவனை ஒரு நக்ஷத்திரமாகவும் ஆக்கி வைத்து விட்டார். சேது தற்போது கீழ்ப்பாக்கம் தெருக்களில் காற்றாய் பறந்து செல்லும் "ராலி" ஸைக்கிள் பிரகாஷ் ராவால் அவனுக்கு அன்பளிப்பாக வாங்கித் தரப்பட்டதுதான்.

தாங்கள் தேடிப்பிடித்த சேது "அண்ணி" மூலம் பிரபலமடைந்துவிடவே ஜெமினி ஸ்டுடியோவினர் அவனுக்குச் சட்டென "ஸம்சாரம்" தமிழ்ப் படத்தில் ஒரு வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தனர். இந்தப் படத்திலும் சேதுவின் நடிப்பு நல்ல வெற்றியாகவே முடிந்திருக்கிறது. பிச்சை யெடுக்கும் கட்டங்களிலும், பிறகு (தகப்பனென்று அறியாமல்) தகப்பனுக்கு உணவளித்துக் காக்கும் கட்டங்களிலும் சேதுவின் நடிப்பு மிக உருக்கமாய் உள்ளது.

"அண்ணி", "ஸம்சாரமு"ம் சேதுவைப் புகழ்பெறச் செய்யவே ஜெமினி தன் அடுத்த படமான "மூன்று பிள்ளைகளி"லும் சேதுவை நடிக்கச் செய்திருக்கிறது. சீக்கிரமே வெளிவர விருக்கும் இப்படத்தில் எம். கே. ராதா நடிக்குள்ள வேஷத்தின் பால்யப் பருவத்தில் நடித்திருக்கிறான் சேது. அடுத்தபடியாக, மாடர்ன் தியேட்டர்ஸ் படமொன்றிற்காக சேது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறான்.

மூன்று படங்களில் நடித்துவிட்ட போதிலும் சேது இன்னமும் பூராவாக இத்தொழிலில் ஈடுபட்டு விடவில்லை. சென்னை எம். ஸி. டி. முத்தய்ய செட்டியார் ஹைஸ்கூலில் அவன் மூன்றாவது பாரத்தில் படித்து வருகிறான். சினிமாவிற்காக அவன் படிப்பை நிறுத்திவிட விரும்பவில்லை.

..சுமார் 14 வயதான சேதுவின் பூர்வீகம் கருநக்கு அருகிலுள்ள ஆண்டான் கோயில் என்ற சிறு கிராமம் ஆகும்.

அவனது குடும்பத்தினர் அவன் பிறப்பதற்கு முன்பே மதுரையில் குடியேறி விட்டனர். சேது ஐந்து வயதுப் பையனாயிருந்தபோதே அக்குடும்பம் சென்னைக்கு வந்து விட்டது. பிரபல காமெடியன்களான எல். நாராயண ராவ், ஜால்கிட்டு ஆகியோர் இக் குடும்பத்தினருக்கு தூர பந்துக்களாவர்.

பிந்துமாதவ ராவின் தகப்பனாரான தாஸர் என்பவர் அந்தக் காலத்தில் புறந்தர தாஸர் கீர்த்தனைகளைப் பாடுவதில் பிரசித்தி பெற்றவரா யிருந்தார். இருந்தபோதும் சேதுவுக்கு என்னவோ பாடத் தெரியாது.

மாஸ்டர் சேதுவுடன் பிறந்தவர்கள் இரு சகோதரிகளும், இரு சகோதரர்களும் ஆவர். தமக்கை நாமகிரி விவாகமாகி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார். தம்பிகளான சத்ய ப்ரியாவும், பார்த்தசாரதியும் பள்ளியில் படித்து வருகிறார்கள். மூன்றே வயதான தங்கை சரோஜினி தன் அம்மாவுக்குப் 'பொழுது போக்காக' இருந்து வருகிறாள்.

சேதுவின் தாய் பாஷை கன்னடம். ஆனால் பள்ளியில் படித்து வருவதும், பேசுவதும் தமிழில்தான். அதோடுகூட "அண்ணி"யில் நடிக்க முற்பட்ட பிறகு தெலுங்குப் பாஷையை நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டான். "மூன்று பிள்ளைகள்" தெலுங்குப் படத்தில் சேதுவே தெலுங்கில் பேசி நடித்திருக்கிறான்.

சிவந்த மேனியும், அழகிய தோற்றமும், ஐந்தடி உயரமும் உடைய மாஸ்டர் சேது மோட்டார் ஓட்டக்கூடக் கற்றுக் கொண்டு விட்டான். கிரிக்கெட், கேரம் விளையாட்டுகளில் மிக இஷ்டம்.

சேதுவின் வயதுள்ள பிள்ளைகள் சினிமாவில் நடித்து விட்டால், அவர்கள் பேசிக்கொள்ளும் பேச்சும் பெருமையும் சகிக்க முடியாததாய் இருக்கும். ஆனால் சேதுவோ அனுபவசாலிகளிடம் கூடக் குறைவாக இருக்கும் — தற்பெருமையற்ற அடக்கமான குணத்தைப் பெற்றிருப்பது பாராட்டத் தக்கது. இந்த அருங்குணத்தையும், சுப முயற்சியையும் சேது கை விடாமல் காப்பாற்றி வந்தால், தக்க வயதை அடையும்போது, அவன் நம் திரைப்படக் கதாநாயகர்களில் முதன்மையானவன் ஆகிவிட முடியும் என்பது திண்ணம்.

மூன்றே ரூபாய்க்கு

கைக்கடிகாரம்

இக்கடிகாரத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். அழகுக்கும், உறுதிக்கும் பத்து வருஷ உத்திரவாதம் உண்டு.

விலை ரூ. 3 தான்.

தபால் சார்ஜ் தனி.

AMERICAN TRADING AGENCY,

P. B. 75 (D. 203/12) Amritsar.

இளம்!

காஷ்மீர் சாஸ்திரம்

நீங்கள் விரும்பும் புஸ்தகம் இதோ இருக்கிறது— இதில் 284 ஆண்பெண்களின் வர்ணப் படங்கள் உள்ளன. இனம் பிரதிக்கு எழுதவும். தபால் சார்ஜுக்காக 8 அணா மட்டும் அனுப்பவும். உடனே எழுதாவிடில் பிறகு கிடைக்காது.

PARIS ART HOUSE (D.215)

Halga No. 5. :: Amritsar.

நடனம் ஆடினார்

"நந்தி"

'இனிப்புப் பண்டத்தைக் கொஞ்சமாகச் சாப்பிட வேண்டும்' என்று சொல்வார்கள். அப்போததான் அது அதிகமாக ருசிக்குமாம்! இதை மனதில் கொண்டு தானோ என்னவோ, இண்டியன் ஃபைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியின் ஆதரவில் கோகலே ஹாலில் கடந்த மாதம் 8ம் தேதியன்று நடந்த கே. வி. ஜெயலக்ஷ்மியின் நடனக் கச்சேரியை வழக்கமான நேரத்தை விட சீக்கிரமே முடித்து விட்டார்கள். "அலாரிப்பு", "ஜதிஸ்வரம்", "வர்ணம்" என்ற வரிசையில் கச்சேரி அமைந்திருந்தது. "போகனமாகினேன்" என்ற "கரகரப்ரியா" ராக வர்ணத்தில் அடவுக் கோர்வைகளும் அவைகளை ஆடிய விதமும் அழகாக இருந்தன. "எப்போ வருவாரோ சொல்லடீ" என்ற பதத்தில் பதவிந்நியாசமும், அநுபாவமும் உணர்ச்சியைத் தொடும் வகையில் அமைந்திருந்தன. "சொன்னதைச் செய்திட", என்ற பதத்தின் "வாசிகம்" ரஸனையுடன் இருந்தது. "நடனமாடினார்" என்ற பாட்டை ஒட்டி முந்திய விருத்தத்தில் "திங்கள்", (சந்திரன்) என்பதற்கு 'அர்த்த சந்திர" ஹஸ்தம் உபயோகப்படுத்தப் பட்டது. அபிநய தர்ப்பணத்தின் "சந்திர கலா" ஹஸ்தம் பிறையைக் குறிக்கும் திங்களுக்கு மிக்க பொருத்தமாக இருக்கும். "இமய முதல் குமரி வரை குறி சொல்லுவேன்", என்ற இரண்டு குறத்தி நடனங்களும் கச்சேரிக்கு சிகரம் வைத்தாற்போல் இருந்தது. நிகழ்ச்சியின் கடைசி நிரலான "அரபி நடனத்"தில் விசேஷமாக எதையும் காணோம்.

கே. வி. ஜெயலக்ஷ்மி

அன்றைய நிகழ்ச்சியில் இன்னும் சில பதங்களைச் சேர்த்து கச்சேரியைக் கொஞ்சம் நீடிக்கச் செய்திருக்கலாம். ஸ்வரம், வர்ணம், போன்றவைகளைக் காட்டிலும் பதாபிநயம் தான் சாதாரண ரஸிகர்களுக்கும் விறுவிறுப்பளிக்கக் கூடியது. கச்சேரியின் ஆரம்பத்தில் தரிக்கும் உடைகளைக் கடைசிவரை மாற்றாமலிருக்க வேண்டும் என்பது வழக்கத்தில் வரும் விதி. அடிக்கடி உடை மாற்றுவதற்காக செலவழிக்கப்படும் நீண்ட நேரம் வரை ரஸிகர்கள் பொறுமையோடு தானே உட்கார்ந்திருக்க வேண்டும்! இந்த அநுபவங்களை உணர்ந்து தான் அம்மாதிரி விதியை வழக்கத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அன்றைய கச்சேரியில் 'ஆஹார்யம்' பழங்கால வழக்கப்படி

கணுக்காலளவு கால் சட்டையும், மேலே புடவையுடனும் இருந்தது. இந்த உடையுடன் மேடையில் நடமாடுவதற்கு இன்னும் சற்று உடலாகிருதி இருந்தால் கம்பீரமாக இருக்கும். "நடன மாடினர்", என்ற பாட்டிற்கு உடை பொருத்தமாக இருந்தது. குறத்தி நடனத்தில், உடை இயற்கையாக அமைந்திருந்தும் "மேக்அப்" கொஞ்சம் குறைந்திருந்ததைப்போல் காணப்பட்டது. "ராரசீதா" என்ற பதத்திற்கு அபிநயம் பிடித்தவரும், "அரபி நடன"த்தில் பங்கெடுத்துக் கொண்டவருமான ஜெயகுமாரியின் நடனத்தில் விசேஷமாக எதையும் சொல்வதற்கில்லை. அரபி நடனத்தில் இருவர் சேர்ந்து ஆடிய போது, அநேக இடங்களில் ஒழுங்கே இல்லாமலிருந்தது. சினிமா பின்னணிப் பாடகி கே. வி. ஜானகியின் பாட்டுகள் கச்சேரிக்கு மெருகூட்டி ரஸிகர்களின் மதிப்பை வெகுவாக சம்பாதித்து விட்டன. கே. என். தண்டாயுதபாணி பிள்ளையின் சிஷ்யையான ஜெபலக்ஷ்மிக்கு, அன்று கே. வி. சொர்ணப்பா கைத்தாளம் கூட்டினர்.

ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கான சபையின் ஆதரவில் கடந்த மாதம் 15ம் தேதியன்று கோகலே ஹாலில் உமா சகோதரிகள் கோஷ்டியாரின் ஓரியன்டல் நடனங்கள் நடைபெற்றன. நால்வர் பங்கெடுத்துக் கொண்டு ஆடிய பூஜா நடனத்தில் ஒழுங்கு போதவில்லை. அந்த நடனம் மலையாளத்து "மோஹினி யாட்டத்தை" ஞாபக மூட்டியது. "விஸ்வாமித்ரா மேனகை" நடனத்தில்ராணிவிஸ்வாமித்ரராகவும், உமா மேனகையாகவும் தோன்றி அழகாக நடனமாடினர்கள். ஸ்ருங்கார ரஸத்தின் போது ஜதிகளும், அசைவுகளும் அதிவேகமாக இருந்தால் ரஸத்தின் சுவை குறைந்து விடுகிறது. ரஸங்களுக்கேற்ற இசை, ஆங்கிகம், ஆஹார்யத்தின் நிறம், தன்மை முதலிய வைகளைப் பற்றி உள்ள இலக்கணங்களை அநுசரிக்க வேண்டும். குறத்தி நடனம் என்ற பெயரில் "வாசமுள்ள பூப்பறிப்பேனே" என்ற பாட்டுடன் ஆரம்பமாகும் சிறு நாட்டிய நாடகத்திற்கு நடன மாடப் பட்டது. அதைத் தனியாகவே ஆடிய ஜானகியிடம் நல்ல உடற் கட்டும். வளைவு நெளிவுகளும் நிறைந்திருந்தன. சில அசைவுகள் அமிதமாயிருந்தன.

"சிவசக்தி" நடனம் கதக்களி முறையில் ஆங்கிகம் அமைக்கப் பெற்று, அழகாக ஆடப் பெற்றது. "சிந்தனைச் சின்னம்" என்னும் நடனம் உன்னதமாக இருந்தது. அநேகமாக எல்லா நடனங்களிலும் நல்ல நாட்டிய நிலைகள் கையாளப் பட்டது குறிப்பிடத் தக்கது. அன்று ஒவ்வொரு நடனத்திற்குப் பிறகும், உடை மாற்றுவதற்காக எடுத்துக் கொண்ட நேரம், ரஸிகர்களின் பொறுமையை சோதனை செய்வது போல் இருந்தது. உடைகள் பாத்திரங்களுக்கேற்றவாறு பொருத்தமாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருந்தன. "ஸெக்ஸ் அப்பீல்" அளவுக்கு மீறிப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆண் வேஷங்களைத் தாங்குவதற்கு பொருத்தமாக சில ஆண்களுக்கு இடமளிப்பது நல்லது. "மீனாக்ஷி கல்யாணம்" என்ற நிரலுக்கு ஏ. ஆர். பாலசுப்ரமண்யம் அமைத்திருந்த பாட்டுகள் அபிநயத்திற்கு ஏற்றவாறு அர்த்த புஷ்டியுடன் அமைந்திருந்தன.

உமா சகோதரிகள்

"நக்ஷத்திரங்களை பிரமாதப்படுத்தாதீர்!"

சென்னை ஆசிரியர்களுக்கு தேவகி போஸ் உபதேசம்

"ரத்ன தீபம்" என்ற படத்தை வங்காளி, ஹிந்தி, தமிழ் ஆகிய பாஷைகளில் தயாரித்திருக்கும் பிரபல அ. இ. டைரெக்டர் தேவகி போஸ் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, சென்ற மாதம் 21-ந் தேதியன்று சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் சென்னைப் பத்திரிகாசியர்களைச் சந்திப்பதற்காக ஒரு சிற்றுண்டி விருந்தளித்தார். இவ் விருந்திற்கு பத்திரிகாசிரியர்கள் மட்டுமன்றி, சில படாதிபதிகளும், டைரெக்டர்களும் கூட வந்திருந்தனர்!

விருந்திற்குப் பிறகு, ஸ்ரீ. போஸ் பேசுகையில், சினிமாத் தொழிலில் படமுதலாளிகள், நக்ஷத்திரங்கள் போன்றோருக்கும் இதர ஊழியர்களுக்கும் ஊதியத்தில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசங்களிருக்கின்றன வென்றும், தொழிலின் ஒரு பகுதியினர் அளவுக்கு அதிகமான ஊதியம் பெற்றுப் பணத்தைக் குவிக்கின்றனர் என்றும், பெரும் பகுதியினர் தினசரி வாழ்க்கை நடத்துவதற்குக்கூடப் போதிய ஊதியமின்றித் தவிக்கின்றனர் என்றும், இந்த அடாத நிலைமை சீக்கிரமாய் மாறி இத் தொழிலில் உள்ள அனைவரும் சந்தோஷமுறும் நிலைமை ஏற்படவேண்டும் என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "பத்திரிகைகள் நக்ஷத்திரங்களின் போட்டோக்களையும் செய்திகளையும் நிறைய வெளியிட்டு அவர்களை உன்னத ஸ்திரீ புருஷர்களாக நம் குழந்தைகளின் மனதில் சித்தரித்து விடுகின்றன. இதனால் நம் வீட்டுச் சுவர்களில் ராமர் கிருஷ்ணர், அசோகர் போன்ற மஹான்களின் போட்டோக்களுக்குப் பதில் சினிமா நக்ஷத்திரங்களின் போட்டோக்களே நிரம்பியிருக்கின்றன. நம் குழந்தைகளின் மனது தவறான வழியில் திரும்பிவிட்டால் அவர்கள் உருப்படுவது சாத்தியமேயில்லை. ஆதலால், நம் குழந்தைகள் கடவுள்களையும், மஹான்களையும் மறந்துவிட்டு, சினிமா நக்ஷத்திரங்களையே கடவுள்களாக கருதும் நிலைமை ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை பத்திரிகைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

எதிர்பாராத விதமாய், ஒரு சினிமா டைரெக்டரின் வாய் மூலம் இந்த 'திடுக்கிடும் அபிப்பிராயங்களை'க் கேட்டதும் கூடியிருந்தவர்களிடையே ஆச்சரியம் ஏற்பட்டது. பலர் ஸ்ரீ. போஸிடம் கேள்விகள் கேட்டனர், அவரும் பதில் சொன்னார். பிறகு டைரெக்டர் கே. ராம்னாத் வந்திருந்தோரின் சார்பாக ஸ்ரீ. போஸுக்கு வந்தனம் கூறினார்.

பஸ் முதலாளிமீது வழக்கு?

பாலக்காடு கே. எம். எஸ். பஸ் சர்வீஸைச் சேர்ந்த ஸ்ரீ. மாரப்ப கவுண்டர், சமீபத்தில் பக்ஷிராஜா ஸ்டுடியோவிற்கு லலிதா பத்மினியின் தாயாரான ஸ்ரீமதி ஸரஸ்வதி அம்மாளைப் பார்க்கச் சென்றதாகவும், இரவு நெடு நேரமாகி விட்ட

ஜவுளிகளின் சிகரம்

ஒரே விலை விற்பனை

ராதா ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு :: கும்பகோணம்.

தால், ஸ்டுடியோ காவல்காரன் உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டதாகவும், அதன்பேரில் ஸ்ரீ. கவுண்டரும் அவருடனிருந்த மற்ற இருவரும் காவல்காரனை தாக்கியதாகவும் போலீஸார் வழக்குத் தொடர்ந்துள்ளதாகத் தெரிகிறது. குற்றம் சாட்டப் பட்டுள்ளவர்கள் கைது செய்டப் பட்டு, பிறகு ஜாமீனில் விடப் பட்டுள்ளார்கள்.

இந்த சம்பவம் நடந்த தினத் தன்று இரவே டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமி தங்கியிருந்த 'உட் லண்ட்ஸ்' ஹோட்டலுக்குச் சென்று, அவரையம் மாரப்ப கவுண்டர் தாக்கியதாகவும், லலிதா பத்மினி நடிக்கும் படங் களை டைரெக்ட் செய்தால் மேலும் தொந்திரவு கொடுக்சப் போவதாக மிரட்டியதாகவும் போலீஸார் குற்றம் சாட்டியுள் ளதாகத் தெரிகிறது.

தேவகி போஸின் தயாரிப்பான "ரதனதிபம்" தமிழ்ப் படதில கதாநாயகியாய் நடிககும மஞ்சு டே.

ரோஹிணியின் முயற்சி

பல வருஷங்களுக்கு முன் திரை யிடப்பட்டு, அமோக ஆதரவைப் பெற்ற "கிருஹலக்ஷ்மி" தெலுங்குப் படத்தை டைரெக்டர் எச். எம். ரெட்டி தமிழ், ஹிந்தி இரு பாஷைகளிலும் தயாரிக்கத் தீர்மானித்திருக்கஞர். சககிரமே அவரது ரோஹிணி ஸ்டுடியோவில் இப்படங்களின் வேலை ஆரம்பமாகும். இப்படங்களில் அஞ்சலி தேவி, ரங்கா ராவ், சாவித்திரி மூவரும் நிச்சயம் நடிப்பார்களென்றும் செய்தி எட்டுகிறது.

மெஹ்பூப்பின் "ஆன்"

டைரெக்டர் மெஹ்பூப்பின் "ஆன்" படம் திரையிடத் தயாராகி விட்டது. பல வருஷங்கள் சிரமப்பட்டு. ஏராளமான பொருட்செலவில் இதை ஒரு டெக்னிக் கலர்ப் படமாகத் தயாரித் திருக்கிருர் டைரெக்டர் மெஹ்பூப் இப் படத்தை, "கம்பதாஸன்", எஸ். பி. ராமய்யா இருவரின் முயற்சியினலும் தமிழாக்கி யிருக்கிருர். தமிழ்-ஹிந்திப் படங்களின் பிரதிகள் இங்கிலாந்தில் தயாராகிக் கொண்டிருக்கின்றன, அவை இம் மாதம் முதல் வாரத்தில் கிடைத்து விடுமாம். திலீப் குமார், நிம்மி, பிரேம் நாத் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ளனர் சங்கீத டைரெக்டர் நவுஷத் இதுவரை வெளிவந்துள்ள எந்தப் படத்தையும்விட சிறந்த சங்கீதத்தை அமைத்துக் கொடுத்திருக்கிருராம். இப் படத்தின் ஹிந்திப் பதிப்பு-ஆங்கில டைட்டில்களுடன்-லண்டன் ரியால்டோ தியேட்டரில் இம் மாசம் 18ம் தேதி முதல் திரையிடப்படும் என்றும், இந்தியா வெங்கும் ஆகஸ்ட் முதல் தேதியன்று திரையிடப்படும் எனவும் தெரிகிறது.

ஜூன் வெளியீடுகள்

சென்ற மாதம் இரு புதுப் படங்கள் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ளன. மாடர்ன் தியேட்டர்ஸாரின் "கல்யாணி" சென்ற மாதம் 21ம் தேதயும், ராகினியின் "தர்ம தேவதா" (நாராயணன் கம்பெனி வெளியீடாக) 28ம் தேதியும் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரை

யிடப் பட்டுள்ளது. ஆச்சார்யா—மஸ்தான், இவ்விருவரது டைரெக்ஷனில் உருவாகியுள்ள "கல்யாணி"யில் வசனங்கள் ஒரு சிறந்த அம்சமாக இருக்கிறதாம். எம். என். நம்பியார், பி. எஸ். சரோஜா, எம். சரோஜா, பாலசுப்ரமண்யம் ஆகியவர்கள் நடிக்கும் இப் படத்தில், காருணேதி-முத்துலக்ஷ்மி ஹாஸ்ய ஜோடி ஒரு கலகலப்பை உண்டு பண்ணுகிறார்களாம்.

பஞ்ச நிவாரண நிதிக்காக நாடகம்

மைலாப்பூர் சாரதா நாடகசபையினர் ரவீந்தரரின் 'சித்ரா" என்ற நாடகத்தை நடத்தி, அதன் மூலம் வசூலாகும் தொகையை ராயலசீமா பஞ்ச நிவாரண நிதிக்கு அளிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். இந்த நாடகம் ஆகஸ்ட் மாதம் 9ந் தேதியன்று மைலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெறும்.

அ. இ. சினிமா மகாநாடு

ஜுலை மாதம் 7ந் தேதியன்று பம்பாயில் அகில இந்திய சினிமா மகாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பிலிம் விசாரணைக் கமிட்டி செய்துள்ள சிபார்சுப்படி வரிகளைக் குறைக்கும்படி சர்க்காரை வற்புறுத்துவது பற்றியும், சினிமா விஷயங்களில் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் தாங்களே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுவது பற்றியும், மற்றும் தொழில் சம்பந்தமான இதர கஷ்டங்களைப் பற்றியும் இம் மகா நாட்டில் விவாதிக்கப்படுமாம்.

நறுமணத்தில் நிகரற்றது!

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு,
பி. டி. சென்னை.
கிளை: 82 காக்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
89 பாண்டி பஜார், தி. நகர், சென்னை—17.

தியேட்டர்களுக்கு புதுச் சட்டம்

பார்லிமெண்டின் சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 1952-ம் வருஷத்திய சினிமாச் சட்டம் 1952 ஜுலை 28ம் தேதி முதல் அமுலுக்கு வரும். அச்சட்டத்தின் 3வது பகுதி பிரிவு ராஜ்யங்களுக்கு மாத்திரமே பிரயோகமாகிறது. அது சினிமாக்களை ஒழுங்கு படுத்துவது, அவைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது பற்றிய பகுதியாகும். "ஏ", "பி" பிரிவு ராஜ்யங்களுக்கு இந்திய சர்க்கார் அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் இந்த 3வது பாகத்துக்குப் பொருத்தமான புதிய சட்டங்களை இயற்றிக் கொள்ளும்படி கேட்டிருக்கிறார்கள். அப்படி இயற்றப்படும் சட்டங்களில், 1918ம் வருஷத்திய சினிமாச் சட்டத்தை அல்லது அதற்கும் ஒப்பான முந்திய ராஜ்ய சட்டத்தை ரத்து செய்யும் பகுதியொன்று இருக்கும், சினிமாக்களை ஒழுங்குபடுத்துவது, அவைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது ஆகியவை சம்பந்தமான ஷரத்துகள் மட்டுமே அந்தப் பழைய சட்டங்களிலிருந்து ரத்தாகும். ஹைதராபாத் ஏற்கனவே இந்தச் சட்டத்தை இயற்றி விட்டது. ராஜஸ்தான் அத்தகைய சட்டத்தை இயற்றுவதாக ஒப்புக்கொண்டு விட்டது மத்திய சட்டத்துக்கும் ராஜ்ய சட்டத்துக்கும் வித்தியாசம் தெரியும்படியும், இதே விஷயப்பற்றிய இரு சட்டத்தையும் "சினிமாக்கள் (ஒழுங்குபாடு) சட்டம்" என்று குறிப்பிடுமாறும் ராஜ்ய சர்க்கார்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சபா நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 22-ம் தேதி, மயிலை ரஸிக ரஞ்சனி சபாவின் ஆதரவில் மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

சமீபத்தில் சென்னையில் படாதிபதிகள் விநியோகஸ்தர்கள் முதல் மகாநாடு கூடியபோது எடுத்த படம்.

சென்ற மாதம் 5-ம் தேதியன்று வெகு சிறப்பாக நடத்தினர். மணமகன் சிரஞ்சீவி. அண்ணாமலை.

பிரபல சைத்ரிகர்களான பானு பிரதர்ஸில், மூத்த சகோதரரின் புத்திரி சௌ. சகுந்தலா, அவர்களது மாமன் மகனான ஸ்ரீ. வெங்கடராமனைத் தம் வாழ்க்கைத் துணைவராகப் பெற்றார். அன்றைய தினமே அவர்களது புதிய இல்லமான 'ஓவிய நிலய'த்தில் கிரஹப் பிரவேசமும், இளைய பாகஸ்தரான ஓவியர் ஸ்ரீ. சீனுவின் பெண் குழந்தை லோகாமிர்தத்துக்கு கர்ண பூஷணமும் நடந்தது.

அதே தினத்தில் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி சபாவின் ஆதரவில் அரியக்குடி ராமானுஜய்யங்காரின் கச்சேரி நடந்தது. பாப்பா வெங்கடராமய்யா பிடிலும், பாலக்காட்டு மணி ஐயர் மிருதங்கமும் பக்க வாத்தியம் வாசித்தார்கள்.

அன்றே, தாம்பரம் சங்கீத சபா ஆதரவில் குமாரி என். ராஜத்தின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. அன்று அவருக்கு அநுசரணையாக கோமளவல்லி ஸ்ரீநிவாஸன் பிடிலும், திருச்சி ராகவன் மிருதங்கமும் வாசித்தனர்.

ஜூன் மாதம் 29-ம் தேதியன்று, ரஸிக ரஞ்சனி சபாவில் மாயவரம் ராஜத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது,

மிருதங்க அரங்கேற்றம்

சென்ற மாதம் 8ம் தேதி மகேஷ், கிருஷ்ணா என்ற இரு சிறுவர்களின் மிருதங்க அரங்கேற்றம் சென்னையில் நடைபெற்றது. ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபையின் ஆதரவில் அன்று நடைபெற்ற எம். ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதரின் இன்னிசைக் கச்சேரிக்கு மேற்படி சிறுவர்கள் மிருதங்கம் வாசித்தனர். இவர்கள் மெலட்டூர் ராமச்சந்திரனின் சிஷ்யர்களாவர்.

வாழ்த்துகிறோம்

மதராஸ் பிக்சர்ஸின் உரிமையாளர் ஏ. எஸ். ஸ்ரீநிவாஸன் தமது சகோதரி சௌ. சிவகாமியின் திருமணத்தை,

'கலை', 'ஸ்டேஜ் அண்டு ஸ்க்ரீன்' பத்திரிகைகளின் ஆசிரியை ஸ்ரீமதி சரஸ்வதி பாசுவின் தம்பி சிரஞ்சீவி ஏ. பி. சம்பத், சௌ. ஆண்டாக்கண்ணு அம்மாளை, சென்ற மாதம் 4-ம் தேதி, தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ. என். ராஜரத்னம், சென்ற மாதம் 5-ம் தேதி சௌ. டி. எஸ். கமலாவைத் தம் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார்.

மதுரை "சொர்ண மஹால்" முதலாளி ஸ்ரீ. ஆர். எம். ஏ. கஸ்தூரிரங்கன் செட்டியார் தமது சகோதரன் மகன் ஸ்ரீ. மாதவனின் திருமணத்தை, மதுரையில் சென்ற மாதம் 12ம் தேதி முதல் நான்கு நாட்கள் வெகு சிறப்பாக நடத்தினர். மணமகள் சௌ. ஜானகி, மதுரையில், பிரபல வைர வியாபாரியான ரத்தினம் செட்டியாரின் மகள்.

நமது ரங்கூன் ஏஜண்ட் ஸ்ரீ. கே. எம். சபாபதி முதலியார் தமது மகன் சிரஞ்சீவி வேதாசலத்திற்கு, சௌ. நாகம்மாளைத் திருமணம் செய்து வைத்தார். சென்ற மாதம் 17ம் தேதி, நாகையில் நடைபெற்றது இந்த விவாகம்.

எழுத்தாளர் பி. எம். கண்ணன் தம் புத்திரி சௌ. ரத்னாவிற்கும் சிரஞ்சீவி எஸ். சம்பத்திற்கும் சென்ற மாதம் 29-ந் தேதியன்று சென்னையில் திருமணம் நடத்தி வைத்தார்.

பிரம்மலோகம்

ஜெயந்தி புரொடக்‌ஷன் ஸாரது படப் பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் ஆரம்பமாகி விட்டது. இவர்கள் தயாரித்து வருவது "கல்கி" எழுதிய "பொய்மான் கரடு" என்னும் கதை. அஞ்சலி தேவி, மனோஹர், டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி ஆகியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. டி. கிருஷ்ணசாமி டைரெக்ட் செய்து வருகிறார். சமீபத்தில் திருப்பூரில் நடைபெற்ற மாட்டுச் சந்தையை படத்திற்கென படமாக்கி யிருக்கிறார்களாம். இப்படம் தெலுங்கிலும் தயாரிக்கப்படும் என்று தெரிகிறது.

பெண்

ஏவி.எம். மின் "பெண்" மூன்று பாஷைகளிலும் வளர்ந்து வருகிறது. இப்படத்தில் வைஜயந்திமாலா குதிரை சவாரிகூட செய்கிறாராம்! எம். வி. ராமனின் டைரெக்‌ஷனில் தயாராகும் இப்படங்களில் வைஜயந்திமாலா, அஞ்சலி, கணேசன், எஸ். பாலசந்தர், நாகய்யா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

வளையாபதி

மாடர்ன் தியேட்டர்ஸாரின் "வளையாபதி" அவர்களது அடுத்த வெளியீடாக இருக்கும். டி. ஆர். சுந்தரத்தின் டைரெக்‌ஷனில் இப்படம் துரிதமாகத் தயாராகி வருகிறது. கே. மாலதி பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தில் அவருடன் கூட நம்பியார், எம். எஸ். எஸ் பாக்கியம் ஆகியோர் நடிக்கின்றனர். இப்படத்தில் சேர்க்கப்படுவதற்கென பல அருமையான வெளிப்புறக் காட்சிகளை திருவனந்தபுரம் சென்று தயாரித்து வரப் போகிறார்களாம்.

வஞ்சம்

ரோகிணியின் "வஞ்சம்" அவர்களது ஸ்டுடியோவில் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் படமாகிவருகிறது. "ஜாவர்" சீதாராமன் எழுதியுள்ளது இக் கதை. முதன் முறையாக கே. சாரங்கபாணி தெலுங்குப் படத்தில் தாமே பேசி நடித்திருக்கிறார். கிரிஜா, சாவித்திரி, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் காந்தா ராவ், ராஜநலா என்ற இரு புது முகங்கள் முறையே கதாநாயகனாகவும், வில்லனாகவும் நடிக்கின்றனர்.

புதுவாழ்வு

ஸர்வோதயா பிக்சர்ஸாரது "புதுவாழ்வு" நியூடோனில் கால் பகுதி படமாகிவிட்டது. பாகவதர். மாதுரி தேவி, லலிதா, துரைராஜ் இவர்கள் முக்கிய பாகங்களில் நடிக்கும் இப்படத்தின் கதையே புது மாதிரியாக இருக்குமாம். பட்டணத்திற்கு வரும் ஒரு கிராமத்தானாக பாகவதரும், அசட்டுச் சிநேகிதனாக துரைராஜும் ரொம்ப இயற்கையாக நடித்திருக்கிறார்களாம்.

சொர்க்கவாசல்

மனோகர் – பரிமளாவின் கூட்டுத் தயாரிப்பான "சொர்க்கவாசல்" துரிதமாய் வளர்ந்து வருகிறது. காசிலிங்கம் டைரெக்‌ஷனில். கே. ஆர். ராமசாமி, இப்படத்தில் ஒரு கவிஞனாக வருகிறார். மற்றும் அஞ்சலி, வீரப்பா, லூஸ் ஆறுமுகம் ஆகியவர்கள் நடிக்கும் இப் படத்திற்கான வசனங்களை சி. என். அண்ணாதுரை எழுதியிருக்கிறார். இப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாராகி வருகிறது.

சின்னதுரை

நடிகர் டி. ஆர். மஹாலிங்கத்தின் டைரெக்‌ஷனில் வளர்ந்து வரும் அவரது "சின்னதுரை" முக்காலே மூணுவீசம் உருப்பெற்று விட்டதாம். அடுத்த மாதம் பவனிக்குக் கிளம்பி விடுமெனத் தெரிகிறது. மஹாலிங்கம் இப்படத்தில் இரு வேஷங்களில் தோன்றி நடித்திருக்கிறார். மற்றும் எஸ். வரலக்ஷ்மி, வி. கே. ராமசாமி, ஜி. சகுந்தலா. எஸ். ஆர். லக்ஷ்மி, சந்திரபாபு, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சியாமளா

தியாகராஜ பாகவதர்–எஸ் வரலக்ஷ்மி ஜோடி நடிக்கும் புவா பிக்சர்ஸாரின் இப்படம் ஸெப்டம்பர் மாதம் திரையிடப்

படும். இப்படத்திற்கென கனவுக் காட்சியொன்றை பிரமாதமான முறையில் படம் பிடித்திருக்கிறார்களாம்.

பெற்ற மனம்

டைரெக்டர் பிரசாத்தின் சொந்தப் படமான "பெற்ற மனம்" அவரது டைரெக்ஷனில் வாஹினியில் உருவாகி வருகிறது. இப்படத்தில் நல்லதொரு பாகத்தில் அவர் நடிக்கவும் செய்கிறார். ஜெமினியின் அனுமதி பெற்று புஷ்பவல்லி இப்படத்தில் பிரதான பாகத்தில் நடித்து வருகிறார்.

இன்ப வீடு

பிரபல பின்னணிப் பாடகர் "கண்டசாலா" புதிதாய் தொடங்கியிருக்கும் அவரது சொந்தக் கம்பெனியான ஷோபா பிலிம்ஸ் "இன்ப வீடு" என்ற படத்தைத் தயாரிக்கும். இப்படத்தில் ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, ரேலங்கி ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் பின்னணிப் பாட்டுகளை கண்டசாலாவும், பி. லீலாவும் பாடுவார்களாம்.

பஷீரின் தமிழ்ப் படம்

நடிகர் ஜி. எம். பஷீர், "ஜி. எம். பி. புரொடக்ஷன்ஸ்" என்ற பெயருடன் ஒரு படக் கம்பெனியை கோயமுத்தூரில் ஆரம்பித்திருக்கிறார். இவர்கள் தங்கள் முதல் படத்தின் ஆரம்ப விழாவை சென்ற மாதம் 29-ந் தேதியன்று தங்கள் காரியாலயத்தில் கொண்டாடினார்கள்.

கல்யாணம் பண்ணிப்பார்

விஜயாவின் "கல்யாணம் பண்ணிப்பார்" ஆகஸ்டு 15ம் தேதி திரையிடப்படலாமெனத் தெரிகிறது. பிரசாத் டைரெக்ஷனில் தயாராகியுள்ள இப்படத்தின் நகாசு வேலைகள் நடைபெற்று வருகின்றன. என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷ்மி சாவித்திரி, டி. என். மீனாக்ஷி போன்ற பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கும் இப்படம் ஒரே தமாஷாக இருக்குமாம்.

நடனம் ஆடி முடித்தபின், "நான் ஆடியது எப்படி?" என்று பி. ஆர். பந்துலு, டி. கே. ராமச்சந்திரன் இவர்களிடம் ஸி. ஆர். ராஜகுமாரி கேட்கிறாரோ?—"சின்னதுரை" தமிழ்ப்படத்தில்.

ஆர். கண்ணனின் இசைத்தட்டு

சென்னை ரேடியோவில் அடிக்கடி பாடிப் புகழ் பெற்றுவரும் ஸ்ரீரங்கம் ஆர் கண்ணனின் இரு பக்திரஸப் பாட்டுகளை கொலம்பியா கம்பெனியார் (ஜி ஈ 22010 நம்பருள்ள) இசைத்தட்டில் பதிவு செய்து வெளியிட்டிருக்கின்றனர். "எந்தன் ஜீவனே", 'ஓர் உபாயம்" ஆகிய இவ்விரு பாட்டுகளையும் பொருத்தமுள்ள இரு பிரபல ஹிந்தி மெட்டுகளில் பாவம் ததும்பும் வண்ணம் பாடியிருக்கிறார் ஸ்ரீ. கண்ணன். அவரது நயம் மிகுந்த குரல் ஒலிப் பதிவிற்கு மிகவும் பொருத்தமாய் இருக்கிறது.

'எந்தன் ஜீவனே" என்ற பாட்டில் 'காருண்ய வேலா, பார்வதி பாலா' என்று அவர் குழைவுடன் பாடும்போது. "ஆஹா!"... என்று கூறவேண்டியிருக்கிறது. இந்த இசைத்தட்டு ஸ்ரீ கண்ணனை சினிமாவில் பின்னணிப் பாடகராக்கி வைத்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நான்கு ரூபாய் விலையுள்ள இந்த இசைத்தட்டு சென்னை சரஸ்வதி ஸ்டோர்ஸிலும், இதர கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.)

பட உலகில் புது முயற்சிகள்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கே. எஸ் எஸ். பிக்சர்ஸாரும், ஜோதி பிரகாஷ் புரொடக்ஷன்ஸாரும் கூட்டாகச் சேர்ந்து 'சமஸ்யா" என்ற கதையைத் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். படங்களை வி. கே. சாச்சி டைரெக்ட் செய்வாரென்றும், படங்கள் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாராகுமென்றும் தெரிகிறது.

வில்லன் நடிகர் பாலய்யாவும் படாதிபதிகள் வரிசையில் சேர்ந்து விட்டார். ஆண்டவர் புரொடக்ஷன்ஸ் படக் கம்பெனியை அவர் தம் சொந்தத்தில் ஆரம்பித்திருக்கிறார். கம்பெனியின் முதல் படமாக "கன்னி"யைத் தயாரிக்கப் போகிறாராம். படத்தை எல்லிஸ். ஆர். டங்கன் டைரெக்ட் செய்வாரென்றும், பிரதம பாகங்களில் நாகய்யா, பாலய்யா, ஜெயசௌரி ஆகியோர் நடிப்பார்களென்றும் தெரிகிறது. "கன்னி"யின் கதை-வசனம் கரூர் ஏ. கே. ராமண்ணாவால் எழுதப் படுகிறதாம்.

சென்னையில் புதிதாக ராணி பில்ம்ஸ் என்ற படக் கம்பெனி தோன்றியுள்ளது. இதில், சுவடி நகர், உடையார் பாளையம் ஜமீன்தார்கள் பங்குதாரர்களாம். கே பி. கணேசன் என்பவர் இக் கம்பெனியின் மானேஜிங் டைரெக்டர். இக் கம்பெனி சீக்கிரமே கோடம்பாக்கத்தில் சொந்த ஸ்டுடியோவை ஆரம்பிப்பார்களாம்.

ஆனந்தா பிக்சர்ஸார், "மேலு கோலுப்பு" (விழிப்பு) என்ற தெலுங்குப் படத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டு இருக்கின்றனர். இந்த படம் தமிழிலும் தயாரிக்கப்படுமாம். படங்கள் பிரகாஷ் ராவ் டைரெக்ஷனில் தயாராகும் படங்களில் என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷ்மி, எம். என். நம்பியார் ஆகியோர் பிரதம பாகங்களில் நடிப்பார்களாம்.

புதிதாகத் தோன்றியுள்ள ஸ்ரீ த... புரொடக்ஷன்ஸ் என்ற படக் கம்பெனியார். ஜி. கார்த்திகேயன் என்பவர் எழுதியுள்ள 'குற்றவாளி'யைப் படமாக்கப் போகிறார்களாம். பாட்டுகளை ஏ. ஆர். பாலசுப்பிரமணியன் எழுதுவாராம். படத்திற்கான நடிகர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறார்களாம்.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1 Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 16, Godown St. Madras

ஜூன் 28உ முதல்
தமிழ் நாடெங்கும்
ராகினியின்
தர்ம தேவதா
டைரக்ஷன்
P. புல்லையா, B.A.
சாந்தகுமாரி..லலிதா..கிரிஜா
லக்ஷ்மிப்ரபா..லிங்கமூர்த்தி...
முக்காமலா..ரேலங்கி..கௌசிக்
நாராயணன் கம்பெனி ரிலீஸ்

இப்பொழுது நடைபெறுகிறது

பரணியின்

காதல்

தமிழ்

பானுமதி..நாகேஸ்வர ராவ்..

சென்னை

ஸ்ரீ கிருஷ்ணா—கெயிட்டி—ஸயானி

மற்றும் தமிழ்நாடு, மலபார் முழுவதும்.

பூரண உரிமையாளர் :

G. P. பிலிம்ஸ், பொரையார்.

BALU BROS